Registered as a News Paper in Sri Lanka

පක්කම් 24 ரூபா 20.00

දිනමුරසු වාරමලර්

ஏப். 27 - மே.03, 2006

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 659




## ஜெனீவாவிலும் வெடிக்கப் போகிறது வடக்கு, கிழக்கு வன்முறைகள்!

## தமிழ் மக்களின் இடப் பெயர்வு அதிகரிக்கப் போகிறது!

## சூடு பிடிக்கும் தமிழக தேர்தல் களம்

## வீதி போவோம்; ரசிப்போம்!

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு


# ஆன்மீகம்

## புண்ணியம்

**புண்ணியத்தால்** பொருளைத் தேடு. மனைவி, மக்களுக்குப் பொருளைத் தேட வேண்டியதுதான். அதற்காக பொய்யையும், வஞ்சனையையும் செய்து பொருளைத் தேடக் கூடாது. அப்படித் தேடிய பொருள் உன் மனைவி, மக்களுக்குத் தீமையையே விளைவிக்கும். அதனால் வரும் பாவ மூட்டை. உடம்பை விட்டு உயிர் போன பின் தொடர்ந்து வருவது நாம் செய்த பாவமும், புண்ணியமும். தகாத வழிகளில் பொருள் தேடுவதை விட, புண்ணியமான வழிகளில் தேடுவது நல்லது.

**-என்.மாலதி, புத்தளம்.**

## விசுவாசம்



"இதோ, நான் மாமிசமான யாவருக்கும் தேவனாகிய கர்த்தர்; என்னாலே செய்யக் கூடாத அதிசயமான காரியம் ஒன்றுண்டோ?" எரேமியா - 32:27.

சகோதரனே, சகோதரியே! உன்னுடைய தேவன் சர்வ வல்லமையுள்ளவர். நீ முழங்கால் மண்டியிட்டு ஜெபிக்கிற தேவனால் ஆகாத காரியம் ஒன்றுமேயில்லை.

ஆனாலும் நாம் ஜெபிக்கிறோம். பலன் குறைவாகவே இருக்கிறது. அது ஏன்? எமது அவிசுவாசமே காரணம். அப்போஸ்தலர்களே ஒருமுறை கர்த்தரை நோக்கி: 'எங்கள் விசுவாசத்தை நிவர்த்திக்கப்பண்ண வேண்டும்' என்றார்கள். லூக்கா - 17:5.

நாம் ஏதோ ஜெபிக்க வேண்டும் என்கிற கடமைக்காக ஜெபிக்கிறோம். தேவனுடைய வல்லமைக்கு ஒரு எல்லை அல்லது ஒரு அளவுக்குள் மதிப்பிட்டு விட்டு சோர்ந்து போய்விடுகிறோம். தேவனிடம் ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்வதற்குப் பதிலாக மனிதர்களை நாடி ஓடுகிறோம்.

"என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன்". யோவான் - 14:14.

இது எம்முடைய கர்த்தருடைய வாக்குத் தத்தம். இது சத்தியமானது. மாறாதது.

நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். "எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன்" என்று வாக்குரைத்தவர் கட்டாயம் அப்படியே செய்வார் என்று விசுவாசியுங்கள். அவரை விசுவாசிப்பது சரியானது. ஆனால் அவருடைய வாக்குத்தத்தங்களை நாம் விசுவாசிக்கிறோமா?

'ஆண்டவரே உம்மையும், நீர் எங்களுக்குத் தந்தருளின வாக்குத்தத்தங்களையும் விசுவாசிக்க உதவி செய்தருளும். எங்கள் விசுவாசத்தை நிவர்த்திக்கப் பண்ணும். எங்கள் அவிசுவாசம் நீங்க உதவி செய்தருளும் சுவாமி' என்று ஜெபிப்போமாக. ஆமென்.

**-தெல்தெனிய சகோ. போல்.**

## அல்குர்ஆன் கூறும் வியாபார விதிமுறை

இன்று நாம் செய்யும் வியாபாரத்தில் எத்தனையோ மோசடிகளைச் செய்து பாவனையாளர்களைப் பாதிப்புக்குள்ளாக்குகிறோம். வியாபாரத்தில் வாங்குபவருக்கும், விற்பவருக்கும் இடையே ஓர் உடன்பாடு இருத்தல் அவசியம். மாறாக வாங்குபவரை வஞ்சித்து, விற்பவர் பொருள் சம்பாதிப்பதை அல்குர்ஆன் பின்வருமாறு கூறுகிறது:

நம்பிக்கை கொண்டவர்களே! உங்களுக்குள் ஒருவருக்கொருவர் சம்மதித்து நடத்தும் வியாபாரத்தின் மூலமாயன்றி உங்களில் ஒருவர் மற்றவரின் பொருளை தவறான முறையில் தின்றுவிடாதீர்கள்.

அல்குர்ஆன் 4:29

ஆம். அல்குர்ஆன் கூறும் வியாபார விதிமுறை இதுதான். வியாபாரம் என்பது ஒருவருக்கொருவர் கலந்து உறவாடி கூட்டாக நிகழ்த்த வேண்டிய ஓர் சமூகப் பணி இதில் எப்பொழுதும் பிறர் நன்மையில் கவனம் செலுத்தியவர்களாக வியாபாரிகள் இருத்தல் வேண்டும்.

**-எம்.சீ.கலீல், கல்முனை - 05.**

## கவிதைப் போட்டி இல.656



பரிசுக்குரிய கவிதை

### என்னத்தைக் கண்டோம்!

கடதாசி பொறுக்கித்தானே...
பெரியவனைக்
கலாகூடம்
அனுப்பிவைத்தேன்.
இன்று -
என்னத்தைப்
பொறுக்கினாலும்...
சின்னதுகளின்
மிட்டாய்ச்
செலவுக்குங் கூடக்காணா!

-ஹானி அமானி,
காத்தான்குடி - 06.

## கவிதைப் போட்டி இல.659



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 04.05.2006.

கவிதைப் போட்டி இல.659
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### நடுத்தெருவில்

உன்னைப் பெற்றவர்
உலகைப் பிரிந்தார்
நீ பெற்றவர் உன்னை
நடுத்தெருவில் விட்டனர்
இதுதான் அம்மா
இன்றைய உலகு.

*-எச்.ஹம்சியா, பெரிய நீலாவணை.*

### ஏன் இந்த நரை

யானைக்கும் நரை இல்லை
காக்கைக்கும் நரை இல்லை
மனிதனுக்கு மட்டும் ஏன் இந்த நரை?
அது தான் எமன் மனிதனுக்கு
அனுப்பியிருக்கும் வக்கீல் நோட்டீஸ்.

*-ரா.புஸ்பவாணி, கொழும்பு - 15.*

தவமிருந்து ஈன்றெடுத்த
தம் குழந்தைகளின்
நாகரீக மோகத்தால்
நடுத்தெருவே எனது
அடைக்கலமாகிவிட்டது!

*-கியாஸ் எம்.மிப்றாஸ், மூதூர் - 07.*

### உழைப்பால் உயர்வு

வறுமை தந்த பாடம் ஓயாத உழைப்பு.
ஏன் இந்தக் களைப்பு.
மனதில் வரவேண்டும் பொறுப்பு.
உழைப்பால் கிடைப்பது மதிப்பு.

*-ஏ.சீ.ஷர்மிளா, வத்தளை.*

### அலைச்சல்

ஊழல் வாதிகளின்
சட்டப்பைகளே
நிறைந்தது.
ஜீவனோபாய
உதவித் தொகையோ
நாயாய் அலைந்தும்
இன்னும்
உருப்படியாய்
கிடைக்கவில்லை.

*-கேக்கே டீன், ஏறாவூர் - 02.*

"உழைப்பு
சப்பி துப்பிய
முதுமைத் தாய்,
பிள்ளைகளால்
தொல்லைகளால்
பேதையாகி,
பாதைக்கு வந்துவிட்டாளோ?"

*-நா.ஜெயபாலன், பிபிலை.*

### தாய்மை

உன் பணியால்
உயர்ந்து விட்ட
பிள்ளைகளால்
தெரு நாயாய்
ஒதுக்கி விட்டதுதான்
பரிதாபம்!

*-அனஸ்சப்றாஸ், மூதூர் - 01.*

பத்து மாதம் சுமந்து
முத்து போல்
பிள்ளைகளைப் பெற்றாலும்
கடைசியில் அவளையே
பட்டினியில் விடுகின்றார்கள்
- பிள்ளைகள்
எம்மக்களிடம் உள்ள
பழக்கத்தில் இதுவும்
ஒன்று.

*-எஸ்.வி.றிச்சாட், கண்டி.*

### தொடர்கதை!

அனாதையாகி
அகதியாகி
ஆயுள் கைதியாகி
ஊர் சேரும்
நாள் பார்த்து
தள்ளாத வயதிலே
ஆச்சி!
பயணம் போகிறா....

*-செ.ஞானராசா,*
*திருகோணமலை.*

### முதலாளி அட்டை

வாக்களிக்க அடையாள அட்டை
மலையேற எங்கள் உடலெல்லாம்
அட்டை
எம் உழைப்பை உறிஞ்சும்
முதலாளி அட்டை.

*-சீ.தங்கவடிவேல், மட்டக்களப்பு.*




## உங்கள் பக்கம்

### தமிழ் மொழி புறக்கணிக்கப் படுவதேன்?

**பல்வேறு** அரச சேவைகளில் தமிழ் மொழி புறக்கணிக்கப்படுகிறது. குறிப்பாக தபால் சேவையில். இதற்கு ஓர் உதாரணமாக கொம்பனித்தெரு தபாலகத்தில் பதிவுத் தபால் சேவையில் விலாசம் தமிழில் எழுதப்பட்டிருந்தால் பதிவு செய்யும் ஊழியர் விலாசத்தைக் காட்டி, அதை சிங்களத்தில் அல்லது ஆங்கிலத்தில் கூறுமாறு சொல்கிறார். தமிழ் மொழியும் சிங்கள மொழியும் அரசகரும மொழிகளாக நடைமுறையிலுள்ள போதும் தமிழ் மொழிக்கு மட்டும் ஏன் இந்த ஓரவஞ்சனை. இது போன்று வேறு பல திணைக்களங்களிலும் இந்த அவல நிலை தொடர்கிறது.

அவசியமான பிரிவுகளிலாவது மும்மொழியும் தெரிந்த ஊழியர்களை நியமிக்க தபால் திணைக்களம் இனிமேலாவது தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா?

**-செ.பிரதீபன், கொழும்பு - 02.**


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):-011 4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk


# வாசகர் சாலை

### கம்பீரம்

அன்பின் தினமுரசே!
பாசமிகு வாரமலரே!
இருபத்திநான்கு
பக்கங்களையும்
இருந்த இருப்பினிலே
நாங்கள்
சுவைத்திடவே!
உனக்கு எத்தனை
இன்னல்கள்
வந்தாலும்
கம்பீரமாய்
வலம் வருகின்றாய்
வாரம் ஒரு முறை
எம்மை
காண்பதற்கு

*ரி.யோகா,*
*கொள்ளுப்பிட்டி.*

*அன்பின் தினமுரசுக்கு*

தமிழ் மக்களின் பிராஜாவுரிமையை - சட்டத்தைக்கொண்டு பல காலமாக நிறுத்தி வைத்திருந்தார்கள் இப்போது பிரஜாவுரிமையற்ற மலையக மக்களுக்குப் பிரஜாவுரிமையும் வாக்குரிமையும் வழங்கும் சட்டத்தை நடமுறைக்குக் கொண்டு வந்ததையிட்டு சந்தோசமும், மகிழ்ச்சியும் அடைகிறோம். மலையகத் தமிழ் மக்களின் இன்னோரன்ன பிரச்சினைகளை வெளிக்கொண்டுவரும் தினமுரசு

இலங்கை வாழ் தமிழர்க்கே ஓர் விடி விளக்கு.

*எஸ்.வி.பெருமாள், கண்டி.*

உண்மைகளை ஒளித்துவிட்டு
கண்டதையும் கண்டபடி கூறி
கலாட்டா பண்ணும்
பத்திரிகையுலகில் உண்மையைக் கூறி
உள்ளத்தை கவர்கின்றாய்....!
உண்மையில் உன்னில்
இதைத்தான் நானும் விரும்புகின்றேன்!
வாசகர்கள் நேசக்கரம்
நீட்டி நிற்கிறோம்
நிமிர்ந்து செல்!
துணிந்து சொல்!

*மனோதீபன், நானுஓயா.*

### வீரத்தின் விளைநிலம் நீயல்லவோ....!

பல்லாயிரக் கணக்கான நேயர்களின் நெஞ்சங்களில்
நிலைத்து நிற்கும் தினமுரசே, நீ 658இல் சுமந்துவந்த
தகவல் பெட்டியின் தகவல்கள் அனைத்தும் என்னைத்
திகைக்க வைத்தது, சுவைக்க வைத்தது.
அதுமட்டுமன்றி
இலங்கை அரசியலில் தணிக்கையாகிப் போகும்
தகவல்களை
துணிவாய் ஏற்று, எங்களுக்கு அறிய வைத்தாய்.
உனக்கு
எனது இதயபூர்வமான நன்றிகள். சுமந்துவரட்டும்
உண்மைகளை. தொடரட்டும் உன் பணி.

*ஆனந்தத்தில் ஒரு அனல்*
*துறைநீலாவணை - 06.*

### மனித குலம் மலைப்பில்!

தினமுரசு அதன் அதிசயத் தகவலைகளையும், மணி மகுடத்தினைச் சூடி நிழற்படச் செய்திகளையும் தந்து, மனித குலத்தை மலைப்பில் ஆழ்த்துகின்ற ஊடகப் பணியில் உயர்ந்து நிற்கிறது.


*எம்.சி.கலீல், கல்முனை - 05.*

## இராணுவத் தளபதி மீதான தற்கொலைத் தாக்குதல்

# சொகுசு வாகனத்தில் வந்த இரு சகாக்கள் தேடப்படுகின்றனர்; சுமார் 50 பேர் விசாரணையில்

இராணுவத் தளபதி லெப்டினட் ஜெனரல் சரத் பொன்சேகாவை குறிவைத்து தாக்குதல் நடத்திய பெண் தற்கொலைக் குண்டு தாரியை சம்பவ இடத்துக்குக் கொண்டு வந்து இறக்கிய சொகுசு காரொன்றினை இராணுவ, பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் தேடி வருகின்றனர். நிறைமாதக் கர்ப்பிணியைப் போல் வேடமணிந்து வந்த இப்பெண்ணோடு இருவர் வருகைதந்த தாகவும் அவர்களும் தற்கொலைக் குண்டுதாரியும் இராணுவத் தலைமையக நுழைவாயிலுக்குச் சற்று அப்பால் மக்களோடு மக்களாய் காத்து நின்றதாகவும் புலனாய்வுப் பிரிவினருக்கு தகவல்கள் கிடைத்துள்ளன. இராணுவத் தலைமைய கத்தில் படையினருக்கான ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களைப் பார்வையிடுவதற்கென வருபவர்கள் காத்திருக்கும் பகுதியில் தற்கொலைக் குண்டுதாரியும் அவரது சகாக்கள் இருவரும் சுமார் அரைமணித்தியாலயத்துக்கு மேலாகக் காத்து நின்றனரென்றும் புலன்விசாரணை களிலிருந்து தெரிய வந்துள்ளது. ஏனை யோருக்குச் சந்தேகம் ஏற்படாதவாறு தேவை யேற்பட்டால் சிங்களத்தில் உரையாடக் கூடியதாகவே அவரது இரு சகாக்களும் கூட்டி வரப்பட்டிருக்கலாமென்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இத்தற்கொலைக் குண்டு தாக்குதலை யடுத்து கொழும்பிலுள்ள பல தங்குமிட விடுதிகள் தேடுதலுக்குள்ளாக்கபட்ட தாகவும் பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகத்தின் பேரில் சில ஆண்களும் பெண்களும் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். தற்கொலைத் குண்டு தாரியை அடையாளம் காணக்கூடிய அவரது தலை கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக் கப்படுகின்றது. கிடைக்கப்பெற்ற தலையும் இரு கால்களும் மரபணு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட விருப்பதாகவும் புலனாய்வு


இராணுவத் தளபதி பயணித்த கார், குண்டுத் தாக்குதலுக்கு இலக்கான நிலையில்....

பொலிஸார் தெரிவித்தனர். தற்கொலைக் குண்டுதாரி, மூன்று நட்சத்திர ஹோட்ட லொன்றில் தங்கியிந்தாரென்று தெரிவி கப்படும் தகவல் தொடர்பாக மேலதி விசாரணைகளைப் பொலிஸார் நடத் வருகின்றனர்.

சில வாரங்களுக்கு முன்னரேயே இ வன்னியிலிருந்து கொழும்புக்கு வரு தந்திருக்க வேண்டுமென்று நம்பும் பு னாய்வுப் பொலிஸார், கைது செய்ய பட்டிருக்கும் இரு இளைஞர்களிடமிருந் பயன்மிக்க தகவல்களைப் பெற முடி மென்றும் நம்பிக்கை தெரிவித்தனர்.

கொழும்புக்கு தற்கொலைக் குண் தாரிகள் ஊடுருவியதுபற்றி ஏற்கனவே இர ணுவப் புலானாய்வு தகவல்கள் தெரிவி திருந்தன. சந்தேக நபர்களைக் கை செய்வதற்காகக் கொழும்பின் நுழைவாயி பகுதிகளில் சோதனை நடவடிக்கைக பலப்படுத்தப்பட்டிருந்தன. இதற்கிடையி சந்தேகத்தின் பேரில் ஐம்பது பே விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகின்றன

## அன்ரன் பாலசிங்கத்துக்கு பிரிட்டன் எச்சரிக்கை

இலங்கையில் புலிகள் இயக்கம் மேற் கொண்டுவரும் படுகொலைகள் மற்றும் வன்செயல் நடவடிக்கைகள் ஆகியவற்றை நிறுத்தாவிட்டால் அந்த இயக்கத்தின் மீது ஐரோப்பிய ஒன்றியம் முற்றுமுழுதான தடையை விதிக்குமென்று பிரிட்டிஷ் வெளி விவகார அமைச்சின் பொதுநலவாய விவகாரங்களுக்குப் பொறுப்பான அதிகாரி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

புலிகளின் தத்துவார்த்தவாதியென்று கூறப்படுபவரும் புலிகளின் பிரதான பேச்சு வார்த்தையாளருமான அன்ரன் பாலசிங்கத் துக்கே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட் டுள்ளது.

கடந்த டிசம்பர் முதல் இவ் வாரம் வரை புலிகள் வடக்கு, கிழக்கில் ஆங்காங்கேயும் அவ்வப்போதும் நடத்திவந்த கிளைமோர் குண்டுத் தாக்குதல்கள் மற்றும் துப்பாக்கிப் பிரயோகங்கள் ஆகியவற்றினால் சுமார் 130 படையினரும் நூற்றுக்கு மேற்பட்ட மக்களும் கொல்லப்பட்டதையடுத்தே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது. படையினர் மீது தாக்குதல் நடத்தி வந்த புலிகள், ஓர் இனக் கலவரத்தைத் தூண்டும் வகையில், அப்பாவிச் சிங்கள மக்கள் மீது தாக்கு தல்களை நடத்தத் தொடங்கியுள்ளனர். திருமலை, கோமரங்கடவலவிலுள்ள பல்லன்பட்டுவ என்ற சிங்களக் குக் கிராமத்தில் ஆறு சிங்கள விவசாயிகளைப் புலிகள் சுட்டுக் கொன்றதையடுத்து, புலிகள் இயக்கத்தைத் தடைசெய்யுமாறு இலங்கை அரசாங்கம், ஐரோப்பிய ஒன்றியத்தையும் உதவி வழங்கும் இணைத்தலைமை நாடு களையும் கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது. திருகோணமலையை மையமாக வைத்து இம் மாத ஆரம்பத்தில் படுகொலைத் தாக்கு தல்களைப் புலிகள் ஆரம்பித்திருந்தனர். திருமலை மரக்கறிச் சந்தையில் நடத்தப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில் நான்கு அப்பாவிச் சிங்கள வியாபாரிகள் கொல்லப்பட்டதன் எதிரொலியாக பல அப்பாவித் தமிழ் மக்கள் சிங்களக் காடையர்களால் கொல்லப்பட்டனர். இதனையடுத்து நிலைமைகளைக் கட்டுப் பாட்டிற்குள் கொண்டுவரும் நோக்கில் கடந்த இரு வாரங்களாகப் பொலிஸ் ஊரடங்கு இரவு வேளைகளில் அமுல்படுத்தப்பட்டு வருகிறது. இச் சம்பவங்களையடுத்து தாக்கு தலுக்கு இலக்காகியும் பீதி காரணமாகவும் ஆயிரக்கணக்கான தமிழ், சிங்களக் குடும்பங்கள் தமது வாழ்விடங்களை விட்டு வெளியேறி பாதுகாப்பான இடங்களில் தஞ்ச மடைந்துள்ளன. இதற்கிடையில் கிழக்கி லுள்ள எல்லைக் கிராமங்களுக்கும் பாதுகாப்புக் கடமைகளுக்கென மேலதிக இராணுவத்தினரும் பொலிஸாரும் அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றனர். ஆனாலும் பொலிஸாரும் இராணுவத்தினரும் செல்ல முடியாத காட்டுப் பகுதிகளூடாகச் சென்று தாக்குதல் நடத்தக் கூடிய நிலையில் புலிகள் இன்னமும் இருப்பதாகப் புலனாய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## அமைச்சர் டக்ளஸ் பணிப்புரை

அரசாங்கமும் புலிகளும் செய்து கொண்ட யுத்த நிறுத்த ஒப்பந்தத்திலுள்ள குறைபாடுகளைப் பயன்படுத்தியே புலிகளின் தற்கொலைக் குண்டுதாரிகளும் புலனாய் வாளர்களும் தாக்குதல் பிரிவினரும் அரச கட்டுப்பாட்டு பகுதிகளுக்குள்ளும், குறிப்பாக கொழும்புக்குள்ளும் ஊடுருவியுள்ளனர். எனவே சந்தேக நபர்களை தேடிப்பிடிப்பதில் பொலி ஸாரும் இராணுவப் புலனாய்வுப் பிரிவினரும் பாதுகாப்புக் காரணங்களுக்காக தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய நிலையேற்பட்டுள்ளது. தேடுதல் நடவடிக்கைகள் அப்பாவித் தமிழ் மக்களை நெருக்கடிக்குள் உள்ளாக்காமல் மிகவும் அவதானமாகவும் நிதானமாகவும் மேற் கொள்ளப்பட வேண்டும் என்று சமூக சேவை கள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் தெரிவித்துள்ளார்.

## புலிகள் மீது முற்று முழுதான தடை; ஐரோப்பிய யூனியன் ஆராய்ந்து வருகிறது

கொழும்பிலுள்ள இராணுவத் தலைமை யகத்தின் கொம்பனித்தெரு நுழைவாயில் பகுதியில் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவைக் குறிவைத்துப் புலிகளின் பெண் தற்கொலைப் போராளி நடத்திய தற்கொலைத் தாக்குதலையடுத்து புலிகள் இயக்கத்துக்கு முற்றுமுழுதான தடை விதிப்பது குறித்து ஐரோப்பிய ஒன்றியம் தீவிரமாக ஆராய்ந்து வருகிறது. கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் முன்னாள் வெளி விவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டதையடுத்து ஐரோப்பிய ஒன்றியம் புலிகள் அமைப்புக்குப் பயணத் தடை விதித்தது. இதனால் இந்த அமைப்பில் அங்கம் வகிக்கும் 25 நாடுகளுக்கும் புலிகளின் பிரதிநிதிகள் பயணம் செய்யத் தடை விதிக்கப்பட்டிருந்தது. இதன் பின்னர் வன்செயல் நடவடிக்கை களைக் கைவிடுமாறு இரு தடவைகள் ஐரோப்பிய ஒன்றியம் எச்சரிக்கை விடுத்திருந்தது. முதல் சுற்று ஜெனீவா பேச்சுவார்த்தைக்கு முன்னர் இடம்பெற்றதை போன்று இரண்டாம் சுற்றுப் பேச்சுவார்த்தை திகதிக்குச் சில வாரங்கள் முன்னதாகவு புலிகளின் படுகொலை நடவடிக்கைக அதிகரித்திருந்தன. இதனால் புலிக இயக்கத்தின் மீது முற்றுமுழுதான தடை விதிக்குமாறு இலங்கை அரசாங்க ஐரோப்பிய ஒன்றியத்தைக் கேட்டிருந்த புலிகள் தமது வன்செயல் நடவடிக்கைக நிறுத்தாவிட்டால் அவர்கள் மீது முற் முழுதாக தடை விதிப்பது குறித்து ஆராய படுமென ஐரோப்பிய ஒன்றியத்தி இலங்கைப் பிரதிநிதி அறிவித்த மறுநாளே இராணுவத் தளபதி மீது குறிவைத்து தற்கொலைத் தாக்குதல் நடத்தப்ப டிருக்கிறது. இதனால் முற்றுமுழுதான தடை விதிக்கப்படும் சாத்தியமிருப்பதா பேச்சாளரொருவர் கூறினார்.

## யாழ்ப்பாணத்தில் உலக வங்கியின் உதவியுடன் வீடுகள் கட்டும் திட்டத்திலும் ஊழல்; மீளாய்வுக்கு உத்தரவு

யாழ். மாவட்டத்தில் போரினால் பாதிக்கப்பட்டு, வீடுகளை இழந்த மக்களுக்கு, உலக வங்கியின் நிதியுதவியுடன் வீடுகளை மீளக் கட்டும் திட்டத்தில் பல முறைகேடுகள் இடம் பெற்றுள்ளதாகப் பல புகார்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. இது தொடர்பாக பாதிக்கப்பட்டவர்கள் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்துக்குக் கொண்டு வந்ததையடுத்து உதவி பெறுபவர்கள் தொடர்பான விபரங்களை மீளாய்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வீடுகளை இழக்காத பலருக்கு நிதியுதவி வழங்க சிபார்சு செய்யப்பட்டிருப்பதாகவும், உண்மையில் பாதிக்கப்பட்டு, வீடுகளை இழந்தவர்கள் புறந்தள்ளப்பட்டிருக்கின்றனரென்றும் அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது. இதனை யடுத்து அமைச்சர் யாழ்.மாவட்டச் செயாலா ளருடன் தொடர்பு கொண்டு இது தொடர்பாக ஆராய்ந்து உரிய நடவடிக்கையெடுக்குமாறு பணிப்புரை விடுத்தார். இதன் எதிரொலியாக யாழ். மாவட்டச் செயலாளரின் தலைமையில் பிரதேச செயலகங்களின் உயரதி காரிகள் கலந்துகொண்ட கூட்டத்தில் நிதியுதவிக்காகச் சிபார்சு செய்யப்பட்டவர்களின் தகுதிகளை மீளாய்வு செய்வதென முடிவெடுக்கப்பட்டது. சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் துணையோடு மீளாய்வு நடவடிக் கைகளை மேற்கொண்டு நிதியுதவி பெறத் தகுதியான வர்களின் பெயர், விபரங்களை சம்பந்தப்பட்ட செயலகங்களில் பார்வைக்கு வைப்பதெனவும் முடிவெடுக்கப் பட்டுள்ளது. தகுதியுடையவர்கள் நிராகரிக்கப் பட்டிருந்தால், அல்லது தகுதியற்றவர்கள் நிதியுதவிக்கு சிபார்சு செய்யப்பட்டிருந்தால் உரிய அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டுவருமாறு கோருவதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## வன்னிக்கு இடம்பெயர்பவர்கள் இவர்கள்தான்

புலிகளிடம் ஒரு நாள், இரு நாட்கள் ஆயுதப் பயிற்சிபெற்ற ஆயிரக் கணக் கானவர்கள் யாழ்.குடா நாட்டைவிட்டு வன்னிக்கு இடம்பெயர்ந்திருப்பதாக அங்கி ருந்து கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன. அங்கு இடம்பெற்று வரும் மர்மக் கொலை களையடுத்து, சம்பந்தப்பட்டவர்களை தேடிப் பிடிக்கும் முயற்சிகள் முடுக்கி விடப்பட்டுள்ள தனாலேயே பாதுகாப்புத் தேடி இவர்கள் தப்பிச் செல்வதாகவும் கூறப்படுகிறது. இடம் பெயர்ந்தவர்களில் பலர் வன்னியைச் சென் றடைந்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## திருமலையில் இனக் குழப்பத்தை தடுக்கத் தீவிர முயற்சி

இலங்கையில் ஓர் இனக்கலவரத்தை உருவாக்கும் நோக்கோடு, கிழக்கில் மேற்கொ ளப்பட்டு வரும் இன ரீதியான வன்செயல்களுக் முடிவு கட்டுவதற்கான வலுவான நடவடிக்கை களை அரசாங்கம் எடுத்துள்ளதாக அரசாங் சமாதானச் செயலகப் பேச்சாளரான அனுஷ பல்விற்ற தெரிவித்தார். திருகோணமலையிே இன வெறித் தீயை மூட்டுவதற்கான முயற்சிக மேற்கொள்ளப்படுகின்றன. புலிகள் இயக்கத்தின அதற்காகவே அப்பாவிச் சிங்கள மக்கள் மீது படையினர் மீதும் தாக்குதல்களை நடத் வருகின்றனர். பீதி காரணமாகத் தாக்குதலுக் இலக்காகக் கூடிய தமிழ் கிராமங்களிலிருந்து சிங்கள கிராமங்களிலிருந்தும் தமிழ் மக்களு சிங்கள மக்களும் வெளியேறிப் பாதுகாப்பா இடங்களில் தஞ்சம் புகுந்துள்ளனர். அரசா கம் கிழக்கிலுள்ள எல்லைக் கிராமங்களி பாதுகாப்பைப் பலப்படுத்தியுள்ளது. அத்துட முன்னேற்பாட்டு நடவடிக்கைகளையு மேற்கொண்டுள்ளது. உணர்ச்சி வசப்படாம பொறுமை காக்குமாறு அரசாங்கம் சிங்கள தமிழ் மக்களைக் கேட்டுள்ளது என்றும் அவ கூறினார்.

## திருமலை எம்.பி. சம்பந்தன் திடீரெனத் தலைமறைவு

திருகோணமலையில் இன்க்கலவரத் தைத் தூண்டுவதற்கு தீய சக்திகள் முனைந்திருக்கும் இத் தருணத்தில், திரு கோணமலை மாவட்ட எம்.பி. இரா.சம்பந் தன் திடீரெனத் தலைமறைவாகி விட்டார். கடந்த மூன்று வாரங்களாக அவர் காணா மல் போய்விட்டார். தமிழ் நாட்டில் அவர் தங்கியிருப்பதாக தமிழ் தேசியக் கூட்ட மைப்பு எம்.பி.க்கள் கூறுகின்றனர். அவர் அங்கு சிகிச்சை பெற்று வருகிறாரென்றும் அவர்கள் கூறுகின்றனர். இந்த நாட்டில் சிகிச்சை பெற முடியாத அளவுக்கு அவ ருக்கு அப்படியென்ன ஆபத்தான நோய்? என்று சிலர் கேள்வி எழுப்புகின்றனர். அவர் கொழும்பில் தங்கியிருப்பதாக வேறு சிலர் கூறுகிறார்கள். அவர் எங்கு தங்கியிருந் தாலும் பரவாயில்லை. திருமலை வாழ் தமிழ் மக்கள் அந்தரித்து நிற்கும் நிலை யில், அவர்கள் சார்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள அவர் உடன் தனது மாவட்டத்துக்குத் திரும்ப வேண்டு மென்கிறார் திருகோணமலை நகரைச் சேர்ந்த புளொட் உறுப்பினர் சத்தியநாதன். குண்டு துளைக்காத காரொன்றினை சந்திரிகா அரசாங்கத்திடம் கேட்டுப் பெற்றுக் கொண்ட சம்பந்தன் எம்.பி.க்கு அரசாங்கப் பாதுகாப்பும் இருக்கிறது. அவர் கட்டாயம் திருமலைக்கு வந்து மக்களின் அவலங் களைப் பார்வையிட்டு, உதவ முன்வர வேண்டுமென்றும் அவர் சொன்னார்.

## வன்னியில் உளவாளியென்ற சந்தேகத்தில் கடத்தல்

வன்னியில் கடந்த 19ஆம் திகதி கடத்திச் செல்லப்பட்ட ஜயந்த புத்திக என்ற செஞ்சிலு வைச் சங்கத்தின் சாரதி குறித்து எவ்விதத் தகவலும் கிடைக்கவில்லையென்று செஞ் சிலுவைச் சங்க அதிகாரியொருவர் தெரிவித் தார். எம்பிலிப்பிட்டியாவைச் சேர்ந்த இவர், செஞ்சிலுவைச் சங்கத்தின் சுனாமி நிவாரண நடவடிக்கைகளுக்காக வன்னிப் பகுதிக்கு வந்திருந்தாரென்றும், தண்ணீர் பௌசரின் சாரதியாக அவர் பணியாற்றி வந்தாரென்றும் தெரிவிக்கப்படுகிறது. வன்னியில் உளவு நட வடிக்கைகளில் ஈடுபட்டாரென்ற சந்தேகத் திலேயே அச் சாரதி கடத்திச் செல்லப்பட்டா ரென்று அந்த அதிகாரி குறிப்பிட்டார்.

## தொடரும் படுகொலைகளை ஈ.பி.டி.பி. வன்மையாகக் கண்டிக்கிறது

இம்மாதம் ஆரம்பத் திலிருந்து இடம் பெற்று வரும் படுகொலைச் சம்பவங்களை ஈ.பி.டி.பி. வன்மையாகக் கண்டிக்கிறது. குண்டு வெடிப்புகளால் படையினர் கொல்லப்படுவதையும், துப்பாக்கிச் சூடு மற்றும் வாள் வெட்டுகளுக்கு இலக்காகி, பலியாகும் தமிழ் மக்களின் கொலை களையும் பாரபட்சமற்ற வகையில் ஈ.பி.டி.பி. கண்டிப்பதோடு இக்கொலைகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். என்ற கோரிக் கையையும் விடுக்கிறது. வடக்கு, கிழக்கில் தொடரும் எரிச்சலூட்டும் வன்முறைச் சம்பவங்கள் முடிவுக்கு கொண்டுவரப் படுவதற்கு அரசு இன்னும் கூடுதல் நடவடிக்கைகளை எடுக்கவேண்டு மென ஈ.பி.டி.பி. வலியுறுத்துகிறது. அதே போல புலிகள் நடாத்தும் இயல்பு நிலைக்கு குந்தகமாக அமையும் கிளைமோர் தாக்குதல்களையும், படுகொலைகளையும், பலவந்தமான கட்டாயப் பயிற்சிக்கு ஆள்சேர்க்கும் செயற்பாடுகளையும் உடனடியாக நிறுத்த வேண்டும். தற்போதைய மோசமான நிலை தொடருமாக இருந்தால் அது மக்களின் இயல்பு வாழ்வையும், சமாதான முயற்சிகளையும் பாதிக்கவே செய்யும். படுகொலைகளும், வன்முறைகளும் முடிவுக்கு வரும்போதே இருதரப்புகளுக்கு மிடையிலான நம்பிக்கையை கட்டியெழுப்ப முடியும்.

பொதுமக்கள் மீது இனந்தெரியாத நபர்களின் போர்வையில் நடத்தப்படும் படுகொலைகள் கோழைத்தனமானதும், மிருகத்தனமானதுமாகும். இந்தக் கொலை களை புரிபவர்களை ஈ.பி.டி.பி. சமாதானத்தின் எதிரிகளாகவே கருதுகிறது. இயல்பு நிலையை உருவாக்குதல் அல்லது பொது மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல் என்பன போன்ற பணிகள் இறுக்கமாக முன்னெடுக்கப்பட வேண்டிய தேவையை உணர்ந்து கொள்ளும் அதே வேளை, அந் நடவடிக்கைகள் பொதுமக்கள் மீதான நெருக்கடிகளாக மாறிவிடாமல் இருக்க வேண்டுமென்பதையே ஈ.பி.டி.பி. விரும்புகிறது. ஆகவே, வடக்கு, கிழக்கு நிலைமைகளை ஒரு சுமுக நிலைக்கு கொண்டுவர அரசும், புலிகளும் தேவையற்ற கோரிக்கைகளையு காரணங்களையும் முன்வைத்து ஒதுங்கி போகாமல் பேச்சு வார்த்தைகளை முன்னெடுத்து செயற்பட வேண்டும். இதுவே பொதுமக்களின் அமைதி வாழ்வுக்கு வழிசமைக்கும். ஈ.பி.டி.பி.யும் இதையே விரும்புகிறது. ஆபத்தான கட்டத்தை எட்டியிருக்கும் புரிந்துணர்வு யுத்த நிறுத் ஒப்பந்தம் சாதகமான முறையில் வெற்றியளிக்க மீண்டும் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்க வேண்டுமென்ற மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு அரசுக்கும், புலிகளுக்கும் உண் டென்பதை ஈ.பி.டி.பி. மீண்டும் வலியுறுத் கிறது.

தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):-011 4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk

# முரசம்

## கொழும்பில் குண்டுவெடிப்பு சர்வதேசத்துக்கு பெப்பே....

*அன்புள்ள உங்களுக்கு,*
*வணக்கம்.*

**தடைப்பட்டிருக்கும்** ஜெனீவாப் பேச்சுவார்த்தையை புறம் தள்ளி, புலிகள் வன்முறைகளில் ஈடுபடுவார்களானால் ஐரோப்பிய நாடுகள் புலிகளைத் தடைசெய்யும் என்று அறிவித்திருந்தபோதும், அண்டைய நாடான இந்தியா இலங்கையில் நடக்கும் வன்முறைகள் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு சம்பந்தப்பட்ட தரப்புக்கள் பேச்சுக்களின் மூலம் பிணக்குகளைத் தீர்க்க வேண்டும் எனவும் அப்படிப் பேச்சு நடந்த இருதரப்பும் முன்வரும் என தான் நம்புவதாகவும் அறியத்தந்துள்ள போதும் தலைநகர் கொழும்பில் ஏப்ரல் 25ஆம் திகதி இராணுவத் தளபதியை இலக்குவைத்து பெண் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடைபெற்றிருக்கிறது என்றால், இன்னொரு யுத்தத்தை நோக்கிய பாதையில் நாடு கணிசமான தூரத்தைக்கடந்து விட்டதையே புலப்படுத்துகிறது.

வடக்குக் கிழக்குப் பகுதியில் இராணுவத்தினர் மீதும் பொதுமக்கள் மீதும் தொடர்ச்சியாகத் தாக்குதல்கள் நடைபெற்றபோது அவற்றை அர்ப்பணிப்பு, பொறுமை, சமாதானத்துக்கான விலை என்று அரசாங்கம் சொல்லிக் கொண்டிருந்ததன் விளைவே கொழும்பில் மீண்டுமொரு தற்கொலைத் தாக்குதல் சம்பவம் நடக்க வழி சமைத்துள்ளது. 2004 ஜூலை மாதம் ஏழாம் திகதி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை இலக்குவைத்து அனுப்பப்பட்ட தற்கொலையாளி தற்செயலாக கொள்ளுப்பிட்டி பொலிஸில் வெடித்ததில் நான்கு பொலிஸார் கொல்லப்பட்டும் பலர் காயமடைந்தனர். அப்போதும் அந்த சம்பவம் சமாதானத்தைப் பாதிக்காது என அரச தரப்பால் தெரிவிக்கப்பட்டது. இவ்வாறு தனிநபர் படுகொலைகளின் போதும் இதே விதமான கருத்துக்களே தெரிவிக்கப்பட்டது. இவ்வாறு நடைபெறும் பாரிய தாக்குதல் சம்பவங்களுக்கு அரசும் சர்வதேச சமூகமும் ஜீரணிப்பைக் காட்டியதன் தொடர்ச்சியாகவே வடக்கு, கிழக்கில் கிளைமோர் - வெடித்தும் இவற்றுக்கிடையிலான மோதல்களை உருவாக்குதலுமாகும். ஆகவே கொழும்பில் படைத்தலைமையகத்தில் இராணுவத் தளபதி லெப்டினட் ஜெனரல் சரத் பொன்சேகாவை இலக்கு வைத்துத் தாக்கிய தற்கொலைத்தாக்குதல் வடக்கு, கிழக்குத் தாக்குதல்களின் தொடர்ச்சியாகவே அமைந்துள்ளது. வேறொரு குண்டுத்தாக்குதல் என்றால் அதை யாரின் தலையிலாவது சுமத்திவிட்டு புலிகள் ஒதுங்கிக் கொள்ள முயற்சித்திருப்பர். ஆனால் தற்கொலைத் தாக்குதலை புலிகள் மறுக்கமுடியாது. இது தெரிந்தும் இவ்வாறானதொரு தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது என்றால் அதன் நோக்கம் பாரதூரமான விளைவுகளுக்கு முகங்கொடுக்கப் புலிகள் துணிந்துவிட்டார்கள் என்பதாகும்.

சர்வதேசத்தின் கண்டிப்புகள், நாட்டுமக்களின் அதிருப்தி என்பவற்றையெல்லாம் பெரிதாக யோசிக்காமல் இத்தாக்குதலில் இராணுவத்தளபதி கொல்லப்பட்டு அதன் விளைவாக அரசாங்கம் புலிகள்மீது தாக்குதலை மேற்கொண்டு அது ஒரு பாரிய யுத்தமாக மாறிப்போனாலும் பரவாயில்லை என்ற பொறுப்பற்ற போக்கையே அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. ஆகவே நாட்டு நிலைமையை அரசு புரிந்துகொண்டு கூடுதல் பாதுகாப்புக்கு வழிசெய்யவேண்டும். ஒரு இராணுவத் தளபதியை நெருங்க முடிந்த புலிகளால் ஏனைய நாட்டின் பிரஜை ஒருவருக்கு இருக்கக்கூடிய அச்சுறுத்தல் எத்தகையது என்பதை ஒவ்வொருவரும் புரிந்து கொள்ள வேண்டும். தவறான புரிந்துணர்வு ஒப்பந்தத்தினால் இன்னும் என்னென்ன விளைவுகளுக்கு முகம் கொடுக்கப்போகிறதோ என்ற சமாதானப்பிரியர்களின் கவலையை தவறான ஒப்பந்தத்தின் ஆக்கத்திற்கு உழைத்தவர்களும் கையெழுத்திட்டவர்களுமே புரிந்து கொள்வதோடு பாதிப்புகளுக்கான பொறுப்பையும் அவர்களே பொறுப்பேற்க வேண்டும்.

■■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

---

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

# ஜெனீவாவிலும் வெடிக்கப் போகிறது வடக்கு - கிழக்கின் வன்முறைகள்

நரன்

"**1996ஆம்** ஆண்டு கொலை அச்சுறுத்தல் குற்றச்சாட்டின் பேரில் நான்கு தமிழ் இளைஞர்கள் ஜெனீவாவில் கைது செய்யப்பட்டார்கள். மாற்றுக் கருத்துக் கொண்ட தமிழ் இளைஞர்கள் சிலருக்கு அச்சுறுத்தல் விடுத்தார்களென்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர். இவர்கள் மீதான சட்ட நடவடிக்கைகளைத் தொடர்வதற்கு சுவிற்சர்லாந்துப் பொலிஸார் நடவடிக்கைகளை எடுத்தபோதிலும், எதிராகச் சாட்சியமளிக்க எவரும் முன்வராததால் அந்தப் பிரச்சினை கிடப்பில் போடப்பட்டது. அதற்குப் பின்னர் இன்றுவரை கொலை மிரட்டல் மற்றும் கப்பம் பெறுதல் போன்ற குற்றச்சாட்டுகளின் பேரில் தமிழ் இளைஞர்கள் எவருமே கைது செய்யப்படவில்லை."

இது கொழும்பிலுள்ள சுவிற்சர்லாந்து தூதுவராலயத்தின் பேச்சாளரொருவர் தெரிவித்த தகவல். "அப்படியானால், சுவிற்சர்லாந்தில் தமிழ் இளைஞர்கள் மிரட்டுதல், கப்பம் பெறுதல் போன்ற சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவதில்லையென்று கூறுகிறீர்களா?" என்று பதில் கேள்வியைக் கேட்டபோது, "நான் அப்படிச் சொல்லவில்லை. மிரட்டல் மற்றும் கப்பம் பெறுதல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக யாரும் புகார் செய்யவோ அல்லது சாட்சி சொல்லவோ முன்வருகிறார்களில்லை" என்றார் அவர்.

எனக்கு விடயம் புரிந்துவிட்டது. மனித உரிமைகளுக்கு மிகுந்த முன்னுரிமை கொடுக்கும் அந்த நாட்டில், சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு இடமளிக்க மாட்டார்கள். என்பது உண்மைதான். ஆனால் சட்டவிரோதச் செயற்பாடுகளில் ஈடுபடும் தமிழ் இளைஞர்களுக்கு எதிராக யாராவது புகார் செய்தால், அவர்கள் பழிவாங்கப்படுவார்களென்ற பீதி அங்கு நிலவுகிறது. இவ்வாறு புகார் தெரிவிப்பவர்களின் உறவினர்கள் இலங்கையில் பழிவாங்கப்படுவார்களென்பதும் உண்மை. ஜெனீவாவிலுள்ள ஐ.நா.தலைமையகத்துக்கு முன்னால், புலிகளின் படுகொலைகள், அத்துமீறல்களைக் கண்டித்து நடத்தப்பட்ட பேரணியை ஒழுங்கு செய்தவர்களில் இரு தமிழர்கள் தாக்கப்பட்டமையை ஓர் உதாரணமாகக் கூறமுடியும். அதாவது இலங்கையில் யுத்த நிறுத்த சம்பவத்தின் பின்னர் நடைபெற்ற அனைத்துப் படுகொலைகளையும் செய்த 'இனந்தெரியாதவர்களை' இதுவரை கண்டுபிடிக்க முடியாததையும் கவனத்தில் கொள்ள வேண்டும். அமைச்சர் கதிர்காமரின் படுகொலையில் சம்பந்தப்பட்டார்களென்ற சந்தேகத்தின் பேரில் சிலரும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைக் கொலை செய்யும் நோக்கில் நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் பெண்ணொருத்தி கைது செய்யப்பட்டதைத் தவிர ஏனைய இனந்தெரியாதவர்களெல்லாம் தப்பிப் போயிருக்கிறார்கள்.

இதனால்தான் இலங்கையின் வடக்கு - கிழக்கில் ஏராளம் தாராளமாக மனித உரிமை மீறல்கள் இடம்பெற்று வருகின்றன. குறிப்பாக அரசுக்கும் புலிகளுக்குமிடையில், யுத்த நிறுத்த ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்ட பின்னரும் கூடப் படுகொலைகள் தாராளமாகவே இடம்பெற்றிருக்கின்றன. குறிப்பாக, கடந்த பெப்ரவரியில் நடைபெற்ற முதல் சுற்றுப் பேச்சுவார்த்தைக்கு முன்னோடியான காலப்பகுதியில் படையினரும் பொதுமக்களும் கண்ட நிண்டபடி கொல்லப்பட்டிருக்கிறார்கள். இந்தக் கொலைகளின் அசுரப் போக்கைத் தடுத்து நிறுத்துவதற்காகவே முதல் சுற்று ஜெனீவாப் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. இரு தரப்புகளுமே படுகொலைகளையும் மனித உரிமை மீறல்களையும் நிறுத்துவதாக இணக்கம் கண்டு, அதற்குச் சான்றாக எட்டுப் பந்திச் சட்டறிக்கையொன்றினையும் வெளியிட்டிருந்தன. ஆனால் இரண்டாவது சுற்றுப் பேச்சுவார்த்தைக்

> **தமிழ் மக்கள் வன்செயல்களுக்கு முகங்கொடுத்திருக்கிறார்களென்பது உண்மைதான். ஆனால், அதற்குப் பிள்ளையார் சுழி போட்டவர்களும் காரண கர்த்தாக்களும் புலிகள்தான். படையினர் மீது தாக்குதல்களை ஆரம்பித்தவர்கள், படிப்படியாக சிங்கள மக்கள் மீதும் தாக்குதல்களைத் தொடுத்து வருகின்றனர்.**

கென நிர்ணயிக்கப்பட்ட ஏப்ரல் 19-21ஆம் திகதிகளுக்கு முன்னதாகவே வடக்கிலும் - கிழக்கிலும் படுகொலை தாக்குதல்கள் மீண்டும் ஆரம்பித்து விட்டன.

படையினர் மீதான கிளைமோர் குண்டுத் தாக்குதல்களோடு ஆரம்பித்த படுகொலைகள், அப்பாவி மக்கள் மீதும் தொடர்ந்து வியாபித்தது. திருகோணமலை மரக்கறிச் சந்தையில் நான்கு அப்பாவிச் சிங்கள வியாபாரிகள் கொல்லப்பட்டதன் எதிரொலியாக இருபதுக்கு மேற்பட்ட அப்பாவிகளான தமிழ் சிவிலியன்கள் கொல்லப்பட்டார்கள். புத்தூர், வாதரவத்தையில் ஐந்து தமிழ் இளைஞர்களும், திருகோணமலையில் கோமரன்கடவலையில் ஆறு சிங்கள விவசாயிகளும் கொல்லப்பட்டிருக்கின்றனர். இவர்களனைவரும் 17இற்கும் 25இற்கும் இடைப்பட்ட இளைஞர்களாவர். இவர்களில் இருவர் மாணவர்கள். விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டுவிட்டு வீடு திரும்பும் வழியில் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்கள். வாதரவத்தையில் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ் இளைஞர்கள் இராணுவத்தினரோடு நெருக்கமாகப் பழகியவர்களென்பதால்தான் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்களென்று தெரிய வருகிறது.

இந்த நாட்டில், அதிலும் குறிப்பாக வடக்கு - கிழக்கில் படுகொலைகள் என்பது சர்வசாதாரண அன்றாட நிகழ்வாகி விட்டது. யுத்த நிறுத்த ஒப்பந்தம், அட்சர சுத்தமாக அமுல்படுத்தப்பட வேண்டுமென்பதற்காகவே ஜெனீவா பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டன. ஆனால் எதிர்பார்த்த பலனுக்கு மாறாக எதிர் விளைவுகளையே இப் பேச்சுவார்த்தை ஏற்படுத்தியிருக்கிறது.

பேச்சுவார்த்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் படையினர் மீதோ அல்லது அப்பாவி மக்கள் மீதோ தாக்குதல்களை ஆரம்பிப்பது ஒரு தந்திரோபாயமாகி விட்டது. கொலைகளை நடத்துகின்றபோதே, பேச்சுவார்த்தையை இழுத்தடிப்பதற்காகப் பல்வேறு நிபந்தனைகளையும் கோரிக்கைகளையும் புலிகள் முன்வைக்கத் தொடங்கிவிட்டனர். தமது கிழக்குப் பிராந்தியத் தலைவர்களை வன்னிக்கு வரவழைத்துப் பேச்சுவார்த்தை நடத்திய பின்னரே ஜெனீவாப் பேச்சுகள் குறித்துத் தீர்மானிக்க முடியுமென்று முதல் நிபந்தனையை விதித்தார்கள். அதற்குப் படகுப் பயண வசதியை அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுத்தது. இது தொடர்பாக யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவினூடாக அரசும் புலிகளும் ஓர் இணக்கத்துக்கு வந்தனர். புலிகளை ஏற்றிச் செல்லப் படகும் தயாரானது. படகின் கப்டனாகத் தமிழர் ஒருவரே செயற்படவும் ஏற்பாடு செயற்பட்டது. படகில் பயணத்துக்குத் தயாராக ஏறிய முப்பது புலிகள், சில நிமிட நேரங்களிலேயே இறங்கிப் போய்விட்டனர். கடற்படைப் படகு பாதுகாப்பாக வருவதற்கு ஆட்சேபனை தெரிவித்தே புலிகள் இறங்கிச் சென்றிருக்கின்றனர். புலிகள் அவ்வாறு நடந்து கொண்டமை தவறென்றும் ஏற்கனவே யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அனுசரணையுடன் புலிகளும் அரசும் மேற்கொண்ட இணக்கத்தின்படியே கடற்படைப் பாதுகாப்பு வழங்கப்பட்டதென்றும் கண்காணிப்புக் குழுவின் தலைவர் தெரிவித்திருக்கிறார்.

பின்னர், தமது கிழக்குப் பகுதித் தலைவர்களை ஏற்றியிறக்க ஹெலிகொப்டர் வசதி செய்து தருமாறு புலிகள் அரசைக் கேட்டுக் கொண்டனர். அரசாங்க ஹெலிகொப்டர்களைத் தர முடியாதென அரசு தெரிவித்தது. அது சரியானது. புலிகள் தமது விவகாரங்களைக் கையாள்வதற்கு தாமே தனியார் ஹெலிகளைப் பயன்படுத்த வேண்டுமென்பதே அரசின் நிலைப்பாடு. இருந்தும் நோர்வேயின் அனுசரணையோடு நான்கு ஆசனங்கள் கொண்ட ஹெலி கொப்டர்களைப் பெற அனுமதித்து அரசு. அதனையும் புலிகள் நிராகரித்தனர். பின்னர் பத்து இருக்கைகளைக் கொண்ட ஹெலிகளைப் பயன்படுத்துவதற்கு பச்சைக் கொடி காட்டியது அரசு. இப்போது 30 பேர் செல்லக் கூடிய ஹெலிவேண்டுமென்கின்றனர். இப்போது அவர்கள் வேறு நிபந்தனைகளை முன்வைத்திருக்கிறார்கள். தமிழ் மக்கள் மீதான வன்செயல்கள் நிறுத்தப்பட்டால் மட்டுமே பேச்சுவார்த்தைக்கு வர முடியுமென்று புதிய தடைக்கல்லைப் போட்டிருக்கிறார்கள் தமிழ் மக்களைத் தாக்குவதும் தாக்குவதற்கும் ஏதுவான செயற்பாடுகளில் ஈடுபடுவதும் புலிகள்தான்.

தமிழ் மக்கள் வன்செயல்களுக்கு முகங்கொடுத்திருக்கிறார்களென்பது உண்மைதான். ஆனால், அதற்குப் பிள்ளையார் சுழி போட்டவர்களும் காரண கர்த்தாக்களும் புலிகள்தான். படையினர் மீது தாக்குதல்களை ஆரம்பித்தவர்கள், படிப்படியாக சிங்கள மக்கள் மீதும் தாக்குதல்களைத் தொடுத்து வருகின்றனர். திருகோணமலை மரக்கறிச் சந்தையில் நான்கு அப்பாவிச் சிங்கள வர்த்தகர் களைப் புலிகள் குண்டு வீசிக் கொன்றதன் எதிரொலியாகவே அப்பாவித் தமிழர்கள் தாக்கிக் கொல்லப்பட்டுள்ளனர். கடைகள் எரிக்கப்பட்டுள்ளன. இவற்றை யாரும் நியாயப்படுத்த முன்வரவில்லை. சிங்களக் காடையர்களின் இச் செயல் வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியது. ஆனால், இப்போது திருமலை, கோமரன்கடவல, கல்லன்பற்று என்ற சிங்களக் கிராமத்தில் ஆறு சிங்கள விவசாயிகளைப் புலிகள் சுட்டுத் தள்ளியிருக்கிறார்கள். இந்தச் சிங்கள விவசாயிகள் தமிழ் மக்களுக்கோ புலிகளுக்கோ செய்த தவறுதான் என்ன? ஓர் இனக் கலவரத்தைத் தூண்டி விடுவதே புலிகளின் உத்தியாக இருக்கிறது. திருகோணமலையில் இனக் கலவரமொன்றினை உசுப்பி விட்டு, அதில் குளிர்காய முனைவதே புலிகளின் நோக்கமாகும்.

இனக் கலவரமொன்று ஏற்பட்டால் பாதிக்கப்படப் போவது இரு இனங்களையும் சேர்ந்த அப்பாவி மக்கள்தான். அதிலும் குறிப்பாக அப்பாவித் தமிழ் மக்களே பாதிக்கப்படுவார்களென்பது புலிகளுக்குத் தெரியாததல்ல.

சில வருடங்களுக்கு முன்னர் நாட்டில் நிலவிய யுத்தமுமில்லை, சமாதானமுமில்லை என்ற நிலைமை மாறி, யுத்தப் பீதி மனோபாவம் நாடெங்கும் வியாபித்து நிற்கிறது. ஒரு யுத்தச் சூழ்நிலை ஏற்பட்டிருப்பதும் அதற்கான முன்னோடித் தயாரிப்புகளை மேற்கொள்வது போலப் புலிகள் தாக்குதல்களிலும் பேச்சுவார்த்தையை இழுத்தடிக்கும் செயற்பாடுகளிலும் ஈடுபட்டிருப்பதே இதற்கான காரணமாகும். இதனாலேயே அரசாங்கம் பொறுமை காத்து வந்தது. படையினரையும் பொறுப்போடு நடந்து கொள்ளுமாறு பணித்தது. அமைதியாகவிருந்த படையினர் தற்காப்பு நிலைக்குச் சென்று, இப்போது தேவைப்பட்டால் தாக்குதல் நிலைக்குச் செல்லவும் தயாராகிவிட்டார்கள். சில இடங்களில் தாக்குதல்களும் நடத்தப்பட்டிருக்கின்றன. இரு தரப்புகளுக்குமிடையில் ஓர் முரண்பாட்டு முறுகல் நிலை உச்சம் பெற்றிருக்கிறது. எமக்குக் கிடைக்கும் தகவல்கள் நல்ல சகுனத்தின் ஆரம்ப அறிகுறிகளாக இல்லை.

புலிகளினதும் அரசினதும் செயற்பாடுகளை சர்வதேச சமூகம் உன்னிப்பாக அவதானித்து வருகிறது. ஐரோப்பிய ஒன்றியம், இணைத்தலைமை நாடுகள் உட்படச் சகல சர்வதேச சக்திகளுமே புலிகள் மீது கண்டனம் தெரிவித்திருக்கின்றன. இந்தியா கூட இரு தரப்புகளையும் பேச்சுவார்த்தை மேசைக்குச் செல்லுமாறு வற்புறுத்திவருகிறது. முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் படுகொலையையடுத்து புலிகள் மீது பயணத் தடையை விதித்த, ஐரோப்பிய ஒன்றியம், முற்றுமுழுதான தடையை விதிக்க வேண்டியேற்படுமென்று புலிகளுக்கு எச்சரிக்கை விடுத்திருக்கிறது. புலிகளைப் பொறுத்தவரை சர்வதேச சமூகத்தின் எச்சரிக்கை, செவிடன் காதில் ஊதிய சங்காக இருக்கிறது. தொடர்ந்தும் சர்வதேச சமூகம் சங்கை ஊதிக் கொண்டிருக்குமென்று புலிகள் நினைக்கக் கூடாது. அரசாங்கமும் அரச படைகளும் பொறுப்போடு நடந்து கொள்ளுமானால், சங்காரம் நிஜமென்று சங்கே முழங்கு என்ற நிலை புலிகளுக்கு ஏற்பட்டுவிடும் என்பதை அவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். வரலாற்றுப் பாடங்களிலிருந்து பாடங்களைக் கற்றுக் கொள்ளப் புலிகள் தவறுவார்களானால், சரித்திரத்தின் சாக்கடைகள்தான் அவர்களை இரு கரம் கூப்பி வரவேற்கும் என்பது திண்ணம்.

இதேவேளை, மாற்றுக் கருத்துக் கொண்ட சிலர் சுவிற்சர்லாந்தில் புலிகளின் மிரட்டல்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனரென்று அறிகிறோம். வன்செயல்கள் எல்லை தாண்டிப் போனால், புலிகளுக்கு மட்டுமல்ல அப்பாவித் தமிழ் மக்களுக்குமே அது ஆபத்தாக முடியும். என்னதான் இழுத்தடித்தாலும், புலிகள் ஜெனீவாவுக்குப் போகத்தான் போகிறார்கள். அப்போது வன்செயல்களின் எதிரொலிகள் மேசையில் வெடிக்கத்தான் போகின்றன. ■

---

## ஊரிலிருந்து....



ஊர்ப்பிரச்சினை ஒண்டு இன்ரநஷனல் லெவலில டீல் பண்ணுப்பட்டிருக்கு. வலிகாமத்தில கோயில் பிரச்சனை ஒண்டு சட்டம் மூலம் தீர்க்கப்பட்டு விட்டது. இதில தோத்தவை புலிகளுக்கு வேண்டப்பட்ட ஆக்கள். பளைக்குப் போய் மேன்முறையீடு செய்யலாம் எண்டால் படை தரப்பு இப்ப கண்ணில விளக்கெண்ணை விட்டு பாத்துக் கொண்டிருக்குது

பாத்தீசீனம் ஆக்கள். விஷயத்தை முன்னாள் யாழ்.மேயரிட்டை சொல்லி அவர் அமெரிக்காவில மகன் ருத்திர குமாரிட்ட சொல்லி. அவர் சு.ப.வுக்கு போன் பண்ணிச் சொல்லி சு.ப. இளம்பரிதிக்கு சொல்லி இப்ப பளைக்கு வரச் சொல்லி ஓடராம்.

பாத்தீங்களே இனப்பிரச்சினையை இன்ரநஷனல் லெவலில தீர்ப்பினம் எண்டு பாத்தால் கட்ட பஞ்சாயத்தை எல்லே இன்ரநஷனலா வெருட்டுகீனம்.

# தமிழ் மக்களின் இடப் பெயர்வு அதிகரிக்கப் போகிறது

**போர்** நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தம் தற்சமயம் செயல் இழந்து விட்டுள்ள நிலையில் சமதானத்தின் மீதான எதிர்பார்ப்புகள் கேள்விக்குள்ளாகியுள்ளன. அரச தரப்பு, செயலிழந்து போயிருக்கும் ஒப்பந்தத்தை மீண்டும் உயிர்கொடுத்து, புலிகளை சமாதானப் பேச்சுகளின் மேசைக்கு இழுத்து வர முயற்சி செய்து கொண்டு மறுபக்கத்தில் சர்வதேச சமூகத்தின் கூடுதல் அழுத்தமும் தேவையென்று தெரிவித்து வருகிறது.

புலிகளைப் பொறுத்தவரை, அரசு கூறும் புலிகள் மீதான குற்றச்சாட்டுகளை மறுத்து தெளிவுபடுத்துவதை விடவும் புதிய கோரிக்கைகளை முன்வைப்பதும், ஜெனீவாவில் காணப்பட்ட இணக்கப்பாட்டை அரசு நடைமுறைப்படுத்த சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றும் கூறி வருகிறது.

இதற்கிடையே புலிகள் கூறும் துணைப் படைகள் விவகாரமானது உண்மைக்குப் புறம்பான தரவுகளைக் கொண்டது என்பதை அரசு நிருபித்து வருகிறது. கருணா தரப்பினர் அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் ஆயுதமற்று அரசியல் பணியில் ஈடுபடுகிறார்கள் என்றும் அவ்வாறான நிலையில் அவர்களுக்குப் புலிகளால் ஏற்படும் ஆபத்துக்களிலிருந்து பாதுகாப்புக் கொடுக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளது. அதேபோல் ஏற்கனவே தமது தற்காப்புக்காக வைத்திருந்த ஆயுதங்களை அரசாங்கத்திடம் கையளித்து விட்டு ஜனநாயகச் செயற்பாடுகளில் ஈடுபட்டு அரசியல்பணி செய்து வரும் ஈ.பி.டி.பி., புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப். வரதர் அணி என்பவையும் அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் மக்கள் பணியாற்றி வருகின்றன. அவர்களுக்கும் புலிகள் கொலை அச்சுறுத்தல் விடுத்து வருவதால் அரசு பாதுகாப்பு வழங்கி வருகிறது. இது தவிர, ஜிஹாத் அமைப்பும் இராணுவத் துணைப் படையாக இயங்கி வருகிறது என்ற குற்றச்சாட்டையும் புலிகளால் இதுவரை நிரூபிக்க முடியாதுள்ளது. எனினும் அரசு முஸ்லிம் இளைஞர் - யுவதிகளை இராணுவத்தில் இணைத்துக்கொள்ள முயற்சி மேற்கொண்டு வருவதாக அறிவித்துள்ளது. அதேபோல் மலையக இளைஞர் - யுவதிகளும் இராணுவத்தில் இணைந்துகொள்ள முடியும் என்றும் அரசாங்கம் வெளிப்படையாகத் தெரிவித்துள்ளது. ஆனால் புலிகளோ அரசின் இந்தச் செயற்பாடுகளை துணைப்படை விவகாரமாகவே கருதுகின்றனர். அதற்குப் பிரதான காரணம் புலிகளைத் தவிர வேறு எந்த அமைப்பும் வடக்கு - கிழக்கில் தமிழ் மக்களுக்கு எவ்விதச் சேவையையும் செய்யக் கூடாது, தாமே அவர்களின் ஏகப் பிரதிநிதிகள் என்பதே புலிகளின் முடிவு. ஆகவே தான் நிராயுதபாணிகளாக நின்று அரசியல் பணியாற்றி வரும் ஏனைய அமைப்புகளை துணைப்படைகள் என்றும், கூலிப்படைகள் என்றும் கூறி, அவர்களை அரசாங்கத்தைக் கொண்டே அப்புறப்படுத்துவது, இல்லாவிட்டால் அவர்களை நிராயுதபாணிகளாக்கியவுடன் கடந்த காலத்தைப் போல் படுகொலை செய்வது என்ற சதித்திட்டம் தான் என்று ஜனநாயக வழிக்குத் திரும்பியுள்ள தமிழ் அரசியல் கட்சிகள் கூறி வருகின்றன.

இவ்வாறு துணைப்படைகள் விவகாரம், கிழக்குத் தளபதிகள் விவகாரம் மற்றும் கடைசியாக ஜெனீவா இணக்கப்பாடு, இயல்பு நிலை என்று புலிகள் இரண்டாம் கட்டப் பேச்சுக்கு வராமல் ஒதுங்கிக் கொண்டுள்ள நிலையில் வடக்கு, கிழக்கில் நாளுக்கு நாள் நிலைமை மோசமடைந்து கொண்டிருக்கிறது.

வடக்கு, கிழக்கைப் பொறுத்தவரை ஒப்பீட்டளவில் பெரும்பான்மையானவர்கள் தமிழர்கள். அடுத்தபடியாக முஸ்லிம்கள்,

> *நிலைமை இன்னும் மோசமடைந்து விடுமானால் சிங்கள, முஸ்லிம் மக்கள் எதிர்கொள்ளப்போகும் நெருக்கடிகளை விடவும் அதிக எண்ணிக்கையிலான தமிழ் மக்கள் இடம் பெயரவும், பாதிக்கப்படவும் போகிறார்கள் என்ற அச்சம் தற்சமயம் மக்கள் மத்தியில் பரவத் தொடங்கியுள்ளது. மட்டக்களப்பு, அம்பாறை, வவுனியா போன்ற மாவட்டங்களில் தற்போதைக்கு இடப்பெயர்வுகள் குறைவாக இருக்கின்ற போதும் யாழ்ப்பாணம், திருமலை மாவட்டங்களில் அதிகப்படியான படுகொலைகளும், வன்முறைகளும் இடம்பெற்று வருவதோடு, பொதுமக்கள் இடம் பெயர்ந்தும் வருகின்றனர்.*

சிங்களவர்கள் வாழ்கின்றார்கள். ஆனால் இந்த மூன்று இனத்தவர்களும், மதத்தால் வேறுபட்ட போதும் வாழிடங்களால் பின்னிப் பிணைந்த நெருக்கத்தைக் கொண்டிருப்பவர்கள். இதற்கு யாழ்ப்பாணம் தற்சமயம் விதிவிலக்காக உள்ளது. ஏனென்றால் அங்கிருந்த முஸ்லிம்கள் விரட்டி அடிக்கப்பட்டார்கள் என்பதால்.

இவ்வாறானதொரு நிலையில் நிலைமை இன்னும் மோசமடைந்து விடுமானால் சிங்கள, முஸ்லிம் மக்கள் எதிர்கொள்ளப்போகும் நெருக்கடிகளை விடவும் அதிக எண்ணிக்கையிலான தமிழ் மக்கள் இடம் பெயரவும், பாதிக்கப்படவும் போகிறார்கள் என்ற அச்சம் தற்சமயம் மக்கள் மத்தியில் பரவத் தொடங்கியுள்ளது. மட்டக்களப்பு, அம்பாறை, வவுனியா போன்ற மாவட்டங்களில் தற்போதைக்கு இடப்பெயர்வுகள் குறைவாக இருக்கின்ற போதும் யாழ்ப்பாணம், திருமலை மாவட்டங்களில் அதிகப்படியான படுகொலைகளும், வன்முறைகளும் இடம்பெற்று வருவதோடு, பொதுமக்கள் இடம் பெயர்ந்தும் வருகின்றனர். இந்த இடப் பெயர்வுகள் பல வகைப்பட்டதாக இருப்பதையும் அவதானிக்க முடிகிறது.

## திருகோணமலையில்

ஏப்ரல் பன்னிரெண்டாம் திகதி பொதுச் சந்தைப் பகுதியில் இடம்பெற்ற குண்டு வெடிப்பைத் தொடர்ந்து சிங்களக் காடையர்கள், தமிழ் மக்களின் கடைகளை தீவைத்து நாசம் செய்ததோடு பதினெட்டு தமிழ்ப் பொதுமக்களை வெட்டியும் தீ மூட்டியும் படுகொலை செய்தனர். அந்தச் சம்பவமானது சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்னர் திருகோணமலையில் நடந்த இன மோதல்களைப் போல் - அதன் பின்னர் 1983ஆம் ஆண்டு கொழும்பில் நடந்த கறுப்பு ஜூலை என்று அழைக்கப்படும் இனக்கலவரங்கள் போல் - இடம் பெற்றதாக திருமலை மக்கள் கூறுகின்றனர். அந்தச் சம்பவத்துக்குப் பிறகு சிங்கள மக்கள் ஆங்காங்கே படுகொலை செய்யப்படுவதும், பிறகு தமிழ் மக்கள் படுகொலை செய்யப்படுவதுமாக தொடர்ந்து கொண்டே இருக்கிறது. இச்சம்பவங்களின் பின்னால் யார் இருக்கிறார்கள்? அவர்களின் நோக்கம் என்ன என்பதைப் பற்றிக் கடந்த வாரம் தெளிவுபடுத்தியபடியினால் இவற்றின் விளைவுகளால் அப்பாவி பொதுமக்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகளைப் பார்க்கையில், திருமலை நகருக்கள் வாழும் தமிழ் மக்கள் எந்த வேளையிலும் தம் மீது தாக்குதல் நடத்தப்படலாம் என்ற பீதியோடு இருக்கும் அதேவேளை நகரத்தை அண்டிய பகுதிகளான லிங்கநகர், உவர்மலை, காந்திநகர், செல்வநகர், அன்புவழிபுரம், சங்கம, உப்புவெளி, ஜமாலியா போன்ற இன்னும் சில இடங்களில் பொதுமக்கள் பகலில் வீடுகளில் இருந்து சமைத்துச் சாப்பிட்டாலும் இரவில் நாலு அல்லது ஐந்து குடும்பங்கள் ஒன்றாகச் சேர்ந்து ஒரு இடத்தில் தங்குவதும், பின்னர் காலையில் வீடுகளுக்கு வருவதுமாக இருக்கிறார்கள். இவர்களில் சிலர் கொழும்புக்கு வந்துவிடவும் அல்லது இந்தியாவுக்குப் போய் விடவும் வாய்ப்புகளைப் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். இவர்களைத் தவிர தூரத்துப் பகுதிகளான, கன்னியா, துவரங்காடு, அலஸ்தோட்டம், நிலாவெளி, சீனன்குடா, வெள்ளை மணல் போன்ற பகுதி மக்கள் அருகிலுள்ள பாடசாலைகளிலும், பொதுக் கட்டிடங்களிலும் இடம் பெயர்ந்து இருக்கின்றனர். இதேபோல் கோமரங்கடவல பிரதேசத்தில் ஆறு அப்பாவி சிங்கள விவசாயிகள் வெட்டிக் கொல்லப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து அப் பகுதி சிங்களக் குடும்பங்களும் இடம்பெயர்ந்து வாழ்ந்து வருகின்றன. தமிழ் மக்களில், புலிகளின் நெருங்கிய ஆதரவாளர்களும், பயிற்சி பெற்றவர்களும் இடம் பெயர்ந்து புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் போகின்றனர். சிலரை யுத்தம் வெடிக்கப் போவதாகக் கூறி புலிகளே பலவந்தமாகவும் இடம் பெயரச் செய்கிறார்கள் என்று அங்கிருக்கும் மக்கள் கூறுகிறார்கள்.

## யாழ்ப்பாணத்தில்

தொடரும் கிளைமோர் தாக்குதல்கள், துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் காரணமாக மக்கள் மத்தியில் ஒரு நிரந்தர நிம்மதியின்மை உருவாகியுள்ளது. அவர்கள் சுத்தமாக சமாதானம் ஏற்படும் என்ற நம்பிக்கை அற்றவர்களாகவே காணப்படுகின்றனர். அதற்குக் காரணம், படையினருக்கு ஆத்திரமூட்டும் விதமான தாக்குதல்களும், பெருமளவான ஆயுதங்கள் ஆங்காங்கே கண்டு எடுக்கப்படுவதும், குறுகிய கால புலிகளின் பயிற்சிபெற்று ஊருக்குள் திரிபவர்களின் கொலை, கொள்ளை போன்ற அடாவடித்தனங்களின் அதிகரிப்புமாகும்.

தற்போது யாழ்ப்பாணத்திலிருந்து வன்னிக்கு ஓடும் மக்களின் தொகையில் புலிகளின் நெருங்கிய உறவினர்கள், ஆதரவாளர்கள், குறுகிய கால பயிற்சி பெற்றவர்கள் என்போரது எண்ணிக்கையே அதிகமாக இருப்பதாக முகமாலையில் இருந்து கிடைக்கப் பெறும் தகவல்கள் கூறுகின்றன. இவ்வாறானவர்கள் முதல் நாளே முகமாலையை அண்மித்த கொடிகாமம் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் தங்கியிருந்து காலையில் 7.30 மணிக்கு முகமாலை வீதி திறக்கப்பட்டதும் ஓடித் தப்புகின்றனராம்.

இது தவிரவும் யுத்தம் நடைபெறப் போவதாகவும், அப்போது தமிழ் மக்கள் பாதிக்கப்பட்டு விடக்கூடாது என்றும் ஆகவே பாதுகாப்புப் பிரதேசமான வன்னிக்கு தமிழ் மக்கள் அனைவரும் இடம் பெயர்ந்து போகுமாறும் துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. இத் துண்டுப்பிரசுரங்களுக்கு, உயர் தொழில் நுட்பக் கல்லூரி மாணவர் ஒன்றியம், பொதுமக்கள் விழிப்புணர்வுக்கழகம், பொங்கி எழும் மக்கள் படை ஆகியன உரிமையும் கோரியுள்ளன. இவ்வாறான பதற்றமும், புலிகளின் தொடர்பிலிருப்பவர்களின் இடப் பெயர்வும் எந்த விடயங்களோடும் தொடர் இல்லாத மக்களையும் நெருங்கி வருகின்ற போதும் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குப் போய் துன்பப்பட முடியாது என்று கருதுவதால் இடம்பெயராமல் இன்னும் இருந்து வருகின்றனர். ஆனால் இவ்வாறானவர்களின் சராசரி என்பது


**அலசுவது**
**- மதியூகி -**

மிகவும் குறைவானதாகும். இதில் ஞாபகத்தில் கொள்ள வேண்டிய இன்னொரு விடயம் யாதெனில், ஜெனீவாப் பேச்சுக்கு முன்னதான காலப்பகுதியில் வடக்கில் தோன்றிய பதற்ற நிலையால் பாதுகாப்புக்காக வன்னிக்கு வரும்படி புலிகள் மக்களை வலிந்து இழுத்தனர். அப்போது வன்னிக்குப் போன மக்கள் மீண்டும் யாழ்ப்பாணத்துக்குத் திரும்ப புலிகள் இடம் கொடுக்காது, மூன்று வருடங்களுக்கு அந்த மக்களுக்குத் தடையும் விதித்துள்ளனர்.

இவ்வாறானதொரு நிலையில் மீண்டும் பாரிய தாக்குதல்களும், வன்முறைகளும் இடம்பெறுமாக இருந்தால் அல்லது தற்போதைய நிலை தொடர்ந்து கொண்டிருக்குமானால் தற்போதையதை விடவும் பாரிய நெருக்கடிகளுக்கு மக்கள் முகம் கொடுக்க வேண்டியிருக்கும் என்பதை தாக்குதல்களிலும், வன்முறைகளிலும் ஈடுபட்டிருக்கும் மக்கள் விரோத சக்திகள் புரிந்துகொள்ள வேண்டும். ◎

---

## அதிரடி அய்யாத்துரை



**சக்தியான** தொலைக்காட்சியில சிமிட்டிற நிகழ்ச்சியை அதானுங்கோ மின்னிற நிகழ்ச்சி அது உப்ப எங்கையுங்கோ மின்னுது. சிமிட்டவெல்லோ செய்யுது. அதாலைதான் சிமிட்டிற நிகழ்ச்சி எண்டனான். அந்த நிகழ்ச்சியை நடத்திற ரங்கமணி போனவாரம் தமிழ் மக்களின்ர போராட்ட வரலாற்றில ஒரு முக்கியமான உண்மையைச் சொன்னாருங்கோ. அதை சரிதான் எண்ட கணக்கில கேட்டுக் கொண்டு தலையை ஆட்டிக்கொண்டிருந்தார் கூத்தமைப்பு எம்.பி. செவாலியே லிங்கத்தார். அந்த உண்மை என்ன தெரியுமோ? உந்த நோர்வேக்காரருக்கு எதிராக இதுகால வரைக்கும் தமிழ் மக்களாலையோ, தமிழ் அமைப்புகளாலையோ ஒரு விதமான எதிர்ப்பு ஆர்ப்பாட்டமும் நடைபெறவில்லையாம். பகிடி என்ன எண்டால் ரெண்டாயிரத்து நாலாம் ஆண்டில அதுவும் எட்டாம் ஒன்பதாம் மாசங்களில வீணைக் கட்சிக்காரரின்ர ஊடகச் செயலாளர் சின்னபாலா, அம்பாறை ஆலையடி வேம்பின்ர தலைவர் கமலன், சிங்கம், புத்தளம் மாவட்ட அமைப்பாளர் பவான் ஆகியோரை ரெண்டெழுத்தார் சுட்டுப் படுகொலை செய்த போது, அவையின்ர பூதவுடல் தாங்கின பெட்டிகளோடை தலைநகரில நோர்வேயின்ர தூதுவரகத்துக்கு முன்னாலை போய் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடந்துது. அந்தச் சமயத்தில ரெண்டெழுத்தாரின்ர தலைவரின்ர கொடும்பாவியும் எரிக்கப்பட்டது. ஒண்டு ரெண்டு இல்லை. நாலு தடவை உது மாதிரி சவப்பெட்டி எதிர்ப்புப் போராட்டம் நடந்திருக்குது. உதுகள் தெரிஞ்சும் வசதியா மறந்து விட்டார் போல ரங்கமணி. நான் ஒரு பழமொழியை அடிக்கடி பாவிக்கிறது, அதுவும் உவருக்குத்தானுங்கோ. அது என்ன தெரியுமோ, "கேக்கிறவன் கேணையனா இருந்தால் எருமை மாடு ஏரோப்பிளேன் ஓட்டுமாம்" எண்டது தானுங்கோ. ரங்கமணி ஏரோப்பிளேன் ஓட்டிறதெண்டிட்டு கண்டபடி ஓட்டிடாமல் இருந்தால் நல்லது தானுங்கோ... கதை கேட்டவரைப் பத்தி நான் ஒண்டும் சொல்லக்கூடாதுங்கோவ்....வ்....

**தேர்தல்** கண்காணிப்புப் பணி செய்யிற பற்றிக்கோ யாரிட்ட என்ன வாங்கிக் கொண்டோ இல்லாட்டில் யாரை தாஜா பண்ணுறதுக்குச் சொன்னாரோ தெரியல்லை. 'ஜிஹாத்' எண்டொரு அமைப்பு இயங்குது எண்டிட்டாருங்கோ. அது பிழையெண்டும், அவர் எப்புடிச் சொல்ல முடியுமெண்டும் இஸ்லாமிய சகோதரர்கள் எதிர்ப்புக் கொடி தூக்கினவை. அது அந்த சமூகத்தின்ர விவகாரம். அவை தங்கட உரிமையின் காரணமாக கண்டிச்சினம். இன்னும் கண்டிச்சுக் கொண்டிருக்கினம். அது ஓகேயுங்கோ. உதில மர்மம் என்ன தெரியுமோ. 'ஜிஹாத்' எண்டொரு அமைப்பு இயங்குது அதுவும் படைத்தரப்போடு இணைந்து கூலிப்படையா இயங்குது. அதுக்கு பாகிஸ்தான் பணமும் - பயிற்சியும் கொடுக்குது எண்டு ரெண்டெழுத்தாரின்ர ஆலோசகர் மதுபாலா பகிரங்கமாக ஜெனீவாவிலையும், பிறகு பிற ஊடகங்களுக்கும் சொல்லிக் கொண்டிருக்கிறார். அதை எதிர்த்தோ, கண்டித்தோ சகோதரங்கள் மூச்சுக்கூட விடுகினமில்லையே, ஏன்? எண்டு பற்றிக்கோவுக்கு நெருக்கமானவை கேக்கினம். அப்புடியெண்டால் பால சிங்கத்தின்ர அம்மா - அம்மா பற்றிக்கோவின்ர அம்மா என்ன சும்மாவோ இல்லாட்டில் பற்றிக்கோவுக்குப் பின்னாலை ஒரு ஆயுதப் படையில்லையெண்ட தெனாவெட்டோ எண்டும் கேக்கினமுங்கோ. உதை விட இங்கிதமாக உந்தக் கேள்வியைக் கேட்க ஏலாதுங்கோ. ம்...புரிஞ்சு கொள்ளுறவை புரிஞ்சு கொண்டால் சரிதான்.

"**மாமியார்** உடைச்சால் மண் சட்டி. மருமகள் உடைச்சால் பொன் சட்டி" எண்டுவினம். அதுபோலை மலையகத்தில நடக்குதுங்கோ. உங்கத்தைய இளைஞர்கள் படையில சேரலாமெண்டும் அதுக்கான நேர்முகப் பரீட்சைகள் இடம் பெறப் போகுதெண்டும் செய்திகள் வந்ததெல்லோ. அதுக்கு ஒரு பக்கம் எதிர்ப்பும் இன்னொரு பக்கம் ஆதரவும் கிளம்பியிருக்கு எண்டது உண்மைதானுங்கோ. உப்பிடி சரியெண்டிறதுக்கும் பிழையெண்டிறதுக்கும் என்ன கெபாசிட்டி தேவையெண்டதில தானுங்கோ. விஷயமிருக்கு. அதாவது பாருங்கோ, சிங்கள அரசாங்கத்தில அழையா விருந்தாளியாப் போய் எலக்ஷனில கூட்டு சேர்ந்து வாக்குக் கேப்பினம், மற்ற விசயங்களில அண்ட கிரவுண்டில டீல் போடுவினம்.

சரியாகப் பழுத்துதெண்டால் அமைச்சுப் பொறுப்பும் எடுப்பினம். அப்புடியானவை சொல்லினம். சிங்கள படையில மலையக இளைஞர்கள் இணையக் கூடாதாம். ஏன் எண்டால் அது தமிழ் தேசியத்துக்கு துரோகமாம். இல்ல, நான் தெரியாமல்தான் கேக்கிறன், உவர் மண் வெட்டியார் அதானுங்கோ சந்திரமானசேகரனார் தமிழ் தேசிய வாதியெண்டால் என்னத்துக்கு சிங்கள அரசோடை டீல் போட்டுக் கொண்டு திரியிறார். உது துரோகம் இல்லையோ? அப்ப இவர் சிங்களத் தரப்போடை சேர்ந்தால் பொலிரிக்ஸ். மக்கள் சேர்ந்தால் துரோகமோ எண்டு வடிவான வேலருக்கு நெருக்கமாக இருக்கிற ஒருவர் கேக்கிறாருங்கோ.

**அடுத்த** கட்டப் பேச்சு மே பதினைஞ்சாம் திகதிக்குள்ள நடந்துதெண்டால் ஆலோசகர் மதுபாலாவுக்கு அதில கலந்துகொள்ள முடியாதாம். ஏன் எண்டால் அதுக்கு மருத்துவக் காரணங்களாம். எண்டாலும் சப் சுயூட்டா ருத்திரம் ஆடுறவரை அனுப்புவினம் எண்டும் செய்திகள் அடிபடுகுது. உதின்ர உள்ளார்ந்த அர்த்தத்தைப் பார்த்தால் மே பதினைஞ்சு வரைக்கும் ஜெனீவாவில பேச்சு நடக்காதெண்டது தானாக்கும். எப்புடியோ இரண்டாம் கட்டப் பேச்சை தள்ளிப் போடுறதெண்டு ஒரு திட்டத்தோடைதான் ரெண்டெழுத்தார் காய் நகர்த்தினமெண்டு விஷயம் தெரிஞ்சவை விசனப் படுகினம். உது உப்பிடி இருக்க, அதிகாரத் தரப்பு கேட்டுக்கொண்ட மாதிரி ரெண்டெழுத்தார் பேச்சுவார்த்தைகளில இருந்து ரிவேஸ் பண்ணிச்சினமெண்டால் ஐரோப்பிய நாடுகள் ரெண்டெழுத்தாரை தடை செய்ய வாய்ப்பு இருக்கும் எண்டு அறிவிச்சிருக்கினம். கடந்த காலங்களைப் போல் இருக்காமல் இந்த முறை சர்வதேச சமூகம் தன்ர ரீஎக்ஷனை உடன உடன வெளிக்காட்டி வருவது நல்லது தான் எண்டு புத்திஜீவிகள் சந்தோசப்படுகினம். கூடவே என்ன சொல்லினம் தெரியுமோ, உப்பிடி இன்டர்நெசனல் கொமிட்டி தெள்லோட்டினால் ரெண்டெழுத்தார் தங்கட இஷ்டத்துக்கு யுத்தத்துக்குப் போக மாட்டினமாம். புத்திஜீவிகளின்ர கணக்கு சரியோ, பிழையோவெண்டு வெயிட் என் சீ யுங்கோ...

"**காடு** கிடக்கிற கிடையில கரடி காவடி ஆடுச்சுதாம்" எண்டொரு கதையை எத்தின பேர் ஞாபகம் வச்சிருக்கியளோ தெரியாது. எனக்கெண்டால் நாட்டு நடப்பு எப்புடிப் போனாலும் எனக்கென்ன? எனக்கு வேண்டியதெல்லாம் பதவி எண்டு திரியிறவையைக் காணேக்க உந்தக் கதை பொட்டில அடிச்சாப் போல ஞாபகம் வருகுதுங்கோ... அட என்ர ஞாபகக் கதை ஒருபக்கமிருக்கட்டும். காவடி ஆடுறவர் யார் எண்டு தெரியுமோ? ஸ்டுடியோவில போய் அந்தக் காலத்து எம்.ஜி.ஆர். எண்ட நினைப்பில் ரெண்டு கையையும் கூப்பினாப் போல ஒரு பக்கமா உயர்த்திக் கொண்டு ஒரு வெறிச்ச பார்வையோடை போஸ் குடுத்து வாக்குக் கேக்கிற கொஞ்சப் பேர் திரியினம். அதில ஒருவர் வேகாத ஆணியன். ஏன் உதைச் சொல்லுறன் எண்டால் இப்பவெல்லாம் தமிழ் நாளிதழ்களில பக்கத்துக்குப் பக்கம் அங்க சுட்டான், இங்க சுட்டான் எண்ட செய்திகளும், கண்டனச் செய்திகளும் பரபரப்பாக இருக்கேக்க, அதுகளுக்காக ஒரு அறிக்கை கூட விடாத தன்மானத் தமிழன்மார், தங்களுக்கு வாக்குப் போடுங்கோ எண்டு தன்மானத் தமிழரிட்டக் கேக்கினமாம். என்னதான் சொல்லுங்கோ. ஸ்டுடியோவில போய் போஸ் குடுத்து கும்பிட்டு போட்டோ பிடிக்கிற பொலிரிக்ஸ்காரரைக் கண்டாலே வெறுப்பு வெறுப்பா வருகுது எண்டு வாத்தியார் சொல்லேக்க யாரை நினைச்சு சிரிக்கிறதெண்டே தெரியுதில்லைங்கோ.


**தலைநகருக்கும்** யாழ்ப்பாணத்துக்குமிடையில ரயில்ப் பயணம் தொடங்கி ஐம்பது ஆண்டுகள் ஆகுது எண்டொரு நினைவு நிகழ்ச்சி போன இருபத்தி மூனாம் திகதி வவுனியாவில கொண்டாடிச்சினம். நாட்டில ஓடின ரயில்களிலேயே கூடுதல் வசூலை வாரித் தந்தது யாழ்தேவி ரயில் தானேண்டு அந்த நிகழ்ச்சியில புகழாரம் சூட்டிப் பேசிச்சினம். அது மட்டுமில்லாம நாட்டில இருக்கிற சொரிங்கோ. இருந்த நீளமான ரயில் பாதை தலைநகருக்கும் - காங்கேசன் துறைக்குமான பாதைதானாமுங்கோ. யாழ்ப்பாணத்துக்கு ரயில் ஓடின காலம் மறந்து பல வருடங்களாகிட்டுது. இண்டைக்கு யாரும் உதைப் பத்திக் கதைக்கவும் மாட்டினம். ஆனால் இப்ப நினைச்சுப் பார்க்கேக்க சிந்தனைக்குள்ள ஏதோ ஒரு விரக்தியும் வரத்தானுங்கோ செய்யுது. இண்டைக்கு ரயிலுமில்லாம, தண்டவாளமுமில்லாம யாழ்ப்பாணமோ, ரயிலோ எண்டு கதைக்கிற நிலையாயிட்டுது. ஐம்பது வருஷம் எண்டாலும் நேற்றைக்கு மாதிரி இருக்குதுங்கோ. இப்ப தண்டவாளமும் - சிலிப்பர் கட்டைகளும் யாரின்ர பங்கர்களையும் காவலரண்களையும் தாங்கிக் கொண்டு கிடக்குதோ எண்டு யோசிக்கேக்கே, அந்தக் காலத்தில நான் படிச்ச பாட்டொன்று எங்கையோ கேக்குமாப் போல இருக்குதுங்கோ. என்ன பாட்டு தெரியுமே, 'அன்றொரு நாள் இதே ரயிலில்...' எண்ட பாட்டுத்தானுங்கோ...

# வீதி




**பிறந்து** வளர்ந்த ஊரையே ஒரு தனி உலகமாக நினைத்து சுத்திவந்த காலங்களை இப்போது நினைக்கும் போது சிரிப்புத்தான் வருகிறது. எவ்வளவு பெரிய அறியாமை அது. பாடசாலையின் பெரிய கதவுக்கும் வீட்டுக்குமிடையில் எல்லாமுமே மறந்துபோகும். வீதியின் ஓரமாகப் போகும்போது வேலி ஓரமாகவே மாமரக் கிளைகள் வீதியை நோக்கித் துருத்திக் கொண்டு இருக்கும். வேலிக்கு இடையில் புகுந்து கிளைகளை வளைத்து மாங்காய்களைப் பறிக்காதுபோனால் அன்று பாடசாலைக்குப் போன மாதிரியே இருக்காது. இப்படி மா மரம், நெல்லி மரம், பப்பாசி மரம் என்று தாவித் தாவித் திரிந்த பொழுதுகளை இன்று நினைத்துப் பார்க்கிறேன். இதற்குமிடையில் போக்கடிக்கு அருகில் மைப்பழம் என்பார்கள் கூசாப்பழத்தை. அதைப் பறித்து பெருமிதத்தில் காற்சட்டைப் பொக்கற்றுக்குள் போட்டு விட்டால் போதும் நாவல் கலரில் அழுக்காகி விடும்.

பள்ளிக்கூடத்தில் ஒழுங்காகப் படித்தேனா, இல்லையா என்பதைக் கேட்பதற்கு முன்னமே அம்மாவிடம் இந்த மரங்கள் தாவிய அழுக்கும், நாவல் பழ அழுக்கும் காட்டிக் கொடுத்துவிடும்.



வீட்டுக்கும் பாடசாலைக்கும் இடையில் சுமார் அரை மைல் தூரம் தான். ஒரே நேர் வீதி. அது தான் எங்களுக்குப் பிரதான வீதியும். ஆஸ்பத்திரியடி சந்தியால் கடலின் கரைக்குச் சமாந்தரமாகப் போகும் மட்டக்களப்பு வீதிக்கு இடுப்பிலிருந்து துவங்குவதுபோல் சந்திக்கடையிலிருந்து ஆரம்பமாகிறது அந்தத் தார்சாலை. அந்த வீதியால் ஒவ்வொரு தடவையும் நான் போகும்போது ஊர்ப்பெருசுகள் கூறுவது எனக்கு வியப்பாகவே இருக்கும். இந்த வீதி இப்படியே நேரா பெரிய கிண்ணியாவால் போய் காக்காமுனையால் போகிறதாம் என்று. எனக்குச் சந்தேகமெல்லாம் இந்த வீதி போகிறதா அல்லது அது வரைக்குமாக இந்த வீதி போடப்பட்டிருக்கிறதா என்று. ஆனால் கடைசிவரை யாரும் வீதி போடப்பட்டிருப்பதாகச் சொல்லவில்லை; போவதாகத்தான் சொல்கிறார்கள்.

வீதிக்கு வரும் போதெல்லாம், "போகின்ற வீதி போகிற போக்கில் என்னையும் கூட்டிக் கொண்டுபோய் பாடசாலைக்கு அருகில் விட்டு விட்டுப் போகட்டுமே" என நடக்காமலே நின்று விடுவேன். ஆனால் வீதி என் சந்தேகங்களையோ, என் எண்ணங்களையோ பிரதிபலிப்பதாக இல்லாமல் அதுபாட்டுக்கு ஒரு கறுப்பு யானையின் முதுகுபோல் இருக்கும். என்னைக் கடந்து ஒரு கார் சீறிப்போகும் அப்போதுகூட வீதி தன்பாட்டுக்கு மௌனமாகவே இருக்கும். எனக்கு ஒரு யானையின் முதுகில் ஏறி நிற்பது போல் சிலசமயம் பெருமையாக இருக்கும். ஆனாலும் சந்திக் கடைக்கு அருகிலிருந்து கண்ணுக்கு எட்டிய தூரத்துக்குப் பார்க்கும்போது ஆரம்பித்த இடத்திலிருந்து கொஞ்சம் நேராகவும் கொஞ்சம் தூரம் அதிகரிக்க அதிகரிக்க லேசாக வளைந்தும், நிமிர்ந்தும், நீண்டும் கிடக்கிறது வீதி. அப்போது ஒரு கருநாகப் பாம்பு போலும் எனக்கு நினைக்கத் தோன்றும்.

ஒரு நாள் மனதுக்குள் நினைத்துக் கொண் டேன்... சந்திக்கடையிலிருந்து பார்க்கும்போது தெரிகிற தூரம் வரை போகவேணும், அப்போது எனக்குத் தெரிந்த, தெரியாத வளைவுகள் எல்லாம் எப்படி இருக்கின்றது என்று தெரிந்துகொள்ள வேண்டும் என்று.

அது ஒரு ஞாயிற்றுக்கிழமை. வீட்டிலிருந்தால் அம்மா வேலியைத் திருத்திக் கட்டச் சொல்லுவார். அதுமட்டுமில்லாமல் தம்பி எங்கோ வீதியால் அநாதரவாக ஓடி வந்த நாய்க்குட்டியைப் பிடித்துக் கொண்டு வந்து தற்காலிகமாகக் கோழிக்கூட்டுக்குள் அடைத்து வைத்திருக்கிறான். இன்றைக்கு லீவு என்பதால் சின்ன பனை மட்டை, வாகை மரக்கிளை வெட்டி நாய்க்குப் பொருத்தமாக சின்னக்கூடு கட்டித் தரும் படி கெஞ்சுவான். முடியாதென்றால் அம்மாவிடம் அதை ஒரு அனுதாபத்தோடு கூடிய முறைப்பாடாகப் போட்டுவைப்பான். அம்மா அப்போது வேலையாக இருந்தால் என் முதுகுக்குச் சுகம். இல்லாவிட்டால் இரண்டு அகப்பைக் காம்புகளை என்முதுகில் அடித்து உடைத்து விட்டுத்தான் அடுத்த வேலைக்குப் போவார். அதற்குப் பயந்து பாடசாலை லீவு நாள் என்றால் நானே அப்பா நன்றாகத் தீட்டி வைத்திருக்கும் பெரிய கத்தியை எடுத்துக் கொண்டு போய்விடுவேன். வேலிகளில் புதிதாக ஏற்பட்டிருக்கும் பாதிப்புகளைத் திருத்துவது, குப்பை போடுவதற்குக் கிணறு போல் குழி கிண்டுவது என்று எதையாவது செய்து கொண்டிருப்பேன். ஆனால் அன்று எதையும் வீட்டிலிருந்து செய்ய மனம் இடந் தருவதாயில்லை. வீதியைப் பற்றி ஓரளவாவது தெரிந்து கொள்ள வெண்டுமென்ற திடமான முடிவு என்னை வீட்டை விட்டுத் துரத்தியது.

அப்பாவினுடைய பழைய சைக்கிள் படலையில் சாய்ந்தபடி நின்று கொண்டிருந்தது. கேட்கப் பயம். போன ஞாயிற்றுக்கிழமை கடைக்குப் போய் வரும்போது பிள்ளையார் கோவிலுக்கு முன்பாக ஒரு சொறி நாய் எங்கோ பார்த்துக் கொண்டு வந்து சைக்கிளில் மோதியதால் நான் கீழே விழுந்ததும், அப்பா நான் விழுந்த உராய்வுகளையும், நோவுகளையும் பொருட்படுத்தாமல் சைக்கிள் நெளிந்துவிட்ட கோபத்தில் அடித்தது ஞாபகம் வரவே அந்த ஆசை வெறுத்துப் போய்விட்டது.

கால் நடையாகவே இன்று முடியுமான தூரம் வரை போய்ப் பார்த்துவிட்டு வருவது என்ற முடிவோடு சந்திக்கடைக்கு முன்பாக வந்து நின்று பார்த்துக் கொண்டேன். முதலாவது வளைவு தெரிகிறது. போக்கடிக்குக் கொஞ்சம் தள்ளி இடத்தைச் சரியாக அடையாளப்படுத்திக் கொண்டு நடந்தேன்.

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)

**தருவது -தேசன்**




இலங்கையில் இருந்து வெளிவரும் தமிழ் மொழி மூல இலத்திரனியல், அச்சு ஊடகங்களில் ஒலி, ஒளிபரப்பாகும், பிரசுரிக்கப்படும் சமகால செய்திகள், விடயதானங்கள் மற்றும் நிகழ்ச்சிகள் தொடர்பான விமர்சனங்கள் வாசகர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றன. விமர்சனங்கள் இறுக்கமாகவும் சுருக்கமாகவும், ஆக்கபூர்வமானவையாகவும் இருக்கவேண்டும். பயன்மிக்கது என ஆசிரிய பீடத்தினால் கருதப்படும் விமர்சனங்களுக்கு முரசு இடமளிக்கும்.

**அனுப்ப வேண்டிய முகவரி:**
**முரசு விமர்சனம்**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ. இல - 1772**
**கொழும்பு.**

## திருத்துமா 'ஐ' அலைவரிசை?

**சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு ரூபவாஹினி 'ஐ' அலைவரிசை பல நிகழ்ச்சிகளை ஒளிபரப்பியது வரவேற்கத்தக்கதாக இருந்தாலும், புத்தாண்டுக்கு முதல் நாள் பகல், 'ஜீன்ஸ்' திரைப்படமும் புத்தாண்டு தினத்தன்று இரவு 10 மணிக்கு 'சித்திரம் பேசுதடி' திரைப்படமும் ஒளிபரப்பாகவிருப்பதாக விளம்பரப்படுத்திவிட்டு, இரு படங்களும் ஒளிபரப்பப்படவில்லை. ஏன் 'ஐ' அலைவரிசைக்கு ரசிகர்களை ஏமாற்ற எண்ணமோ? அது மட்டுமல்ல, படம் ஓடிக் கொண்டிருக்கும் போது போட்ட விளம்பரத்தை திரும்பத் திரும்பப் போட்டு அனைவரையும் சலிப்படையச் செய்ய வேண்டாம். இனி மேலாவது தவறுகளைத் திருத்தி கொள்ளுமா 'ஐ' அலைவரிசை,**

*கே. கிருபா, அக்கரைப்பற்று.*

## சிறுகதை, கவிதை எழுத்தாளர்களுக்கு....

முரசுக்காக சிறுகதைகளை எழுதிவரும் அன்பு எழுத்தாளர்களே! எதிர்காலத்தில் எழுத்துப் பணியில் ஈடுபட இருப்பவர்களே! முரசுக்காக சிறுகதைகள் எழுதுகின்றபோது கையெழுத்துப் பிரதியாக இருந்தால் மூன்று பக்கங்களும், தட்டச்சு செய்திருந்தால் ஒன்றரைப் பக்கம் வரக்கூடிய விதத்திலும் எழுதி அனுப்பி வையுங்கள்.

கவிதை எழுதுபவர்கள் தொடர் சங்கிலியாக எழுதாமல் எடுத்துக்கொள்ளும் விடயத்தை சிறியதாகவும் சுவையாகவும் எழுதுமாறு கேட்டுக்கொள்கிறோம். முரசு எழுத்தாளர்களாக இருப்பவர்களைக் கௌரவிக்கும் அதேவேளை, புதிய புதிய எழுத்தாளர்களுக்குக் களம் அமைத்துக் கொடுக்கவும் வாசகர்கள் ஒத்துழைப்பார்கள் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

நன்றி.

- ஆசிரியர்

## தினமுரசு சந்தா விபரம்

**சந்தாக் கட்டண அதிகரிப்பு விபரம்**

இலங்கையில் தபால் கட்டண அதிகரிப்பு காரணமாக சந்தாக் கட்டணமும் உயர்த்தப்பட்டுள்ளது. அது சம்பந்தமான விபரம் பின்வருமாறு:

| நாடுகள் | ஒருவருடம் | 6 மாதம் | 3 மாதம் |
|---|---|---|---|
| ஐரோப்பிய நாடுகள் | ரூ. 4,300 | ரூ.2,150 | ரூ.1,100 |
| அமெரிக்கா, கனடா | ரூ. 4,900 | ரூ.2,450 | ரூ.1,250 |
| மத்திய கிழக்கு நாடுகள் | ரூ. 3,800 | ரூ.1,900 | ரூ. 950 |
| உள்நூர் | ரூ. 1,500 | ரூ.750 | ரூ. 375 |

சந்தா செலுத்தி தபாலில் தினமுரசு வாரமலரைப் பெற விரும்புவோர் D.D. Enterprises என்ற பெயரில் எழுதப்பட்ட காசோலைகள் அல்லது வங்கிக் கட்டளைகளை முகாமையாளர், தினமுரசு 16A, Nelson Place, Wellawatta, Colombo-06. Srilanka என்ற முகவரிக்கு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். இந்த முகவரிக்கு வந்து நேரில் பணம் செலுத்தவும் முடியும்.

உள்ளூரில் சந்தா பெற விரும்புவோர் சந்தாத் தொகையை காசுக் கட்டளையாக வெள்ளவத்தை தபாற்கந்தோரில் மாற்றும் வண்ணம் "Manager, Thinamurasu Varamalar 16A, Nelson Place, Wellawatta, Colombo-06. என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

ஈ.மெயில் :- (E-mail):- murasu@sltnet.lk

**தெய்வீக மருத்துவம்**

சர்வதேச சமூக மாந்திரீக மருத்துவ தெய்வீக சேவை

Goverment Approved Charity Regd No - HA/4/BT/219

டாக்டர் பாலுசோதிடர் S.A.M.P.J.P.(SL)

கிரக தோஷம், காலப்பகையால் பிரிந்த காதலர்கள், கணவன் - மனைவி ஒன்று சேர, வெறுத்த உறவினர்கள், வேண்டியவர்கள் அன்பாக இருக்க, காதல் திருமணம் எல்லோருடைய சம்மதத்துடன் நிறைவேற மற்றும் வேறு தீவினைகளால் வாழ்க்கையில் தீராத மனநோய், தாழ்வு மனப்பான்மை, கல்வி, தொழில், விவாகம், வெளிநாட்டுப் பிரயாணம், வேறு முயற்சித் தடை, குடும்ப வாழ்க்கையில் சந்தோஷமின்மை, வெளியில் சொல்ல வெட்கமான பிரச்சினைகள், தீய பழக்கம், மனிதத் தீமை, மருந்தீடு போன்ற தீமைகளில் இருந்து விடுபட்டு சந்தோஷமாக வாழ, பிரச்சினைகளுக்குரிய காரணத்தை காண்டம் இறைசக்தியால் கண்டறிந்து துன்பம் நீங்கி மகிழ்ச்சியாக வாழ புனித புராதன தீங்கற்ற மஹா மாந்திரீக தெய்வீக மருத்துவத்தினால் நிவர்த்தி அளிக்கப்படுகிறது.

நேரில் வரமுடியாதோர், வெளிநாட்டவர்கள் தம் பிரச்சினையை எழுதினால் அல்லது தொலைபேசி, ஃபக்ஸ் மூலம் தொடர்பு கொண்டு, உடன் பயன் தரும் தெய்வீக மருத்துவப் பொருட்களை விசேட தபால் மூலம் பெற்று தம் எண்ணங்களை நிறைவேற்றிக்கொள்கிறார்கள். (இரகசியம் பாதுகாக்கப்படும்.)

Theiveegam Srilanka
Head Office
Batticaloa


தெய்வீகம் ஸ்ரீலங்கா
தலைமையகம்
மட்டக்களப்பு

Tele/Fax : 065-2224825, +94777032844. Balu Sothidar @ hotmail.com.

"வாழ்வினிருளை நீக்கி ஒளியையேற்றுவோம்"
"DISPEL DARKNESS LIFE AND LET LIGHT SHINE"







**மலையாள மாந்திரீகம்**

மலையாள மாந்திரீக சக்தியால் பிரிந்தவர்கள் ஒன்று சேர, கணவன் - மனைவி பிணக்கு தீர்ந்து, ஒற்றுமையாக இருக்க, திருமணம் கை கூட, மனங்கவர்ந்த காதலன் காதலி ஒன்று சேர, கல்வி ஞான கவசம் பெற, குபேர வாழ்வு கிட்ட, வெளிநாட்டு பிரயாணத்தடை நீங்க, சகல தோஷங்களும் நிவர்த்தி செய்து கொள்ள அனைத்து விடயங்களுக்கும் நேரில் வருகை தரவும்.

அத்துடன் அருள் ஞானத்துடன் கூறப்படும் ஜாதகங்கள் என்றுமே பிழைத்தது இல்லை. நடந்தது, நடக்க இருப்பது, எண்ணியது எண்ணியவாறு நடக்க இருப்பது, எண்ணியது எண்ணியவாறு எத்தனையாம் திகதி எத்தனை மணிக்கு நிறைவேறும் என்பதை திட்டவட்டமாகத் தெரிந்து கொள்ளவும், மற்றும் கைரேகை பார்த்து தெரிந்து கொள்ள பிறந்த திகதி தேவையில்லை.

வாங்கும் பணத்திற்கு உத்தரவாதம் கொடுப்பதென்றால் அது நான் மட்டுமே! வெளிநாட்டவர்களுக்கு விசேட சலுகையும் 24 மணித்தியால தொலைபேசி சேவையும் உண்டு.

Prof.Dr P.K. Samy (J.D.G.N) JP
Malayala Manthirika Uchchatta Peedam
Sri Durkadevi Aalayam ,162, Kotahena Street,
May field Road, Colombo - 13, Srilanka

T/NO 2342463/2342464
2470615
Fax :- 0094 -11 - 2344831
web- www.drpksamy .com




# ‘ஆச்சே’ பிரச்சினைத் தீர்விலிருந்து கற்றுக் கொள்ள வேண்டியவை - 11

**இந்தோனேசியாவின் ஆச்சே மாகாண சுதந்திர இயக்கத்தின் (காம்) பிரிவினைவாதக் கோரிக்கையை பின்லாந்துத் தன்னார்வத் தொண்டர் நிறுவனமொன்றின் முன்முயற்சியின் பேரில் வெற்றிகரமாகக் கையாளப்பட்ட விதம் குறித்து நளின் சுவாரிஸ் என்ற அரசியல் ஆய்வாளர் எழுதிய கட்டுரையிலிருந்து சில முக்கிய பகுதிகளைக் கடந்த வாரம் தந்தோம். மிகுதி இவ்வாரம் வெளிவருகிறது. இலங்கையின் இருதரப்புப் பிரச்சினைத் தீர்வில் நோர்வேயின் ஏற்பாட்டாளர் பணியில் ஏற்பட்டிருக்கும் தோல்வியை இந்தோனேசியப் பிரச்சினைத் தீர்வோடு ஓர் ஒப்புநோக்கில் இக் கட்டுரை வரையப்பட்டிருந்தது. ஒற்றையாட்சி அரசியலமைப்பு வரைமுறையின் கீழ் ஆச்சே பிரச்சினைக்குச் சம்பந்தப்பட்ட இரு தரப்புகளுமே இணக்கம் கண்டுள்ளன. அது அந்த நாட்டின் அரசியல், பூகோள, சமூக, கலாசார, பொருளாதார, இராணுவ நிலைமைக்கு ஏற்புடையதென இரு தரப்புமே இணக்கம் கண்டன. ஆனால் இலங்கையின் ஸ்தூல நிலைமைகள் வேறு. சமஷ்டிப் பாணியிலான அதிகாரப் பகிர்வு முறையே இந்த நாட்டுக்கு உகந்ததென்பது பெரும்பாலான கட்சிகளின் முடிவாகும். எல்லாவற்றுக்கும் மேலாகப் பிணக்கில் சம்பந்தப்பட்டிருக்கும் இரு தரப்புகளும் மக்களின் மனிதாபிமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முன்னுரிமை வழங்கி, நேர்மையோடும் விசுவாசத்தோடும் அர்ப்பணிப்புச் சிந்தையோடும் செயற்பட்டால் இலங்கைப் பிரச்சினைக்கு இறுதி முடிவு காண்பது வெகு இலகுவாகி விடுமென்பதே உண்மையாகும்.**

*சென்ற வாரத் தொடர்ச்சி......*

**இந்தோனேசிய** அரசாங்கமும் ‘காம்’ தீவிரவாத இயக்கமும் இரண்டாவது மார்க்கத் தீர்வு முயற்சியைக் கையாண்டன. ஏற்பாட்டாளராகச் செயற்பட்ட பின்லாந்தும், பின்லாந்தின் முன்னாள் ஜனாதிபதியின் தலைமையிலான சீ.எம்.ஐ.என்றழைக்கப்படும் நெருக்கடி முகாமைத்துவ முன்முயற்சி அமைப்பும் ஈட்டியவற்றை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். 2004ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 25ஆம் திகதி ஆச்சேயைச் சுனாமி தாக்கியது. பின்லாந்தின் தலை நகரான ஹெல்சிங்கியில் ஜனவரி 27-29ஆம் திகதிகளில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகின. ஐந்து மாதா மாத சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. ஒவ்வொரு மாதத்துக்கு இடையிலுமுள்ள காலகட்டத்தில் தத்தமது தரப்பினரோடு கலந்து பேசி, தேவையென்றால் திருத்தங்களை முன் வைப்பதற்கு அவை வசதியாக அமைந்தன. ஒவ்வொரு கட்டத்திலும் இணக்கங்கள் ஏற்படுத்தப்பட்டன. மே மாதம் 23ஆம் திகதிக்கும் 31ஆம் திகதிக்குமிடையில் நடைபெற்ற நான்காவது சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் பின்னர், நகல் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றினைக் காம் இயக்கம் முன்வைத்தது. இது பற்றிக் கலந்துரையாடப்பட்டு ஜூலை 12இலிருந்து இறுதிப் பேச்சுகள் நடத்தப்பட்டன. விரிவான சமாதான மற்றும் புனரமைப்பு வேலைத் திட்டங்களை உள்ளடக்கிய புரிந்துணர்வு ஒப்பந்தம், 2005ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது. புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட கால அட்டவணைக்கேற்ப குறிப்பிடப்பட்ட திட்டங்கள் ஒழுங்காக, அமுல்படுத்தப்பட்டு வருகின்றன.

புலிகளைப் போன்று ‘காம்’ தீவிரவாத இயக்கம், இந்தோனேசியாவின் ஏனைய பகுதிகளில் அரசாங்க மற்றும் சிவிலியன் இலக்குகள் மீது பயங்கரவாதத் தாக்குதல்களையோ, தற்கொலைத் தாக்குதல்களையோ நடத்தவில்லை. வெளிநாட்டு அரசாங்கங்களால் பயங்கர வாத இயக்கமென ‘காம்’ அமைப்பு தடை செய்யப்படவில்லை.

இந்தோனேசிய அரசாங்கமும் ‘காம்’ இயக்கமென தமது ஏற்பாட்டாளர்களுடன் பேச்சுவார்த்தைக்கு வந்தபோது, ஆச்சே மக்களின் மனிதாபிமான அம்சங்களுக்கே அவர்கள் முன்னுரிமை வழங்கினர். முப்பது வருட யுத்தத்தாலும் மத்திய அரசின் பாரா முகத்தாலும் நாசமாக்கப்பட்ட ஆச்சே மாகாணமும் மக்களும் பயங்கரமான சுனாமியால் அழித்தொழிக் கப்பட்டன.

ஆச்சே மக்கள், அரசியல் அழுத்தங்களால் பாதிக்கப்படக் கூடாதென்பதையும் இராணுவ வசதி களுக்காகக் கையாளப் படக் கூடாதென்றும் சம்பந் தப்பட்ட மூன்று தரப்புகளுமே இணக்கம் தெரிவித்தன. மக்களின் துன்ப, துயரங்களுக்கு முகங்கொடுப்பதே சிறந்ததென அவர்கள் உறுதி கொண்டனர். யுத்தத்துக்கு விரைவாகவும் நிரந்தரமாகவும் முடிவுகட்டி, விரிவான சமாதான மற்றும் புனரமைப்புத் திட்டத்தை முன்வைப்பதே வழியெனவும் தீர்மானித்தனர். தற்போது இந்தோனேசியப் பாராளுமன்றத்தின் முன் வைக்கப்பட்டிருக்கும் நகல் சட்டவாக்கத்தில் ஆச்சே புரிந்துணர்வு ஒப்பந்தம் உள்ளடக்கப்பட்டிருக்கிறது. இது குறித்துக் கருத்து வெளியிட்ட இந்தோனேசியாவின் நீதி மற்றும் மனித உரிமைகள் அமைச்சர் ஹமீத் அவாலுதீன் கீழ்க்கண்ட வாறு கூறினார். “முப்பது வருடங்களாக ஆச்சேயில் இரத்தம் சிந்தப்பட்டு வந்தது. இப்போது நாம் அதனை முடிவுக்குக் கொண்டு வந்திருக்கிறோம். இச் சட்டத்தை ஏற்படுத்துவதே, சமாதானத்தைப் பேணுவதற்கான, சிறந்த வாகனமாகும்” என்று கூறினார்.

இந்தோனேசிய பந்தோபஸ்து அமைச்சர் ஆரம்பத்திலேயே தெளிவான அறிக்கையொன்றினை விடுத்தார். “ஆச்சே பிரச்சினைக்கு இருக்கக்கூடிய ஒரேயொரு தீர்வு, அதற்கு விசேட சுயாட்சி வழங்கப்பட வேண்டுமென்பதே எமது தெளிவான நிலைப்பாடாகும். அத்துடன் இந்தோனேசியாவின் ஒற்றையாட்சி வரம்புக்குள் ‘காம்’ இயக்கம் வரவேண்டும்” என்று கூறினார்.

ஹெல்சிங்கியின் அணுகுமுறையில், தனிநாட்டுக்கான போராட்டத்தைக் கைவிட்டு, ஆயுதங்களைக் களைய ‘காம்’ இயக்கம் இணக்கம் தெரிவித்ததுமே இறுதி ஒப்பந்த விடயங்களை மேற்கொள்வதற்கான வழி திறந்து விடப்பட்டது. முதலில் இணக்கம் காணப்பட்ட பின்னரேயே, அதனை மேற்கொள்வதற்கான சட்ட வரைமுறைகள் பற்றி இரு தரப்புகளும் கலந்துரையாட ஆரம்பித்தன. இந்தோனேசிய அரசு தரப்பில் பேச்சுவார்த்தைக்கு தலைமை தாங்கிய உப ஜனாதிபதி, இந்தோனேசியப் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவைப் பெறுவதற்குத் தனது ஆற்றலைப் பயன்படுத்தினார். ஒரு வன்செயல் கிளர்ச்சிக் குழுவுக்கு அதிக சலுகைகள் வழங்கப்படுவதாகக் கருதிய எம்.பி.க்களை வழிக்குக் கொண்டு வந்தார் இந்தோனேசிய உப ஜனாதிபதி.

இந்தோனேசியாவின் ஒற்றையாட்சி அரசியலமைப்பு வரம்புக்குள் ஆச்சேக்கு வழங்கப்பட்டுள்ள தூரதிருஷ்டி மிக்க சுயாட்சி அம்சங்கள் வருமாறு : இவை ஹெல் சிங்கியின் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் உள்ளடக்கப் பட்டிருந்தன.

* ஆச்சே மாகாணத்தின் நிதி, பாதுகாப்பு, வெளிநாட்டுக் கொள்கை ஆகியவற்றை இந்தோனேசியா கட்டுப்படுத்தும்.

* ஆச்சேயில் அரச துருப்புகளின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்துதல்

* உலகளாவிய அடிப்படையில் ஆச்சே சட்டவாக்க சபை, ஆச்சேயின் சட்டதிட்டங்களை மீள உருவாக்க வேண்டும். மனித உரிமைகள் சம்பந்தமான கொள்கைகள் மற்றும் குடியியல், அரசியல் உரிமைகள் பற்றிய ஐ.நா.ஏற்பாடுகளின் படி இவைமேற்கொள்ள வேண்டும்

**பொருளாதார மற்றும் கலாசார உரிமைகள்**

* ஆச்சேயில் பல்கட்சி ஜனநாயகத்துக்கு அனுமதியளிக்கும் வகையில் இந்தோனேசியச் சட்டத்தில் மாற்றங்கள்.

* மோதல் நிலவிய காலகட்டத்தில் இடம்பெற்ற துஷ்பிரயோகங்களை அம்பலப்படுத்துவதற்காக மனித உரிமைகள் சம்பந்தமான நீதிமன்றமொன்றினை நிறுவுதல்.

* ஆச்சேயில் உண்மைகளைக் கண்டறிந்து, மீளிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு ஆணைக்குழுவொன்றினை அமைத்தல்.

* ஆச்சேக்கு வசதி, வாய்ப்புகளை அளிக்கக்கூடிய தீர்மானங்களை மத்திய அரசாங்கம் மேற்கொள்ளுதல். ஆச்சே சட்டவாக்க சபையுடன் கலந்துரையாடி, அதன் இணக்கத்துடன் இவை மேற்கொள்ளப்பட வேண்டும்.

* இயற்கை வளங்களில் எழுபது சதவீதமானவை ஆச்சேயில் இருக்கக் கூடியதான ஆணையை உருவாக்குதல்.

* உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் வர்த்தக வாய்ப்புகளைத் தேடுவதற்கும் மேற்கொள்வதற்கும் ஆச்சேக்கு அனுமதி வழங்குதல்.

தேசிய மொழியான இந்தோனேசிய பஹாசா மொழியோடு ஆச்சே மொழியும் ஆச்சே பாடசாலைகளில் போதிக்கப்படும்.

* ஆச்சேயின் பிராந்தியக் கொடி, சின்னம், கீதம் ஆகியவற்றைப் பயன்படுத்த அனுமதியளித்தல்.

திட்டமிட்டவாறு 2005ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் திகதி, ‘காம்’ போராளிகளின் ஆயுதங்கள் களையப்பட்டு, சுமார் ஆயிரம் ஆயுதங்கள் கண் காணிப்புக் குழுவிடம் கையளிக்கப்பட்டுப் பகிரங்கமாக அழிக்கப்பட்டன. இதேவேளை, யுத்தக் காலத்தின்போது



ஆச்சே போராளிகளின் ஒரு பகுதியினரையும், இந்தோனேசிய தேசிய இராணுவத்தின் ஒரு பகுதியினரையும் படத்தில் காணலாம்

கொண்டுவரப்பட்ட மேலதிக இந்தோனேசியத் துருப்புகள் வாபஸ் பெறப்பட்டன. இந்தோனேசியாவின் சாதாரண துருப்புகளும் பொலிஸாரும் மட்டுமே ஆச்சேயில் தொடர்ந்தும் இருப்பர்.

இந்தோனேசிய அரசாங்கத்துக்கும் ‘காம்’ இயக்கத்துக்கு மிடையிலான ஒப்பந்த விதிகள் மீறப்பட்டால், இந்தோனேசியச் சட்டதிட்டங்களின்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஆச்சே கண்காணிப்புக் குழுவின் ஒப்பந்தத்தின்படி உப விதியொன்று சேர்க்கப்பட்டிருந்தது.

‘காம்’ இயக்கத் தலைவர்களின் முற்றுமுழுதான ஆதரவுடன் இந்தோனேசிய அரசாங்கம் உத்தியோக பூர்வமாக விடுத்த அழைப்பின் பேரிலேயே ஆச்சே கண்காணிப்புக் குழு ஆச்சேக்கு வருகை தந்து நிலை கொண்டுள்ளது. இந்தோனேசியாவின் பிராந்திய ஒருமைப்பாட்டுக்கு முற்றுமுழுதாக மதிப்பளிக்கவும், இந்தோனேசியக் குடியரசின் ஒற்றையாட்சி அமைப்புக்குள் ஆச்சேயின் எதிர்காலம் அமைந்திருப்பதைக் கவனித்துக் கொள்ளவும், இதனூடாக வலுவாக நடுநிலையைப் பேணவும் ஆச்சே கண்காணிப்புக் குழு உறுதியளித் துள்ளது. கண்காணிப்புக் குழுவின் சகல பணிகளையும் நிறைவேற்றத் தேவையான சம்பூர்ண திறன்களையும் கொண்ட ஆளணியினரை ஆச்சே கண்காணிப்புக் குழு கொண்டுள்ளது. அது ஓர் இராணுவக் குழுவல்ல. அது வொரு சிவிலியன் குழுவாகும். அதன் அங்கத்தவர்கள் ஆயுதங்கள் வைத்திருப்பதில்லை. ஆனால் ஆயுதக் களைவையும் அதன் பின்னர் சமாதானத்துக்கு ஏற்படக்கூடிய அச்சுறுத்தல்களையும் கண்காணிப்பதற்கு இராணுவ அனுபவமுள்ளவர்கள் அந்தக் குழுவில் உள் ளனர். ஆச்சே கண்காணிப்புக் குழுவின் செயற்பாடு களுக்கு ஐரோப்பிய ஒன்றியம் நிதியுதவி வழங்குகிறது. தற்போது இக் குழுவில் 219 அங்கத்தவர்கள் உள்ளனர். ஐரோப்பியர்களின் செயற்பாடாக அது விளங்கக் கூடாதென்பதற்காக ஆசியான் நாடுகளைச் சேர்ந்த (தாய் லாந்து, மலேசியா, புரூணை, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர்) 91 அங்கத்தவர்களும் இக் குழுவில் உள்ளனர். ஒஸ்ரியா, டென்மார்க், பின்லாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, அயர்லாந்து, இத்தாலி, லிதுவேனியா, நெதர்லாந்து, நோர்வே, ஸ்பெயின், சுவீடன், சுவிற்சர்லாந்து, ஐக்கிய இராஜ்யம் ஆகிய நாடுகளைச் சேர்ந்த 129 அங்கத்தவர்களைக் கொண்ட ஐரோப்பியக் குழுவினரோடு இணைந்து ‘ஆசியான்’ நாட்டவர்கள் செயற்படுகின்றனர். நோர்வேயும், சுவிற்சர்லாந்தும் ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் நாடுகளல்ல. அனைத்து அங்கத்த வர்களுமே ஐரோப்பிய ஒன்றியத்தின் குடையின் கீழ் செயற்படுகிறார்கள். அனுபவம் வாய்ந்த டச்சு இராஜ தந்திரியான பீற்றர் பெய்த் தற்போது ஆச்சே கண் காணிப்புக் குழுவுக்குத் தலைமை வகிக்கிறார்.

இந்தோனேசிய அரசாங்கத்துக்கும் ‘காம்’ பிரிவி னைவாத இயக்கத்துக்குமிடையில் மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் ஆச்சே கண்காணிப்புக் குழுவின் கடமைகளும் பணிகளும் தெளிவாக உள்ளடக் கப்பட்டிருந்தன. அவையாவன :

* ‘காம்’ இயக்க அங்கத்தவர்கள் இயக்கத்திலிருந்து விலகுவதைக் கண்காணித்தலும் அந்த இயக்கத்தின் ஆயுதங்கள், சுடுகலன்கள் மற்றும் வெடிமருந்துகள் ஆகியவற்றைக் களைந்து, அழித்தொழிப்பதைக் கண்காணித்தலும் அதற்கு உதவி செய்தலும்.

* சாதாரண இராணுவத்தினர் மற்றும் பொலிஸாரை மீளப் பணியிலமர்த்துவதைக் கண்காணித்தல்.

* மிகத் தீவிரமாகச் செயற்பட்ட காம் இயக்க உறுப்பினர்கள் மீளச் சமூகத்தோடு இணைந்து கொள்வதைக் கண்காணித்தல்.

* மனித உரிமைகள் நிலையைக் கண்காணித்து, மேற்கண்ட விடயங்களில் குறிப்பிடப்பட்ட, பணிகளின் வரைமுறைக்குள் உதவிகளை வழங்குதல்.

* சட்டவாக்க சபையின் மாற்றங்களுக்கான வழிமுறைகளைக் கண்காணித்தல்.

* மன்னிப்பு வழங்குவது தொடர்பான பிரச்சினைக் குரிய விடயங்களில் தீர்ப்பு வழங்குதல்.

* புகார்கள் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்த மீறல்கள் தொடர்பாகத் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுகளைக் கையாளுதல்.

* சம்பந்தப்பட்ட தரப்புகளோடு தொடர்புகளையும் நல்லுறவுகளையும் உருவாக்குதல்.

* ஏற்பாட்டாளர் அல்லது பேச்சுவார்த்தையாளரென்ற பாத்திரத்தை ஆச்சே கண்காணிப்புக் குழு கையேற்காது. அமுலாக்கல் கட்டத்தில் இது தேவைதான் என்றாலும், அது சம்பந்தப்பட்ட இரு தரப்புகளினதும் ஆரம்ப ஏற்பாட்டாளரான நெருக்கடி முகாமைத்துவ முன்முயற்சி அமைப்பின் பணியாகும்.

* ஆச்சே கண்காணிப்புக் குழு சம்பந்தமான விடயங்கள், அக் குழுவின் தலைவர் அரசியல் மற்றும் பாதுகாப்புக் கமிட்டியினூடாக ஐரோப்பிய ஒன்றியத்தின் செயலாளர் நாயகம் அல்லது உயர் பிரதிநிதிக்கு அறிவிக்க வேண்டும்.

இலங்கை, தனது சுதந்திரத்தைப் பேண வேண்டும். இதற்குத் தனது நீண்டகால நண்பனாக விளங்கும் இந்தோனேசியாவிடமிருந்து ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். இந்தோனேசியாவும் இலங்கையும் பாண்டுவ் மாநாட்டின் முன்னோடிகள் என்பது குறிப்பிடத்தக்கது.

# கவிஞர் வாலி எழுதுகிறார்!

## —வாழ்க்கைச் சரிதம்—

*பாலசந்தர் ஒரு பிறவி மேதை*

**வெகு** நாட்களுக்கு முன்னம் 'வெங்காயம்' என்னும் தலைப்பில் நான் ஒரு வசன கவிதையை, அமரர் திரு.அ.வெ.ர. கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்களின் ஆதரவில் நடந்து வந்த ஒரு திங்கள் இதழில் எழுதியிருந்தேன்.

அந்த சின்னஞ்சிறு கவிதையைக் கண்டெடுத்து, ஒரு பிரபலமான பத்திரிகை தனது



வாரப் பதிப்பில் வெளியிட்டிருந்தது.

ஒரு நாள் என் வீட்டிற்கு வந்திருந்தபொழுது, இக்கவிதை குறித்து என்னிடம் சிலாகித்துப் பேசினார் என் நண்பரும், நடிப்பிசைப் புலவருமான அமரர் திரு. கே.ஆர். ராமசாமி அவர்கள் சமீபத்தில் திரு.கே.ஆர்.ராமசாமி அவர்களின் நினைவு நாள் வந்தபொழுது, என் கவிதை குறித்து அவர் சந்தோஷித்தது என் நினைவிற்கு வந்தது.

கவிதை இதுதான் :

*'தலையைச் சீவியவனின்*
*தாகத்தைத் தணிக்கிறது*
*இளநீர்.*
*ஆனால்....*
*தோலை உரித்தவனைக்*
*கண்ணீர்விட வைக்கிறது*
*வெங்காயம்.*

*இது*
*சுயமரியாதையைச்*
*சுட்டிக் காட்டுகிறது என்பது*
*பெரியாருக்கு மட்டுமே*
*புரிந்திருக்கிறது.'*

இந்தக் கவிதை கே.ஆர்.ராமசாமி அவர்களை ஈர்த்ததில் வியப்பில்லை. ஆரம்ப நாட்களிலிருந்தே, அவர் தன்னை சுயமரியாதை இயக்கத்தில் ஈடுபடுத்திக் கொண்டவர். திரைப்படங்களிலும், தனது பகுத்தறிவு வெளிச்சத்தைப் படரவிட்டவர் அவர்.

'சொர்க்க வாசல்' படத்தில் அவர் பாடி நடித்த, உடுமலை நாராயணக் கவிராயர் யாத்தளித்த பாடல் ஒன்று அந்தக் காலத்தில் பெருத்த சர்ச்சைக்குள்ளாகியது.

*'ஆத்திகம் எது? நாத்திகம் எது?*
*அறிந்து சொல்வீரே'*

- என்னும் அந்தப் பாடல் தணிக்கைக் குழுவினரின் கத்தரிக்கோலில் தலையைக் கொடுக்க நேர்ந்தது.

பின்னர் அந்தப் பாடல் வரிகள் மாற்றப்பட்டு -


*'ஆகும் நெறி எது? ஆகா நெறி எது?*
*அறிந்து சொல்வீரே'*

- என நம் செவிகளில் புகுந்து செந்தமிழ்த்தேன் பாய்ச்சியது.


கே.ஆர்.ராமசாமி நடித்த 'சொர்க்க வாச'லையையும் அவரது சன்னமான சாரீரத்திற்காகவும், அதன் வழி வெளிப்போந்த சங்கீதத்திற்காகவும், பேரறிஞர் அண்ணா அவர்களின் உன்னதமான உரையாடல்களுக்காவும் நான் திருச்சிராப்பள்ளியில் இருந்த நாட்களில், திரும்பத் திரும்பப் பார்த்ததுண்டு. வெண்திரையில் மட்டுமல்லாது நாடக மேடையிலும், தன் நடிப்பாலும் நல்லிசையாலும் பெரும் சனத்திரளைத் தன்பால் வசியம் செய்து வைத்திருந்த வித்தகர் கே.ஆர்.ஆர்.

தஞ்சை ராமனாதன் செட்டியார் ஹாலில், அவர் நடத்திய 'ஓர் இரவு' நாடகத்தைப் பார்ப்பதற்காக - திருச்சியிலிருந்து நாடகப் பிரியர்கள் வாரா வாரம் ரயிலேறித் தஞ்சைக்குச் சென்று பார்த்து வந்ததெல்லாம் நாடறிந்த பழங்கதை அப்படிச் சென்று பார்த்தவர்களில் அடியேனும் ஒருவன் திரு.கே.ஆர். ராமசாமி அவர்களின் இறை மறுப்புக் கொள்கை எனக்கு உடன்பாடல்ல எனினும், கீர்த்தியும் நேர்த்தியும் அடர்த்தியாகத் தென்பட்ட அவரது இயல்பான நடிப்பிலும், இனிய இசையிலும் நான் கற்பூரமாய்க் கரைத்து போன நாட்கள் இன்னமும் பசுமையாக என் நெஞ்சில் நிழலாடுகின்றன.

(தொடரும்.......)



### உளவு பார்த்தலால் ஏற்படும் நன்மை, தீமைகள் பற்றிக் கூறும் அநுபவக் கட்டுரைத் தொடர்....




**அவ்வாறு** பதிவு செய்வதை தடுக்கின்ற முயற்சிகளையும் மேற்கொள்வதுண்டு. பேசுகின்ற பொழுது வேண்டுமென்றே வேறு ஓசைகள் டெலிபோனில் செல்லும்படியாக செய்வதுண்டு கேட்கின்றவர்கள் அதை அப்படியே பதிவு செய்து கொண்டு தேவையற்ற ஓசை களை அப்புறப்படுத்தி தெளிவான பேச்சை மட்டும் கேட்க முடியும். இதிலும் கூட ஒட்டுக் கேட்கின்றவர்களும் இந்த முறைகளை கையாண்டு தகவல்களை தெரிந்து கொள்ள முயற்சிக்கிறார்கள்.

பிஸ்மார்க் காலத்தில் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு மாநாடு 1878இல் பெர்லின் நகரில் நடந்தது. பிரசித்தி வாய்ந்த பெர்லின் ஒப்பந்தம் (Treaty of Verlin) கையெழுத்தான மாநாடு இதுதான். அந்த மாநாடு மிகவும் ரகசியமாக நடந்தது. பத்திரிகையாளர் எவரும் அதன் அருகில் கூட அனுமதிக்கப்பட்டவில்லை.

ஆனால், ஒப்பந்தம் கையெழுத்தான போது அந்த ரகசிய ஒப்பந்தத்தின் ஷரத்துக்கள் அனைத்தையும் ஒப்பந்தம் கையெழுத்தான அன்று காலையிலேயே லண்டன் பத்திரிகை 'டைம்ஸ்' வெளியிட்டு பெரிய பரபரப்பினை ஏற்படுத்தியது. இது எப்படி சாத்தியமாயிற்று என்று புரியாமல் அனைவரும் திகைத்தார்கள்.

ப்ளோலிட்ஸ் என்பவர் அந்த மாநாட்டில் கலந்து கொண்ட பிரதிநிதிகளில் ஒருவர். லண்டன் டைம்ஸ் பத்திரிகை நிருபர் அவரோடு நெருக்கமான தொடர்பை ஏற்படுத்திக் கொண்டார். எந்தப் பிரதிநிதியும் பத்திரிகை நிருபர் எவரையும் சந்திக்க முடியாதபடி கண்காணிக்கப்பட்டார்கள். பிஸ்மார்க்கின் உளவுத்துறைத் தலைவர் ஸ்டீபர் மிகுந்த விழிப்புணர்ச்சியுடன் செயல்பட்டார்.

ஆனாலும் டைம்ஸ் பத்திரிகை நிருபரும் ப்ளோவிட்ஸூ ம் செய்திகளை எவருக்கும் தெரியாமல் பரிமாறிக் கொள்ள நூதனமான வழியைக் கையாண்டார்கள். இரண்டு பேரும் ஒரே மாதிரியான தொப்பி அணிந்திருந்தார்கள். ப்ளோவிட்ஸ் சாப்பிடுகின்ற ஓட்டலில்தான் பத்திரிகை நிருபரும் சாப்பிடுவார். இரண்டு பேரும் அருகருகில் உட்கார்ந்து சாப்பிட்டால் சந்தேகம் ஏற்பட்டுவிடும் என்று எண்ணி வெகுதூரத்திலேயே உட்கார்ந்து சாப்பிடுவார்கள் மாநாட்டின் அன்றைய நடவடிக்கை பற்றிய குறிப்புகள் அனைத்தையும் ப்ளோவிட்ஸ் தன்னுடைய தொப்பிக்குள் மறைத்துக் கொண்டு வந்துவிடுவார். தொப்பியை இரண்டு பேரும் சாப்பிடும் இடத்தில் கழற்றி வைத்துவிட்டு சாப்பிடுவார்கள். எழுந்து செல்லும் போது சாமர்த்தியமாக தொப்பிகளை மாற்றி அணிந்து கொண்டு சென்று விடுவார்கள். இரண்டு பேரும் ஒரே மாதிரியான தொப்பி அணிந்திருந்ததால் கண்காணிப்பாளர்கள் எவ்வளவோ சாமர்த்தியமாக செயல்பட்டும் ப்ளோவிட்ஸிடமிருந்து நிருபர் தகவல் பெற்றுக் கொண்டதை கண்டு பிடிக்க முடியாமல் போயிற்று.

***அனுப்புவதில் உள்ள சிரமம்***

செய்திகளைக் கூட சேகரித்து விடலாம்.

ஆனால் உரிய இடத்திற்கு அவற்றை அனுப்பி வைப்பதில் நிறைய இடையூறுகள் உண்டு.

(தொடரும்.......)

(நன்றி : நர்மதா)



## கடந்தகால இரகசியங்கள்

**பிரபல** ஹொலிவுட் நடிகை ஜெனிபர் லோபஸ் அண்மையில் நீதிமன்றத்தை நோக்கி ஒரே ஓட்டமாய் ஓட, அவரது வழக்கறிஞர் அவரைப் பின் தொடர்ந்து சென்றார்.

அதாவது, ஜெனிபரின் முன்னாள் கணவரான ஒஜானி நொஆ ஒரு பயங்கரமான விடயத்தில் ஈடுபட்டுள்ளாராம்.

இவர் ஜெனிபருடன் கழிந்த இன்பமான வாழ்க்கையில் நிகழ்ந்த இரகசியமான சம்பவங்கள் தொடர்பில் புத்தகமொன்றை எழுதி வெளியிட உள்ளார். இந்தப் புத்தகத்தை வெளியிடாமல் இருக்க வேண்டும் என்றால் தனக்கு 5 மில்லியன் டொலர் வேண்டும் என்கிறார் ஒஜானி.

கடந்தகால நிகழ்வுகளை மறைக்க முடியாவிட்டால் அவற்றை ஏதாவது ஒரு மரத்திடமாவது போய் கூறிக் கொண்டிருக்கும்படி ஜெனிபர் கூறுகிறார்.

## கோழியின் காதலி



**தற்போது** முன்னணிக்கு வந்து கொண்டிருக்கும் பிரபல பாடகியான சாலட் சர்ச், புகழ்பெற்ற 'ஹீட் (Heat) சஞ்சிகையில் ஒரு பேட்டி வழங்கி இருந்தார்.

இதன்போது சாலட் சரிச்சின் காதலரான ரகர் விளையாட்டு வீரர் கெவின் ஹென்சனுடன் உங்களுக்கு காதல் ஏற்பட்டது எவ்வாறு? என நிருபர் ஒரு கேள்வியைக் கேட்டுள்ளார். (ஹென்சன் எனும் பெயரின் அர்த்தம் கோழியின் புதல்வன் என்பதாகுமாம்) இக் கேள்விக்கு சர்ச்சின் உடனடியாக அளித்த பதில் - 'அவர் ஒரு திறமையான சேோழி' என்பதாகும்.

அதற்குப் பிறகு அந்த நிருபர் வாயை மூடிக் கொண்டார்.



## ஆடைக்கு முன்!

**மேக்னா** நாயுடு - பொலிவுட் திரைப்படத் துறையில் பலரது பேச்சுக்களிடையே இப்போது இவரது பெயரும் அடிக்கடி அடிபடுகிறது. இவர் போகும் இடமெல்லாம் இளைஞர்களது கூட்டத்திற்குக் குறைவில்லை.

அண்மையில் இவர் அஹமதாபாத் நகரில் ஒரு தனிப்பட்ட நிகழ்வில் கலந்து கொண்டார்.

இதனிடையே இவர் தங்கியிருந்த அறையின் அருகில் இளைஞர்கள் சிலர் கூடியிருந்ததை அவர் கண்டு கொண்டார். பின்னர் இந்த இளைஞர்கள் அவ்விடத்தில் இருந்து உடனடியாக அகற்றப்பட்டனர்.

"சில நிமிடங்களுக்கு முன்பாக நான் ஆடை மாற்றினேன். நான் ஆடை மாற்றிய பின்பு தான் இந்த இளைஞர்கள் வந்திருக்க வேண்டும்" என்பது தான் மேக்னாவின் கூற்று.

**என்ஜின்** இல்லாத வாகனம் போல் ஹொலிவுட்டில் ஒரு நடிகை இருக்கிறார். என்ஜின் இல்லாவிட்டால் அந்த வாகனம் ஒரே இடத்தில் நின்று விடும். எனினும் இந்த நடிகையின் 'என்ஜின்' இன்னமும் காணாமற் போகவில்லை. என்றாலும் நடிகையோ ஒரே இடத்தில் தான் இருக்கிறார்.

இவரது என்ஜின் - இளமை! தற்போது இவருக்கு 47வயது மேலும் மேலும் தனது என்ஜினால் பலன் பெற வேண்டும் என்பது

## ஆசை! ஆசை!



தான் நடிகையின் ஆசை!

இதனால் சுமார் 15 வருடங்களுக்கு முன்பு இவர் ஆடிய ஆட்டத்தை இப்போதும் ஆடலாம் எனப் பார்க்கிறார்.

அது - பகிரங்கமாக ஆடிய ஆட்டம்!

அதாவது உடம்பில் ஒரு துணி கூட இல்லாமல் 'ப்ளே போய்' சஞ்சிகையின் அட்டையை அலங்கரித்தார்.

அதனை மீண்டும் செய்ய அவருக்கு ஆசை!

கடற்கரையோரத்தில் இருந்து இப்படி ஒரு காட்சியை எடுக்கலாம் என்று கூறிவருகிறார்!


இது தான் ஆசை!

## ஜனாதிபதி பச்சை

**உடம்பில்** பச்சைக் குத்திக் கொள்ளும் கலை இன்று மிகவும் பிரபலமானதொரு கலையாகும்.

இங்கே ரஷ்ய நாட்டு யுவதி ஒருவர் தனது தோளில் ஒரு பச்சையினைக் குத்திக் கொண்டுள்ளார்.

இதில் ஒரு விசேடம் இருக்கிறது. அதாவது, பலர் எதை எதையோ பச்சைக் குத்திக் கொள்ளும் போது இந்த யுவதி ரஷ்ய ஜனாதிபதி வலடிமிர் புட்டினின் முகத்தை பச்சைக் குத்திக் கொண்டுள்ளார்.





# பூலான் தேவியின் மறுபக்கம்

**1982ஆம் ஆண்டு** ஜுன் மாதம் 17ஆம் திகதி, பிரபல கொள்ளைக்காரன் மல்கான்சிங், பிந்து நகரில்தான் முதல் - மந்திரி அர்ஜுன்சிங் முன்னிலையில் புதுவாழ்வு தொடங்கினான்.

அதே இடத்தில்தான் பூலான்தேவியும் சரண் அடைய ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

## காக்கி உடை - நெற்றியைச் சுற்றி ரிப்பன்

அறிவிக்கப்பட்டபடியே பிந்து நகரில் உள்ள சிவாஜிராவ் சிந்தியா கல்லூரி மைதானத்தில் விசேஷ மேடை அமைத்து இருந்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக முதல் - மந்திரி அர்ஜுன்சிங் தனது சுற்றுப்பயணத்தை ரத்து செய்துவிட்டு பிந்து நகரத்துக்கு வந்தார்.

சரியாக 9 மணிக்குப் பூலான்தேவி மேடைக்கு வந்தாள்.

அவள் காக்கி நிற யூனிபாம் அணிந்து இருந்தாள். நெற்றியைச் சுற்றி வழக்கம்போல சிவப்பு நிற ரிப்பன் கட்டி இருந்தாள். தோளில் துப்பாக்கியும், மார்பை சுற்றி துப்பாக்கி குண்டு பெல்ட்டும் காட்சி தந்தன.

3 மலர் மாலைகள் தயாராக இருந்தன. அதில் ஒன்றை மேடையில் வைக்கப்பட்டிருந்த மகாத்மா காந்தி படத்துக்கும், மற்றொன்றை துர்க்காதேவி படத்துக்கும் அணிவித்தாள். 3ஆவது மாலை முதல் - மந்திரி அர்ஜுன்சிங்குக்கு அணிவிக்கப்பட்டது.

பிறகு சரியாக 9-45 மணிக்குப் பூலான் தேவி முதல் மந்திரி அர்ஜுன்சிங் முன்பு சென்று மண்டியிட்டு காலை தொட்டுக் கும்பிட்டாள். தான் எடுத்து வந்த துப்பாக்கி மற்றும் துப்பாக்கிக் குண்டுகளை முறைப்படி ஒப்படைத்து சரண் அடைந்தாள்.

## மக்கள் ஆரவாரம்

இந்த நிகழ்ச்சியைப் பார்க்க மைதானத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் குவிந்து இருந்தார்கள். அவர்கள் கை தட்டி ஆரவாரம் செய்தார்கள். அவர்களைப் பார்த்து பூலான்தேவி கைகளை அசைத்தாள். பிறகு இரு கைகளையும் கூப்பி கும்பிட்டாள்.

அப்போது கூடியிருந்த மக்களும் அவளை நோக்கி உற்சாகமாக கைகளை அசைத்தார்கள்.

பின்னர் பூலான்தேவியின் கொள்ளைக் கூட்டத்தைச் சேர்ந்த 7 பேர் தங்கள் துப்பாக்கிகளையும், வெடிமருந்துகளையும் ஒப்படைத்துவிட்டு முதல் - மந்திரியிடம் சரண் அடைந்தார்கள்.

சரண் அடைந்தவர்களில் பூலான்தேவியின் காதலன் மான்சிங்கும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. இதே நிகழ்ச்சியில் வேறு சில கொள்ளைக் கோஷ்டிகளைச் சேர்ந்த 24 கொள்ளைக் காரர்களும் சரண் அடைந்தார்கள்.

கொள்ளைக்காரர்கள் சரண் அடைந்த பிறகு முதல் - மந்திரி அர்ஜுன்சிங் பேசினார். அவர் கூறுகையில், எந்தவித நிபந்தனையும் இன்றி பூலான்தேவி சரண் அடைந்து இருக்கிறார். இது பொலிஸாரின் அயராத முயற்சிக்குக் கிடைத்த வெற்றி என்று குறிப்பிட்டார்.

பூலான்தேவி சரண் அடைந்த நிகழ்ச்சி சுமார் ஒரு மணி நேரம் நடந்தது.

பூலான்தேவி இனத்தைச் சேர்ந்த கிராம மக்கள் அவளுக்கு மறைமுக ஆதரவு கொடுத்து வந்தனர். உயர் சமூகத்தினர் தொந்தரவில் இருந்து தங்களைக் காப்பாற்றும் கேடயம் பூலான்தேவி என்று கருதினார்கள்.

இதற்கிடையில் பொலிஸ் வேட்டை தீவிரம் அடைந்ததால், பூலான்தேவி சரண் அடைய முடிவு செய்தாள். சில நிபந்தனைகளை விதித்து இருந்தாள். அவளது தங்கை மற்றும் குடும்பத்தினரை பொலிஸார் பிடித்து காவலில் வைத்தனர்.

இதனால் பூலான்தேவி சரண் அடைவதில் ஆர்வமாக இருந்தாள். சில மாத காலம் சமரச தூது நடைபெற்றது. இறுதியில் மத்திய பிரதேசத்தில் சரண் அடைய விரும்புவதாகவும், அங்கு தனது பெற்றோரை அழைத்து வந்து பாதுகாப்பு தரவேண்டும் என்றும் கோரிக்கை வைத்தாள். அதனைப் பொலிஸார் ஏற்றுக்கொண்டு ஏற்பாடு செய்வதாக உறுதி அளித்தனர்.



## பொலிஸ் நிலையம் வந்தாள்

இதனை அடுத்து பூலான்தேவி தனது கொள்ளை கோஷ்டியுடன் மத்தியபிரதேசம் சென்றாள். 11.02.1983 அன்று மத்தியபிரதேச மாநிலம் ஜக்மோரி கிராமத்தின் அருகே உள்ள காட்டில் இருந்து அவள் வெளியே வந்தாள்.

நேராக நயாகாவோன் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று ஆஜரானாள். அவளுடன் கொள்ளைக் கூட்டத்தைச் சேர்ந்த மேலும் 4 பேர் சென்றார்கள்.

அவர்கள், பிந்து நகரத்துக்கு பலத்த பாதுகாப்புடன் கொண்டு வரப்பட்டார்கள். அங்கு காவலில் வைக்கப்பட்டார்கள்.

பிந்து நகரம் குவாலியில் இருந்து 50 மைல் தூரத்தில் உள்ளது. இந்த தகவல்களை, சம்பல் பள்ளத்தாக்கு பொலிஸ் டி.ஐ.ஜி. என்.டி.சர்மா அறிவித்தார்.

## பூலான்தேவி

மகுவா கிராமத்தில் நடக்கும் யாகத்தைப் பார்க்க வேண்டும் என்று பூலான்தேவி விருப்பம் தெரிவித்தாள். அதை நிறைவேற்றுவதற்காக அவளை யாகம் நடக்கும் இடத்துக்குக் கொண்டு சென்றார்கள்.

## அர்ஜூன்சிங் முன்னிலையில் சரண்

என்ற போதிலும் பூலான்தேவி சரண் அடைவது சம்பிரதாயமாக பொதுமக்கள் முன்னிலையில் பிந்து நகரத்தில் 12.02.1983 அன்று காலை 9.00 மணிக்கு நடைபெறும் என்றும், மத்தியபிரதேச முதல் - மந்திரி அர்ஜுன்சிங் முன்னிலையில் ஆயுதங்களை ஒப்படைத்து சரண் அடைவாள் என்றும் அதிகாரப் பூர்வமாக அறிவிக்கப்பட்டது.

மத்திய பிரதேசத்தில், இதற்கு முன்பு ஏராளமான கொள்ளைக்காரர்கள் ஜெயப்பிரகாசர் வேண்டுகோளை ஏற்று சரண் அடைந்து இருக்கிறார்கள்.

(பக்கம் புரளும்)

# ௨ஆம் உலகப் போர்

12

**இயந்திர** துப்பாக்கிகளால் புரட்சிக்காரர்கள் சரமாரியாகச் சுட்டார்கள். இருவர் உடல்களும் துளைக்கப்பட்டு ரத்த வெள்ளத்தில் மிதந்தன. முசோலினிக்கு உதவியாக இருந்த வேறு



ஹிட்லர்

சிலரையும் சுட்டுக் கொன்றார்கள். முசோலினியின் உடலையும், மற்றவர்களின் உடல்களையும் புரட்சிக்காரர்கள் மிலான் நகருக்குக் கொண்டு சென்றார்கள். அங்கு விளக்கு கம்பத்தில் தலைகீழாகத் தொங்கவிட்டார்கள். அன்று மாலை உடல்கள் இறக்கப்பட்டு அடையாளம் தெரியாத இடத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு புதைக்கப்பட்டன.

ஜெர்மனித் தலைநகரான பெர்லினில் ஒரு சுரங்கம் அமைத்து அதில் தங்கியிருந்தார் ஹிட்லர். பாதாள அறையின் கூரை மட்டும் 16 அடி பருமனும் இரும்பும், சிமெண்டும் கொண்டு குண்டு வீச்சினால் சேதம் அடைய முடியாத அளவுக்கு மிக உறுதியாக கட்டப்பட்டிருந்தது. ஹிட்லர் அலுவலகமும், படுக்கை அறையும் அங்கேதான் இருந்தன. 15அடி நீளமும், 10 அடி அகலமும் கொண்டது. குளியலறையும் அத்துடன் இணைக்கப்பட்டிருந்தது.

1945 ஜனவரி 16ஆந் திகதி, ஹிட்லர் இங்கு வசிக்கலானார். 1804இல் மாவீரன் நெப்போலியன் பயன்படுத்திய நாற்காலி ஒன்று ஹிட்லரிடம் இருந்தது. அதில் அமர்ந்து இராணுவத்தினருக்கு உத்தரவுகளைப் பிறப்பித்துக் கொண்டு இருந்தார். 1945 ஏப்ரல் பின்பகுதியில் பெர்லின் நகரம் மீது ரஷ்ய விமானங்கள் குண்டுமாரி பொழிந்தன.

ஹிட்லர் தங்கியிருந்த பாதாள சுரங்கத்துக்கு அருகிலும் குண்டுகள் விழுந்தன, ஈவா பிரவுன் என்ற பெண் 1930ஆம் ஆண்டு முதல் ஹிட்லருடைய மனம் கவர்ந்த காதலியாக இருந்து வந்தாள். ஹிட்லரின் நண்பர் ஒரு போட்டோ ஸ்டுடியோ வைத்திருந்தார். அங்கு உதவியாளராகப் பணியாற்றியவள் ஈவா பிரவுன். நண்பரின் போட்டோ ஸ்டுடியோவுக்கு ஹிட்லர் அடிக்கடி போவார். அப்போது அவருக்கும் ஈவாவுக்கும் பழக்கம் ஏற்பட்டு காதலாக கனிந்தது. ஈவ பிரவுனும் ஹிட்லரை உயிருக்கு உயிராக நேசித்தாள். அதனால் மனைவி என்ற அந்தஸ்து கிடைக்காவிட்டாலும் ஹிட்லருடன் சேர்ந்து வாழ்ந்து வந்தாள்.

1945ஆம் ஆண்டு ஏப்ரல் 25ஆந் திகதி பெர்லின் நகரை ரஷ்யப் படைகள் சூழ்ந்து கொண்டு விட்டன. விமானங்கள் குண்டு மாரிப்பொழிந்து கொண்டு இருந்தன. எந்த நேரத்திலும் ரஷ்யப் படைகள், பெர்லின் நகருக்குள் புகுந்து விடலாம் என்கிற நிலை. எதிரிகளிடம் யுத்தக் கைதியாக பிடிபட்டால் தன் நிலை என்னாகும் என்பதை உணர்ந்தார் ஹிட்லர். எதிரிகளிடம் சிக்குவதற்குள் தற்கொலை செய்து கொள்வதே மேல் என்ற முடிவுக்கு வந்தார். தன் முடிவை காதலி ஈவாபிரவுனிடம் தெரிவித்தார். ஹிட்லரின் முடிவைக் கேட்டு, ஈவா பிரவுன் திடுக்கிடவில்லை. "வாழ்விலும் உங்களுடன் இருந்தேன். சாவிலும் உங்களுடன்தான் இருப்பேன். உங்களுடன் நானும் தற்கொலை செய்து கொள்வேன்" என்றாள்.

காதலியின் உண்மையான அன்பைக்கண்டு ஹிட்லர் நெகிழ்ந்து போனார். "பிரவுன்! உன் அன்பு என்னைப் பிரமிக்கச் செய்கிறது. நீ என்னிடம் எது வேண்டுமானாலும் கேள் தருகிறேன்" என்றார். "என்னை உயிருக்கு உயிராக நேசித்தீர்கள். நான் பாக்கிசாலி. இதுவரை உங்கள் காதலியாக இருந்த நான் சாகும்போது உங்கள் மனைவியாகச் சாக விரும்புகிறேன். இதுதான் என் கடைசி ஆசை என்றாள் பிரவுன். இந்த வேண்டுகோளை ஹிட்லர் ஏற்றுக்கொண்டார்.

ஏப்ரல் 27ஆம் திகதி ஹிட்லரின் பிறந்த நாளையொட்டி பாதாள அறையில் விருந்து நடந்தது. ஹிட்லர் உயிர் நண்பனான கோயபல்ஸ் மற்றும் ராணுவ தளபதிகள் வந்திருந்தனர். ஹிட்லருக்கு பிறந்த நாள் வாழ்த்துப் பாடலை ஈவாபிரவுன் பாடினாள். மறுநாள், ஏப்ரல் 28ஆம் திகதி ஹிட்லர் ஈவாபிரவுன் திருமணம் நடந்தது. அன்று காலையிலேயே, தன் அறையை அலங்கரிக்குமாறு உதவியாளர்களுக்கு ஹிட்லர் உத்தரவிட்டார். அதன்படி அறை அலங்கரிக்கப்பட்டது.

சட்டப்படி திருமணப் பதிவு செய்ய நகரசபை அதிகாரி அழைக்கப்பட்டார். திருமணம் பதிவு பத்திரத்தில் ஹிட்லரும், ஈவாபிரவுனும் கையெழுத்திட்டனர். கோயபல்ஸும், மற்றொருவரும் சாட்சிகளாக கையெழுத்திட்டனர். பிறகு விருந்து நடந்தது. ஹிட்லரின் நண்பர்கள் மது அருந்தினார்கள். ஹிட்லர் தேநீர் அருந்தினார். தங்கள் வாழ்க்கை இன்னும் சில நாட்களில்




ஹிட்லர், முசோலினி

முடியப்போகிறது என்பதை அறிந்திருந்த அவர்கள், கவலையை மறக்க ஆடிப் பாடினார்கள். விடிய விடிய கேளிக்கைகள் நடந்தன. காலை 6 மணிக்குத்தான் ஹிட்லரும், ஈவாவும் படுக்கச் சென்றனர்.

காலை 11 மணிக்கு, தன் உயிலை எழுதும்படி ஈவாவிடம் கூறினார் ஹிட்லர். அவர் கூறக்கூற ஈவா எழுதிய உயில் வருமாறு ""வாழ்விலும் தாழ்விலும் என்னோடு இருந்து என் இன்ப துன்பங்களில் எல்லாம் பங்கு கொண்ட ஈவா பிரவுனை என் வாழ்வின் கடைசி கட்டத்திலாவது மணந்து கௌரவிக்க வேண்டுமென்று முடிவுசெய்தேன். அதன்படி மணந்து கொண்டேன். நாங்கள் இறந்த பிறகு, எந்த ஜெர்மன் நாட்டு மண்ணுக்காகக் கடந்த 12 ஆண்டுகாலமாக பாடுபட்டு வந்தேனோ, அந்த ஜெர்மன் மண்ணிலேயே என்னையும் ஈவாவையும் உடனே எரித்துவிடவேண்டும். இதுவே என் கடைசி ஆசை. என் சொத்துக்கள் எல்லாம் எனக்குப் பிறகு என் கட்சிக்குச் சேர வேண்டும். கட்சி அழிந்து விட்டால் நாட்டுக்குச் சேர வேண்டும்" இதுவே ஹிட்லரின் உயில்.

(தொடரும்)





# கடன்

சொரியும் நீரெனப் பல்லுயிர் போற்றுவை,
சூழும் வெள்ள மெனவுயிர் மாற்றுவை
விரியும் நீள்கட லென்ன நிறைந்தனை
வெல்க காளி யெனதம்மை வெல்கவே.

- சுப்பிரமணிய பாரதியார்



முன்னொரு காலத்தில் பரமன் என்பவன் தன் ஊரை விட்டு பிழைப்பதற்காக சோலையூருக்குப் புதிதாகச் சென்றான். அங்கே இரண்டு ஏக்கர் நிலத்தை வாங்கி விவசாயம் செய்தான். ஐந்து கறவை மாடுகளை வாங்கிப் பால் வியாபாரமும் செய்துவந்தான். அவன் அந்த ஊருக்கு வந்த இரண்டாவது மாதத்திலேயே அவனது மகளுக்கு நல்ல மணமகன் கிடைத்தான். தன் மகளின் திருமணச் செலவிற்கு ஓர் ஆயிரம் ரூபாய் குறையவே அதை எப்படிப் புரட்டுவது என்று அவன் யோசித்தான்.

அவன் தான் புதிதாக வாங்கிய நிலத்தின் மீதோ அல்லது மாடுகளின் மீதோ கடன் வாங்க விரும்பவில்லை. யாராவது அந்த ஊரில் தன்னை நம்பிக் கடன் கொடுக்கத் தயாராக இருக்கிறார்களா எனப் பார்த்தான் பரமன். ஆனால், அவனை நம்பி யாரும் கடன் கொடுக்கமாட்டார்கள் என்று தெரிந்து போயிற்று. அப்போது அவனது பக்கத்து வீட்டுக்காரன், "இந்த ஊரில் சாந்தப்பன் என்பனிடம் கேட்டுப் பார்... உனக்கு ஒருவேளை அதிர்ஷ்டம் இருந்தால் கிடைத்தாலும் கிடைக்கலாம். அதோ அவனே இங்கு வந்து கொண்டிருக்கிறான்" என்றான்.

பரமனிடம், "சாந்தப்பன் நல்லவன் தான். ஒருவனுக்கு உதவ வேண்டும் என்று நினைத்தால் கண்டிப்பாக உதவுவான். உதவக் கூடாது என்று நினைத்து விட்டாலோ வெறும் வார்த்தைகளை அள்ளி வீசியே சமாளித்துவிடுவான்" என்றான்.

"சரி, கேட்டுத்தான் பார்க்கிறேன். அப்புறம் நடக்கிறபடி நடக்கட்டும்" என்றான். அன்று மாலையில் சாந்தப்பன் வீட்டிற்குப் பரமன் சென்றான். "என் பெயர் பரமன். என் பக்கத்து வீட்டுக்காரர் உங்களைப் பற்றிப் புகழ்ந்து கூறி இருக்கிறார். இன்று காலையில் நானும் அவரும் பேசிக் கொண்டிருந்த போது, நீங்கள் அங்கு வந்தீர்கள். அப்போதுதான் உங்களை முதன் முதலாகப் பார்க்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது" என்றான். "ஆமாம். அப்போது உங்களுடன் பேசாமல் போனதற்கு வருந்துகிறேன். தவறாக எண்ணி விடாதீர்கள்" என்றான் சாந்தப்பன்.

"இதில் தவறாக நான் நினைக்க என்ன இருக்கிறது. உங்களுக்கு என்னைத் தெரியாதே! அதனால் தான் நீங்கள் என்னுடன் பேசவில்லை. இப்போது நான் என் தேவைக்காகப் பேச வந்திருக்கிறேன். என் மகளுக்குத் திருமணம் நிச்சயமாகி இருக்கிறது. அதற்கான செலவில் ஆயிரம் ரூபாய் குறைகிறது. அதை உங்களிடம் கடனாகக் கேட்கவே வந்தேன்" என்றான்.

"இப்படிச் சொல்கிறேனே என்று தவறாக நினைக்காதீர்கள். எனக்கு என்று சில கட்டுப்பாடுகளை நான் விதித்துக் கொண்டிருக்கிறேன். புதிதாக வருபவருடன் நட்பு, கடன் கொடுப்பதில் ஆரம்பமாகக் கூடாது என்பது அவற்றில் ஒன்று. ஒரு திருமணம் நடக்கக் கடன் கொடுத்தால் புண்ணியமே கிடைக்கும். ஆனால், நான் வகுத்துக் கொண்ட கட்டுப்பாட்டை மீற முடியாது. எனவே, உங்களுக்குக் கடன் கொடுக்க முடியாமல் போவதற்கு மிக மிக வருந்துகிறேன்" என்றான்.

பரமன் என்ன செய்வான் பாவம். முகத்தைத் தொங்கப் போட்டுக்கொண்டு வீட்டிற்குத் திரும்பிச் சென்றான். அப்போது அவனது அண்ணன் வந்திருந்தான்.

"தம்பி! எதிர்பாராதவிதமாக எனக்கு ஓர் இடத்திலிருந்து பணம் கிடைத்தது. இந்தா ஆயிரம் ரூபாய். இதை உன் மகளின் திருமணத்திற்குப் பயன்படுத்திக் கொள்!" என்று கூறிப் பணத்தைக் கொடுத்தான். "என் பிரச்சினை நல்லவிதமாகத் தீர்ந்தது. அதனால் இப்போதே கோயிலுக்குப் போய் அர்ச்சனை செய்துவிட்டு வருகிறேன்" என்று கூறி, கோயிலுக்குச் சென்றான். கோயிலில் அவன் சாந்தப்பனைச் சந்தித்தான்.

"நீங்கள் கடவுள் அனுக்கிரகத்தைக் கேட்க வந்திருக்கிறீர்கள். என்னால்தான் உங்களுக்குக் கடன் கொடுத்து உதவ முடியவில்லை. இதற்காக நான் எவ்வளவு வருந்துகிறேன் தெரியுமா? என்னிடம் பணம் இருந்தும் என கட்டுப்பாட்டை மீறி உங்களுக்கு உதவ முடியால் போயிற்று. நானும் என் மனதைத் தேற்றிக் கொள்ளவே கோயிலுக்கு வந்தேன்" என்றான்.

**பாப்பா முரசு சிறுகதை**

"முன்பின் தெரியாத உங்களிடம் நான் கடன் கேட்டதே என்னுடைய தவறுதான். அதற்காக வருந்துகிறேன். நல்ல வேளையாகக் கடவுள் அருளால் எதிர்பாராதவிதமாக எனக்குப் பணம் கிடைத்துவிட்டது," என்றான்.

"கடவுள் நல்லவர்களைக் கைவிட மாட்டார். நீங்கள் எவ்வளவு நல்லவர். உங்களுக்குக் கடன் கொடுத்து உதவ முடியவில்லையே என்றுதான் இப்பொழுதும் வருத்தமாக இருக்கிறது" என்றான். "இதற்காக நீங்கள் வருந்துவதுதான் எனக்கு வேதனையை அளிக்கிறது. இதுபற்றி இனி நீங்கள் கவலைப்படாதீர்கள்" என்று கூறிவிட்டு, அர்ச்சனையை முடித்துக் கொண்டு சென்றான் பரமன். இதற்குப் பின் பரமன் துணிக்கடை, மளிகைக் கடை என்ற இடங்களில் சந்தித்த போதும் அவன் தான் கடன் கொடுக்க முடியாது போனது பற்றியே புலம்பித் தீர்த்தான். தன் மகளின் திருமணத்திற்கு பரமன், சாந்தப்பனை அழைத்திருந்தான். திருமண நாள் அன்றும் சாந்தப்பன் பரமனிடம் தான் கடன் கொடுக்காதது பற்றியே புலம்பிக் கொண்டிருந்தான்.

அந்தச் சமயத்தில் அங்கு வந்த பரமனின் அண்ணன், "பரமா! சம்மந்தி கோபமாகப் பேசிக் கொண்டிருக்கிறார். நீ மாப்பிள்ளைக்கு மட்டுமே தங்க மோதிரம் போட்டாயாம். அவர்களது வழக்கப்படி அவருக்கும் தங்க மோதிரம் போட வேண்டுமாம். இப்போதே ஆயிரம் ரூபாய் வேண்டுமே. அதற்கு நீ எங்கே போவாய்? யாரிடம் கேட்பாய்? என்ன செய்யப் போகிறாய்?" என்று கேட்டார்.

"இப்படி திடுதிப்பென்று தங்க மோதிரம் கேட்டால் நான் பணத்திற்கு எங்கே போவேன்? கையிலிருந்த பணம் எல்லாம் செலவாகிவிட்டதே!" என்றான். அப்போது அவனது அண்ணன் "ஏன் கவலைப்படுகிறாய்? இவர்தான் உனக்குக் கடன் கொடுத்து உதவ முடியவில்லையே என்று இங்கு வந்தது முதல் புலம்பிக் கொண்டிருக்கிறாரே! இவரிடம் கடன் கேள். இப்போது இவர் உனக்கு நன்கு தெரிந்தவர் தானே. அவர் தானே விதித்துக் கொண்ட கட்டுப்பாடுதான் இனி இல்லையே. உன்னை நன்கு அறிவாரே. இவரிடம் இரண்டாயிரம் ரூபாய் கடன் கேள். சந்தோஷத்துடன் உனக்குப் பணம் கொடுப்பார். அவருடைய மன வேதனையும் மறைந்து விடும்" என்றார்.

"இவர் சொல்வதும் சரிதான். சிறிது நேரம் பொறுங்கள். நான் இப்போதே வந்துவிடுகிறேன்" என்று கூறிவிட்டு நழுவினான் சாந்தப்பன். இவர் எங்கே போகிறார்? என்று அண்ணனிடம் கேட்டான்.

"இனிமேல் அவன் நீ இருக்கும் பக்கம் தலை வைத்துக் கூடப் படுக்கமாட்டான். நீயும் அவன் புலம்பலைக் கேட்டுப் பொறுத்துக் கொண்டு போக வேண்டிய அவசியமில்லை. இனி அவன் உன்னைப் பார்க்க வரவும் மாட்டான். அந்தத் தங்க மோதிர விஷயம் அவனை விரட்டுவதற்காக நான் விட்ட கற்பனை" என்றார்.

"அப்படியா! இவன் வெறும் வெத்துவேட்டா? இப்படிப்பட்ட நடிகர்களும் நாட்டில் இருக்கிறார்களே" எனக் கூறிச் சிரித்தான் பரமன்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 02.05.2006

**வர்ணம் தீட்டும் போட்டி இல. 641**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
**கொழும்பு**

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 639

**பரிசுக்குரியவர்:**
செல்வி.ஏ.ஜெ. பாத்திமா பஸ்னா,
61/1A/1, மகபுத்கமுவ, முள்ளேரியா.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| ச.தாரகா, 24/4, புகையிரத விடுதி, ஸ்ரேசன் வீதி, பம்பலப்பிட்டி. | த.சிவதர்சினி, தரம் 7, 114, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். |
| எப்.ஏ.எம். அல்தாப், அஸ்ஹர் மத்திய கல்லூரி, மாத்தளை வீதி, அக்குரணை. | எம்.என்.எம். நுஸ்றி, தரம் 3B, தில்லையடி, அ.மு.வி. புத்தளம். |
| கி.சுபிதரன், தரம் 8E, யா/மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம். | ஜெ.சேபா, தரம் 6A, மெதடிஸ்ட் கல்லூரி கொழும்பு - 04. |
| எப். நிஸ்ரின், 7 பெரேரா ஒழுங்கை, கொழும்பு 06. | என். விஷ்ணுஜன், தரம் 5, 4ஆம் குறுக்குத் தெரு, மாமாங்கம், மட்டக்களப்பு. |
| யோ.சிவரஜினி, சரசாலை தெற்கு, சாவகச்சேரி. | மர்ஸியா நாபிர், 11/2 ஏ, பாகிர் மாகார் அவனியூ, மருதானை, பேருவளை. |

## ஆத்திசூடி


### பாம்பொடு பழகேல்

நீ கொடிய நஞ்சைக் கொண்டதும் எந்நேரமும் உயிராபத்தை விளைவிக்கக் கூடியதுமான பாம்போடு விளையாடாதே, அது போல நயவஞ்சக எண்ணங் கொண்ட மனிதர் உறவையும் தவிர்த்துக் கொள்.

-ஔவையார்

எஸ். நிரஞ்சலா, கண்டி.


## மாவலியும் - பாயுமொலி கேட்போமே?




ஆறு பரந்தோடுது - அது பரந்து ஓடுது
வழுக்கியாறு ஓடுது வளைந்தெழுந்து ஓடுது
தொண்டமானாற்றையும் அருகணைத்து ஓடுது
மாவலியைத் தேடியே அருவி ஆற்றிச் சேருது
மல்வத்து ஓயாவில் மகிழ்ந்து உறவாடுது
நாலந்த ஓயாவை நல்ல நண்பன் ஆக்கியே
மெல்லப் போய் மாவலியில் தாவிவிளையாடுது
ஆறுகுளம் என்றே நாம் ஆறுதலைக் கண்டோமோ?
ஆறுதலாய் மாவலியும் - பாயும் ஒலி கேட்போமோ?

## அதிசய உலகம்


### புரியாத புதிர்!



யாருக்கும் இந்தப் பிரமாண்டமான கற்கள் ஒரே இடத்தில் ஏன் இப்படி வைக்கப்பட்டுள்ளது என்பது இன்று வரை புரியாத புதிராக உள்ளது. பாரீஸின் புகழ்பெற்ற சின்னம் இது. 1000 அடி உயரமுள்ள இது விண்ணை முட்டும் அழகுடன் உள்ளது. 1,500 மைல்கள் நீளம் கொண்டது. இது பல நூற்றாண்டுகளுக்கு முன் அந்நியர்களின் படையெடுப்பைத் தடுப்பதற்காகக் கட்டப்பட்டது.

### குகைகளும் கோட்டைகளும்!

மகாராஷ்டிரத்தின் அழகே அதன் கோட்டைகளிலும் குகைகளிலும் தான். பாறைகள் மிகுந்த இம்மாநிலத்தில் 350க்கும் மேற்பட்ட கோட்டைகளைக் காணலாம். பெரும்பாலானவை சிவாஜியுடன் தொடர்பு கொண்டவை. இவை நன்கு பலப்படுத்தப்பட்ட நகரங்கள். ராய்கட், ராஜ்கட், சிந்துர்க், பிரதாப்கட், தௌலதாபாத், தோர்னா ஆகிய கோட்டைகள் பிரபலமானவை. அஜந்தா, எல்லோரா குகைகளின் சிற்ப, ஓவியங்கள் பௌத்த மதப் பண்பாட்டை வெளிப்படுத்துபவை. இவற்றில் புத்தரின் சரிதமே சித்திரிக்கப்பட்டுள்ளது.



இவை கி.மு.200இல் குடையப்பட்டு, கி.பி.650இல் கவனிப்பாரற்றுக் கைவிடப்பட்டன. இங்கு பௌத்த பிக்குகள் தனிமையில் வாழ்ந்தனர்.

## உங்கள் பொது அறிவு எப்படி?

### கொள்கைகளை வகுத்தவர்கள்

| | |
|---|---|
| 01. கலக் கொள்கை | - ஷெலிடன், ஷிவாலி. |
| 02. பரம்பரை பற்றிய விதிகள் | - கரிஹரி ஜேமகன் மெண்டல். |
| 03. மின்னணுக் கொள்கை | - பொர். |
| 04. மின்தடை விதி | - ஓம். |
| 05. மின்காந்தத் தத்துவம் | - வில்லியம் ரேர்ஜியர். |
| 06. மாற்று மின்னோட்ட விதி | - ஸ்ரென்மேறஸ். |
| 07. நுண்ணுயிர்க் கொள்கை | - லூயி பாஸ்டர். |
| 08. கதிர் வீச்சுத் தேய்வுக் கொள்கை | - ஜோர்க் கோமல். |
| 09. கதிரியக்கத்தில் ஆற்றல் அலைவீச்சுக் கோட்பாடு | - மக்ஸ் பிளாங்க். |
| 10. வெருமாற்றக் கொள்கை | - டி வ்ரிஸ். |





# இயந்திரப் போலோ

**போலோ** விளையாட்டு இவ்வளவு நாளும் ஆசனங்களில் அமர்ந்து, ஒட்டகத்தின் மேல் அமர்ந்து, சில சமயங்களில் யானை மீது அமர்ந்து விளையாடினார்கள். அண்மையில் இந்த அபூர்வ செக்வே வாகனங்களின் மூலமும் போலோ விளையாடத் தொடங்கியுள்ளனர். இப்போட்டி துபாய் நகரில் நடைபெற்றது.



# நண்பன்

நான்கு வயதே ஆன இச் சிறுவனின் பெஸ்ட் ஃபிரண்ட் தான் இந்த யானை. இதன் பெயர் அன்ஜா. மொயேஜ் என்ற ஐரோப்பிய சர்க்கஸ் குழுவுக்குச் சொந்தமான இந்த அன்ஜாவுக்கு மிகவும் பிடித்த விளையாட்டு தனது நண்பனை தந்தத்தில் அமர்த்திக் கொண்டு நடப்பதே. நாலரை தொன் நிறையும் 3.9 மீட்டர் உயரமுமான இந்த அன்ஜா, ஐரோப்பாவில் உள்ள விசாலமான யானைகளில் ஒன்றாகும்.



# பியர் குளியல்



**பணம்** படைத்த சிலர் அனுபவிக்கும் உல்லாசத்தை நாம் கனவிலும் அனுபவிக்க முடியாது. இந்த ரஷ்யப் பணக்காரர் பியர் குடித்துக் கொண்டே பியர் நிரப்பப்பட்ட குளியல் தொட்டியில் குளிக்கிறார். செக் நாட்டில் அண்மையில் தான் இவ்வாறான பியர் குளியல் நிலையம் ஆரம்பிக்கப்பட்டதாம். அற்பனுக்கு பவிசு வந்தால் அர்த்த ராத்திரியிலும் குடைபிடிப்பானாம்.

# மெகா பீசா

**அமெரிக்காவின்** பென்சில்வேனியாவில் தயாரிக்கப்பட்ட 'மோமா வினா பீசா' என்ற இந்தப் பீசாதான் எடுத்துச் சென்று உண்ணக் கூடிய வகையில் இதுவரை தயாரிக்கப்பட்ட விசாலமான பீசா என்று சாதனைப் படைத்துள்ளது.




# தங்கச் சிலந்தி



**படத்தில்** காணப்படும் இந்தச் சிலந்தி சாதாரண உயிரினமல்ல. இது உலகிலேயே உள்ள விலை கூடிய சிலந்தியாகும். அண்மையில் அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் நடைபெற்ற கண்காட்சியில் காணக்கிடைத்த இச் சிலந்தி அபூர்வமான முத்து, மாணிக்கம், தங்கம் ஆகியவற்றினால் உருவாக்கப்பட்டிருக்கிறது.

# நம்ப முடியுமா?



**பார்த்த** பார்வைக்கு எது, என்னது என்று உங்களால் அனுமானிக்க முடிகிறதா? நிச்சயம் குழம்பிப் போவீர்கள். இது வியர்வையுடன் கூடிய கைவிரல் அடையாளம் என்பது தான் உண்மை. இவ்வளவு தெட்டத் தெளிவான முப்பரிமாணப் புகைப்படத்தை எடுக்கும் தொழில்நுட்பத்தைக் கண்டுபிடித்தவர்கள் வேல்ஸ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்தவர்கள்.




அன்புத் தோழி படத்தின் ஹீரோ பிரபு சிறந்த நடனக் கலைஞர். 500 மேடைக் கச்சேரிகளுக்கு மேல் நடனம் ஆடியவர். நண்பர்கள் சொன்ன ஆர்வத்தால் சினிமாவில் நடிக்க ஆசைப்பட்டார். அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டபோது அமெரிக்காவில் மேல்படிப்புக்கான வாய்ப்பு வந்தது.

அமெரிக்காவில் படித்துக்கொண்டிருக்கும்போது அங்கேயே கம்ப்யூட்டர் இன்ஜினியராக வேலையும் கிடைத்தது. பிரபு குடும்பத்தார் நடத்தும் பள்ளி விழாவுக்கு சிறப்பு விருந்தினராக வந்த இயக்குநர் பூபதிபாண்டியன், பிரபுவின் அற்புதமான நடனத்தைப் பார்த்து சினிமாவில் நடிக்க ஆர்வப்படுத்தினார். அப்படித்தான் இந்த அன்புத்தோழி பட வாய்ப்பு வந்தது. பிரபு நடனத்தில் மட்டுமல்லாமல் 'கராத்தே' தற்காப்புக் கலையிலும் கருப்புப் பட்டி பெற்றவர். இவருக்கு 14 மொழிகள் தெரியும். அன்புத்தோழி படத்தில் ப்ரீத்திவர்மா இவருக்கு ஜோடியாக நடிக்கிறார். கிருபாசரவணன் படத்தை இயக்குகிறார்.

நடனத்தில் சிறப்பான நாயகராக சினிமாவில் உயரவேண்டும் என்ற ஆசை ஹீரோவுக்கு அதிகம். யதார்த்தமான கதைகளில் நடித்து சினிமாவில் தனக்கென ஒரு இடத்தைப் பிடிக்க வேண்டும் என்ற லட்சியத்துடன் இருக்கிறார்.




---

அசின் தற்போதெல்லாம் சினிமாவில் நடிப்பதைவிட அதிகம் விளம்பரப் படங்களில் நடிப்பதற்கே ஆர்வம் காட்டுகிறாராம். ஆமாம் பின்னே..அறுபது, எழுபது நாள் ஒரு படத்திற்கு கால்ஷீட் கொடுத்து நாற்பது லட்சம் பெறுவதைவிட, இரண்டு நாள் விளம்பரப் படத்திற்கு முப்பது லட்சம் துட்டு பார்ப்பது சந்தோஷம்தானே? இதைத் தெரிந்துகொண்ட நயனும் விளம்பரப் படங்களில் லயன் கட்டி நடிக்க முடிவு செய்துள்ளாராம். அங்கும் அசினுக்குப் போட்டியாக நயன்தாராவா...அடி ஆத்தீ.

விளம்பரப் படங்களுக்கு இவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறீர்களே என அசினிடம் கேட்டோம்.

"மாடலிங் உலகம் என்னோட தாய்வீடு. நான் அங்கயிருந்துதானே வந்தேன். அதனால் விளம்பரப் படங்களில் நடிப்பது ஒன்றும் தப்பில்லை. அதேசமயம் விளம்பரப் படங்களுக்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுப்பதாக இல்லை. நேரம் இருப்பதால் விளம்பரப் படங்களில் நடிக்கிறேன். மற்றபடி புகுந்தவீடுதான் எனக்கு முக்கியம். அதாவது சினிமாதான் முக்கியம். சினிமாவில் நல்ல நடிகை எனப் பெயர் வாங்கணும். அதுதான் என் ஆசை" என்றார் அசின்.

## படாத பாடு பட்டுவிட்டோம்!

**-சித்திரம் பேசுதடி டைரக்டர் மிஷ்கின்**

சமீபத்தில் வெளியான படங்களில் ஒரு சிலதைத் தவிர புதுமுக நட்சத்திரங்கள், புதுமுகக் கலைஞர்களை வைத்துப் பண்ணப்பட்ட 'சித்திரம் பேசுதடி' திரைப்படம் இண்டஸ்ட்ரியில் பரபரப்பாக பேசப்படுகிறது. ஒரு ரவுடிக்கும் ஒரு நடுத்தர குடும்பத்துப் பெண்ணுக்குமான காதல்தான் கதை என்றாலும் அதைச் சொன்ன விதத்தில் ஜெயித்திருக்கிறார் மிஷ்கின்.

"இந்தப் படத்தை முதலில் வெளியிட தியேட்டர்களே கிடைக்கல. அதனால் கிடைச்ச தியேட்டர்கள்ல படத்தை வெளியிட்டோம். இன்னைக்கு பத்திரிகைகளும், இரசிகர்களும் இந்தப் படத்தைப் பாராட்டுறதால பல தியேட்டர்காரர்கள் படத்தை வெளியிட முன்வந்திருக்கிறார்கள். இதற்காக முதலில் உங்களுக்கு நன்றி சொல்லிக்கொள்கிறேன்" என்றார் மிஷ்கின்.

டைரக்டர் கதிரிடமும் வின்சென்ட் செல்வாவிடமும் பாடம் கற்று டைரக்டராகியிருக்கிறார் மிஷ்கின். ராஜா என்கிற தனது பெயரை மிஷ்கின் என மாற்றியிருக்கிறார்.



---

காமெடி என்ற போர்வையில் விவேக் வரவர மேடை நாகரிகம் என்றால் கிலோ என்ன விலை? என்று கேட்கும் வகையில் கிடைக்கும் மேடைகளில் எல்லாம் ஏறி, வாயில் வந்ததை உளறி வருகிறார். இப்படித்தான் சமீபத்தில் சத்யம் திரையரங்கில் நடைபெற்ற 'வேட்டையாடு விளையாடு' படத்தின் ஆடியோ வெளியீட்டில் மைக் பிடித்த விவேக்... விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு முதல் கேசட்டை வெளியிட்ட சென்னை பொலிஸ் கமிஷனர் ஆர்.நடராஜைப் பார்த்து, கமிஷனருக்கும் கமல் சாருன்னு நினைப்பு. இன்னமும் விருமாண்டி ஸ்டைல் மீசை, கிருதாவை எடுக்கக் காணோம் என்கிற ரீதியில் பேச, இதைப் பார்த்து மேடையில் வீற்றிருந்த கமல், ஏவி.எம்.சரவணன் உள்ளிட்ட வி.ஐ.பி.க்களின் முகம் சற்றே ஒரு மாதிரி ஆகிவிட்டது. கமிஷனர் ஆர்.நடராஜும் சற்றே சீரியஸாகிவிட இதை உணர்ந்துகொள்ளாத விவேக், தொடர்ந்து பேசி அடுத்த சாப்ட்டருக்குத் தாவினார். அப்பொழுதும் கூட வாயை வைத்துக்கொண்டு சும்மாயிராமல் நான் இந்த மேடையில் கமலைப் பற்றி மட்டுமல்ல, ரஜினியைப் பற்றிப் பேச வேண்டுமானாலும் பேசுவேன்...ஏனெனில் இங்கு ரஜினியின் சிவாஜி தயாரிப்பாளர் ஏவி.எம்.சரவணன் இருக்கிறார் என்று கமல் இரசிகர்களின் முன் தேவையில்லாமல் பேசப்போக..."டேய் இறங்குடா நாயே..."என்று ஏக வசனத்தில் இரசிகர்க்ள் விவேக்கை நோக்கிக் குரல் கொடுக்க ஆரம்பித்துவிட்டனர். சுதாகரித்துக்கொண்ட விவேக், கல்லடியாக காகித அம்பு விழுவதற்குள் உஷாராகி மேடையை விட்டு இறங்கிவிட்டார்.




## ஹெல்மெட் போட்ட ஹீரோ!

நீலாங்கரைப் பகுதியில் இருக்கிறது விஜய்யின் பிரமாண்டமான பங்களா. வீட்டு மாடியில் இருந்து பார்த்தால் கடலும் கடற்கரையும் அப்பட்டமாய் தெரியும். இருந்தாலும் கடற்கரையில் சைக்கிள் ஓட்டுவது விஜய்க்கு பிடித்த விஷயம். ஓய்வு நேரங்களில் சைக்கிளை எடுத்துக்கொண்டு கிளம்பிவிடுகிறார் கடற்கரைக்கு. ஆனால் இரசிகர்கள் கூடிவிடக்கூடாதே என்பதால் ஹெல்மெட் போட்டுக் கொண்டு சைக்கிள் ஓட்டுகிறார்.




'சிவாஜி'க்கு ஒரு வழியாக வில்லன் கிடைத்துவிட்டார். தமிழில் அறிமுகமாகி சில பிரச்சினைகளால் தெலுங்குப் பக்கமே நிரந்தரமாக ஒதுங்கிவிட்ட கராத்தே வீரர் சுமன், தெலுங்கில் பிரபல ஹீரோ. 'சிவாஜி'யில் வில்லனாக வருகிறவர், ஒரு பிரபலமாக இருந்தால் நன்றாக இருக்கும் எனக் கணக்குப் போட்டு ஷங்கரும் ரஜினியும் சத்யராஜை அணுகினார்கள். அவர் மறுத்ததால் ராஜ்கிரணைக் கேட்டார்கள். அவரும் மறுத்ததால் மோகன்லாலைப் பேசினார்கள். 2 கோடி சம்பளம் தருவதாகவும் சொன்னார்கள். மோகன்லாலும் பின்வாங்கிவிட்டார். பிரபல ஹிந்தி நடிகர் நானாபடேகரைக் கேட்டார்கள். அவ்ரோ, பாரதிராஜாவின் 'சினிமா' என்கிற ஹிந்திப் படத்தில் டைரக்டராக நடித்து வருவதால் மறுத்துவிட்டார். இதையடுத்துத்தான் சுமன் வில்லனாக நடிக்க ஒப்பந்தமாகியிருக்கிறார்.

## பட்டாசு வெடித்த பின்பு...

'கோவை பிரதர்ஸ்' ரிலிஸானதுமே சிபிராஜ், விக்ராந்த் நடிக்கும் 'பட்டாசு' படத்தை தொடங்கிவிட்டார் ஷக்தி சிதம்பரம். இந்தப் படத்திற்குப் பிறகு பிரஷாந்தை ஹீரோவாக வைத்து 'சுடச்சுட' என்கிற படத்தை இயக்கவிருக்கிறார். ஒருவேளை அது தள்ளிப்போனால்...'அறிந்தும் அறியாமலும்' படத்தின் இரண்டு ஹீரோக்களான ஆர்யாவையும் நவ்தீப்பையும் வைத்து 'பழனி' என்கிற படத்தை இயக்குவாராம் ஷக்தி சிதம்பரம்.

---

'அறிந்தும் அறியாமலும்' படத்தின் தயாரிப்பாளர் 'புன்னகைப்பூ' கீதாவுக்கும் அந்தப் படத்தின் டைரக்டர் விஷ்ணுவர்த்தனுக்கும் அந்தப் படம் மிகப் பெரிய வெற்றிகரமான, லாபகரமான படமாக அமைந்தது. அதைத்தொடர்ந்து அதே கூட்டணியினர் இப்போது ஆர்யா - பத்மப்ரியா, பரத் - பூஜா ஜோடிகளை வைத்துப் 'பட்டியல்' என்கிற படத்தை உருவாக்கி வருகிறார்கள்.

படத்தில் பல விசேஷங்கள் இருந்தாலும் படத்துக்கு வெளியே அடிபடும் ஒரு முக்கியமான விஷயம். நட்புரீதியாகப் பழகிய 'புன்னகைப்பூ' கீதாவும், விஷ்ணுவர்த்தனும் இப்போது மிக நெருக்கமாக இருக்கிறார்கள் என்பதுதான்.

ஆரம்பத்திலிருந்தே இந்தச் சந்தேகம் இருந்ததுதான். என்றாலும் உறுதிசெய்ய முடியாத நிலையில் மீடியாக்கள் கண்டுகொள்ளவில்லை. சமீபத்தில் நடந்த 'பட்டியல்' படத்தின் பாடல் வெளியீட்டு விழாவில் இந்த இரகசியம் அரைகுறையாக வெளிச்சத்திற்கு வந்தது. விழாவில் பேசிய ஹீரோ ஆர்யா, ஃப்ரண்ட்ஷிப்பைத் தாண்டி அவங்களுக்குள் ஒரு புரிதல் இருக்கு என வஞ்சகப் புகழ்ச்சியாய் சொல்லி விட்டுப்போக, அவர்களுக்குக் கொஞ்சம் அதிர்ச்சிதான். அந்தச் செய்தியை அப்படியே அமுக்கிவிட்டார்கள். ஆனாலும் வெளியே கசிந்து தீப்பிடித்துக்கொண்டிருக்கிறது இந்த விவகாரம்.

---

கனடா நாட்டின் உயர்ந்த விருதான ஜென்னி விருது வாட்டர் படத்தில் நடித்த சீமா பிஸ்வாசுக்குக் கிடைத்ததையொட்டி 'தலைமகன்' படப்பிடிப்பில் நடிகர் சரத்குமார், நயன்தாரா ஆகியோர் பூங்கொத்து கொடுத்து வாழ்த்தினர். 'தலைமகன்' இயக்குநர் பாலாஜி, ஒளிப்பதிவாளர் சைமன், நெல்லை சுந்தர்ராஜன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

---

அஸின் வீட்டுக்குப் போனால் தின்பதற்கு நேந்தரங்காய் சிப்ஸும், பலாப்பழ சிப்ஸும் கிடைக்கிறது. கூடவே நேந்தரம் பழமும் தருகிறார் அஸின். அஸின் வீட்டில் இன்னொரு விசேஷம்...ஜெர்மனியிலிருந்து ஒரு விசேஷ விளக்கை வாங்கிவந்திருக்கிறார் அஸின். இந்த விளக்கு ரிமோட் மூலம் இயங்குவது. அதேபோல் அஸின் குரல்கொடுத்தால் எரியவோ, அணையவோ செய்யுமாம்.











# காதல் கடிதம்

வாட்டர் ஃபால்ஸ் மூவி மேக்கர்ஸ் என்ற புதிய இந்தியத் திரைப்படத் தயாரிப்பு நிறுவனம் 'காதல் கடிதம்' என்கின்ற புதிய திரைப்படத்தைத் தயாரித்துக் கொண்டிருக்கிறது.

புதுமைகள் பல செய்யவிருக்கும் காதல் கடிதம் படத் தயாரிப்புக்கு எல்லாவற்றையும் புதுமையானவையாக அமைத்து புரட்சி செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் தயாரிப்பாளர் புதிய புதிய நடிகர்களையும், தொழில் நுட்பக் கலைஞர்களையும் இதில் புடம் போட்டுவைத்தார்.


பிரபல திரைப்பட இயக்குநர் சேரனின் உதவி இயக்குநர் முகேஷ் 'காதல் கடிதம்' திரைப்படத்தில் புதிய இயக்குநராக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளார். 'பாரதி கண்ணம்மா' படம் தொடங்கி சமீபத்தில் மெகா வெற்றி பெற்ற 'ஆட்டோகிராப்' படம் வரை சேரனிடம் உதவி இயக்குநராகப் பணி புரிந்தவர் முகேஷ்.

'காதல் கடிதம்' படத்திற்கு நாயகன், நாயகியாக இளமையழகும் சுறுசுறுப்பும் மிக்க புதிய நடிகர்கள் ஸ்ரீபாலாஜி மற்றும் அனிஷா ஆகியோர் தேர்வாகி ஸ்ரீபாலாஜி ஒரு கிரிக்கெட் வீரர். இறுதியாண்டு பொறியியல் படித்து வருகின்றார். நாயகி அனிஷா பி.பார்மஸி படித்து வருகிறார். இருவரும் சென்னையைச் சேர்ந்தவர்கள். புதியவர்களாக இருந்தாலும் நடித்த காட்சிகளில் படப்பிடிப்புக் குழுவினராலும் பார்வையாளர்களினாலும் கைத்தட்டல்களைப் பெற்றுள்ளனர்.

இன்னும் இப்படத்தின் சிறப்பம்சம் என்னவெனில் சுமார் 25 நாட்கள் இலங்கையில் இப்படம் படப்பிடிப்புச் செய்யப்பட்டது. இலங்கையின் தலைநகரான கொழும்பு, மத்திய மலைப்பிரதேசம், வவுனியா, மற்றும் இயற்கை சிறப்பு மிக்க இடங்களிலும், இன்னும் இதுவரை எந்தத் திரைப்படத்திலும் இடம்பெறாத புதிய புதிய இடங்களிலும் புதுமையான முறையில் படப்பிடிப்புச் செய்து, படப்பிடிப்புக் குழுவினர் நாடு திரும்பியுள்ளனர். இப்படத்தின் க்ளைமாக்ஸ் காட்சி வவுனியா ரயில்வே ஸ்டேசனில் 'யாழ்தேவி' என்ற ரயிலில்தான் படமாக்கப்பட்டது.

தற்பொழுது சென்னையிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் மும்முரமாக இறுதிக்கட்ட படப்பிடிப்புக்கள் சுறுசுறுப்பாக நடைபெற்று வருகின்றன. ஒரு பாடல் காட்சிக்கு மட்டும் பிரமாண்டமான முறையில் 'செட்' அமைத்து பிரபல்யமான ஒரு நடிகையை நடிக்க வைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.




ணி வி சி ட்

மொத்தத்தில் இன்னும் சில நாட்களில் காதல் கடிதம் என்கின்ற உயர்க் காவியம் வெண் திரைகளில் உங்களைச் சந்திக்கும்.

குறிப்பு : இலங்கைத் தேசியத் திரைக் கூட்டுத்தாபனம் தனது சர்வதேசப் பிரிவின் ஒத்துழைப்பையும் உதவிகளையும் முதல்முதலாக 'காதல் கடிதம்' திரைப்படத்திற்கே வழங்கியுள்ளது. அத்தோடு 22.02.2006 அன்று காதல் கடிதம் திரைப்படத்திற்கான இணையத்தளம் ஒன்றையும் மேற்படி கூட்டுத்தாபனம் தனது வளவினுள் ஆரம்பித்து வைத்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

***நடிகர்கள்***

கதாநாயகன் - ஸ்ரீ பாலாஜி.
கதாநாயகி - அனிஷா.
நகைச்சுவை - சுகுமார் ('காதல்' படத்தின் வெற்றி நகைச்சுவை நாயகன்)
இவர்களுடன் கதாநாயகனின் அப்பா : நிழல்கள் ரவி.
கதாநாயகனின் அம்மா : சிவரஞ்சனி.

ஏ.ஈ.மனோகரன் (இதுவரை பொப்பிசைப் பாடகராக அறிமுகமாகி பிரசித்தி பெற்றவர்.) இப்படத்தின் மூலம் இசைக் கல்லூரி அதிபராகப் பதவி உயர்வு பெறுகிறார்.)

இலங்கை வானொலி அறிவிப்பாளராகவும் வானொலி நாடக நடிகராகவும் தன்குரலால் உலகத்தை ஈர்த்தவரும் இலங்கை சிங்களச் சினிமா மூலம் சினிமாவை உலுக்கியவருமான நடராஜசிவம் இப்படத்தில் நடிக்கிறார்.

தொழில்நுட்பக் கலைஞர்கள் :

இயக்குநர் : முகேஷ்
இணை இயக்குநர் : முத்துகுமார்
ஒளிப்பதிவு : பி.ஆர்.ராஜன்
கதை : வினோலியா, பாடல்கள் : வசீகரன், இசை : உதயா, படத்தொகுப்பு : வாசு சலீம், நிழற்படம் : சிற்றரசு, நடன இயக்குநர்கள் : 'மன்மதராசா' புகழ் சிவசங்கர், 'காதல்' புகழ் கந்தாஸ், அவர்களுடன் மில் சுதர்ஷன், நந்தகுமார் மல்லிகா கீர்த்தி.
இரசாயன கூடம் : பிரசாத் லேப்.




'சித்திரம் பேசுதடி' பாவனாவுக்குப் போன் போட்டால் அட்டன்ட் பண்ணுவது அவரின் அப்பாதான். நாம் போன் போட்டபோது அப்பாதான் அட்டன்ட் பண்ணினார். மேடத்துக்கிட்ட நாலு வார்த்தை பேசணும் என்றால், 'பிளஸ்2 பரீட்சைக்காக படிச்சிக்கிட்டிருக்குது. நாங்க சென்னை வர்றப்ப பேசிக்கலாமே? இருந்தாலும் சட்டுன்னு நாலுவார்த்தை பேசிடுங்க' என போனைத் தருகிறார் பாவனாவின் அப்பா.

இனி பாவனா என்கிற அந்தச் சித்திரம் பேசுதடி....

***நயன்தாரா உட்பட கேரளாவிலிருந்து வந்த நடிகைகள் பலரும் கிளாமராகவும் நடிக்கிறார்கள் ஆனால் நீங்கள் கிளாமராக நடிக்கமாட்டேன் எனச் சொல்லியிருக்கிறீர்களே?***

ஆமாம்! கிளாமராக நடிப்பதில்லை என்பது என்னோட பாலிஸி. இதில் எந்த மாற்றமும் கிடையாது. இதனால் சில வாய்ப்புகளை இழப்பதானாலும் அதைப்பத்தி எனக்குக் கவலையில்லை. நீங்கள்தான் கிளாமரா நடிக்காவிட்டால் எப்படி தாக்குப்பிடிக்க முடியும் என்றெல்லாம் சந்தேகத்தைக் கிளப்புகிறீர்கள். ஆனால் இரசிகர்கள் அப்படியல்ல. சிலபேரை கிளாமராக இரசித்தாலும் சிலரை நடிப்புக்காக மட்டுமே இரசிப்பார்கள். ரேவதியெல்லாம் இன்னமும் தமிழக மக்களின் மனதில் நீடிக்கிறார். அவர் என்ன கிளாமராவா நடித்தார்? மறுபடியும் சொல்கிறேன்..கவர்ச்சி இல்லாத குடும்பப் பாங்கான கேரக்டர்களில்தான் நான் நடிப்பேன்."

***இப்போது என்ன படம் நடிக்கிறீர்கள்?***


"மாதவன் ஜோடியாக 'லவ் டுடே' பாலசேகரன் இயக்கத்தில் 'ஆர்யா' படத்தில் நடிக்கிறேன். இந்தப் படத்தில் நான் ஒரு பிரபல தாதாவின் மகள். மாதவன் ஒரு மருத்துவக் கல்லூரி மாணவர். அவர் எம்.பி.பி.எஸ். படிக்க முடியாதபடி எப்படியாவது குட்டிச்சுவராக்கி தன் கூட்டத்தில் சேர்த்துக்கொள்ள விரும்புகிறார் என் அப்பா...எனக்கோ மாதவன் மீது ரொம்பவே காதல். நீ எப்படியாவது அவனைப் படிக்கவிடாமல் கெடுத்து, என்னிடம் கூட்டிவந்துவிடு. நான் உனக்கு அவனை திருமணம் செய்து வைக்கிறேன் என்கிறார் என் அப்பா. இதற்காக நானும் ஒரு லோலாயி போல் அவரை வம்பு பண்ணி அவரை ரவுடியாக்க முயற்சிக்கிறேன். இதுதான் எனது கேரக்டர்.

இதேபோல் ஷங்கர் சார் தயாரிப்பில் வசந்தபாலன் இயக்கும் 'வெயில்' படத்தில் பரத்துக்கு ஜோடியாக நடிக்கிறேன். சரி....இப்ப நான் படிக்கப்போறேன். குட்பை..."என்றது அந்தச் சித்திரம்.






## நானும் நீயும்



மென்மை அடர்ந்த
என் இதய மத்தியில்
இருக்கிறதுன் முகம்.

நீ பேசுகிறாய்
பாடுகிறாய்
விழிகளில் மகிழ்ச்சி துப்பிச்
சிரிக்கிறாய்.

உன் நினைவுகளில்
பசை எதுவும் இருக்கிறதா?
என் இதயச் சுவர்களில்
அழுத்தமாக
ஒட்டிக் கொண்டிருக்கிறாயே!

உற்று உற்றுப் பார்த்தும்
உணர்ந்து கொள்ள முடியா
அருவமாய் நின்று
என் புதையல்களைக் கிளறுவது
உனக்கெப்படிச் சாத்தியமாயிற்று!

எனினும்,
வழியும் நிலவொளியாய்,
நெளியும் சிற்றாறாய்,
காற்றுதிர்க்கும் பூவிதழாய்
மனமள்ளும் தென்றலாய்
நீ அழகானவள் தான்.

இப்படியெல்லாம்
உன்னைப் பற்றிய
உண்மைகளை எழுதினால்
பெண்ணை வர்ணிக்கும் இழிஞனென
என்னைத் தூற்றுவர்
நீ என் மனைவி என்பதை
அறியாதவர்கள்.

*-ஸபீர் ஹாபிஸ்.*

## முத்தமிடும் போது...

ஆயிரம்
தேன்
சமுத்திரங்களைவிட
இனித்தது
உன்
ஒரு முத்தம்.

கோடி மலர்கள்
விரிந்தன
எனக்குள்
நீ
முத்தமிட்டபோது.

ஒரு
பூஞ்சோலையில்
என்னை
முத்தமிட்டாய் நீ...
அத்தனை பூக்களும்
உதிர்ந்தன
வெட்கப்பட்டு!

நாவை
நனைக்கின்ற
தேனல்ல இது
உயிரை
நனைக்கின்ற
தேன் இது!

காற்றுக்கூட
என்
கண்களுக்குத்
தெரிந்தது
நீ
முத்தமிட்ட
வினாடியில்!

இதழ்களால்
மின்சாரம் மட்டுமா
செய்து
தந்தாய்...
சொர்க்கமுந்தான்!

*-ஏ.சி.ராஹில்.*

## பிணமாக்க வேண்டாம்

பிணமாக்கப்பட்டுக்
கிடக்கிறது
பெண்ணின் மனம்.

பரிதாபமாய்
இருக்கிறது
பார்ப்பதற்கு.

'பெண்'விடுதலை
பேச்சில் மட்டும்
தானே
இன்னுமிங்கே
உயிர் வாழ்கிறது.

பாவக்காரியாகவா
பெண்ணிந்த
மண்ணிலே
படைக்கப்பட்டிருக்கிறாள்?


அறிவிலிகளே...
அற்பர்களே...
பெண்ணின் மனம் தான்
பிரம்மன்
உறையும் இல்லம்.

அவளது
கருவறைதான்
இவனது
படைப்புத்
தொழிலுக்கான
களம்.

ஓ...மறக்க வேண்டாம்
பெண்ணின் மனதை
இன்னும்
புண்ணாக்க வேண்டாம்;
பிணமாக்க வேண்டாம்.

*-வில்லூரான்.*

## தேசியக் கீதமே



தேசியக் கீதமே!
என்னை
மன்னித்து விடு.

நீ!...
என் காதைத் துளைக்கும்
போது
என்னால்
ஆடாமல்...அசையாமல்
பேசாமல்....மௌனமாய்
இருக்கவே முடியாது.
அதனால்தான்
என்னை மன்னித்துவிடு.

நீ!...
ஒலிக்கும் வேளை
அலைகள்
நெளிந்தாற்போல்
வளைந்தாற்போல்
மேலே பாய்ந்தாற்போல்
கீழே விழுந்தாற்போல்
ஏன்
பறவைகள்
அந்தரத்திலே
அப்படியே நிற்கலாம்;
அப்போது
சாதாரணமாய்
சுவாசிக்கும் நான்
பெருமூச்சு விடுவேன்.
சூறாவளியும்
சுனாமியும்
சிலையாகிடலாம்
அந்நிலையில்
நான்
தூக்கத்திலிருந்தாலும்
கீச்சிக் கத்திக்கொண்டு
கல்லறைகளைக் கூட
மிதித்துக் கொண்டே ஓடுவேன்.

பாதணியில்லாத நான்
புனிதஸ் தலத்துக்குள்ளே
பாதணியோடு ஓடுவேன்.

ஓடுவேன்...ஓடுவேன்
தலைதெறிக்க ஓடுவேன்.

அப்போது தேசியக் கீதமே!
நீ!...
ஒலித்துக் கொண்டிருப்பாய்.
நொடிப் பொழுதேனும்
மரியாதை செய்ய மாட்டேன்.

ரவைகள்
என்னைத் துரத்தும் போது
நொடிப் பொழுதேனும்
மரியாதை செய்ய
நேரமிருக்காது - அதனால்
என்னை மன்னித்து விடு.

*-அ.கா.மு.றிஸ்வின்,*
*மூதூர் - 01.*

## விடுதலை

மனிதர்களாயிருந்தோம்
எம்மை அவர்கள் வேட்டையாடினர்.
வாழ்வுரிமைக்காய் தோளுயர்த்தினோம்
தோளோடு தோள் கொடுக்க
தோழர்கள் பல முகாம்களில்
ஒன்றிலிருந்து
வெறிகொண்ட வேங்கை...

வெல்லப்போவது
விடுதலை என நினைத்தோம்
வீழ்ந்தோம்
புறநானூற்றுக்குப் புகழ்பாடும்
ஹிட்லரின் காலடியில்.

அன்று அப்பப்போ கேட்ட
மரண ஓலம்
இன்று தினமும்...
அவர்கள்
விதவைகளாக்கினர் சிலரை
இவர்களோ பலரை....
தியாகிகள் எல்லாம்
துரோகிகளாய் புதைக்கப்படுகிறான்.
அரசியலில் கல்வியில்
சம உரிமை இல்லை என்பது
அன்றைய பிரச்சினை
இன்று ஊமையாய் இருப்பதற்கும்
அனுமதியில்லை.
அவர்களை மொழிவெறிப் பித்தர்
என்றோம் அன்று
பொங்கிப் பொங்கி வழிகிறது
அது இங்கு இன்று.

இருபது முப்பது வருடங்கள்
வரலாற்றுக் கடலில்
சிறு புள்ளி
ஆயுத அடக்குமுறையின்
ஆயுள்
சுவடழிக்கும் கடலலையின்
மிக அருகில்.


*-மானுடன்.*

## துரோக சபலம்



இன்னல் பெறும்
இதய ஓரங்களை
வலிக்கச் செய்துவிட்டு
கனலும் பொழுதை
காறி உமிழ்ந்தபடி
தத்தி நகரும்
துரோக திராவகம் நீ!

என் கவிதை எரித்து
அல்லது
என் இருதயம் கிழித்து
அஸ்தி கரைக்கும் - உன்
அழகுப் புன்னகையால்
அத்வைதம் அடைவேன்.



உறுதியற்று
நிலத்தைப் பறிகொடுத்த
தோட்டக்காரனாய்
உன் வீட்டு வாசலில்
தவம் கிடந்த
நாட்கள் எண்ணி
திரும்பி நகரும்
என் ஆத்மம்.

*-பெரியசாமி விக்னேஸ்வரன்,*
*ஹட்டன்.*

## உயிரே...!

உன் சிவப்புச்
சிரிப்பில் - என்
செங்குருதிக்
கலன்கள்
செத்துப்
போகின்றன.

கனவிலாவது - என்
கரம்கோர்த்தபடி
வா!
இந்த உலகே
கிடைத்த
பெருமையை
நான்
உணர்ந்து
கொள்வேன்.

உயிருக்கு
மறுபெயராய்
உன்னை
மொழிபெயர்த்து
வைத்திருக்கிறது
என் சுவாசம்.

நீ பேசு!
அல்லது
மௌனமாகவே
இருந்து விடு.
கீதம், கவிதை
இரண்டுமே - எனக்குப்
பிடித்தவைதான்.

*-சிஹ்னாஸ் தௌபீக்,*
*ஹுஸைனியாபுரம்.*

# கவிதை எழுதுதலும் வாசித்தலும்

[பயிற்சிக் களம்]

## சிறப்புக் கவிதையும் - கவிஞரும்

*உலக வலம் வரும் இணையங்களை எம்நாட்டு மற்றும் புலம் பெயர்ந்து வாழும் எம்மவர்கள் தமது உள்ளத்திலிருக்கும் உள்ளக் கிடக்கைகளை வெளிப்படுத்துவதற்கான ஊடகமாகப் பயன்படுத்துகிறார்கள் அந்த வகையில் இங்குள்ளவையும் தமது தாயக உறவுகளையும் தாங்கள் பட்ட துன்பங்களையும் மறக்கமுடியாமல் பல இளம் கவிஞர்கள் தங்கள் பங்கிற்கு வடித்த கவிதைகளின் சில துளிகள் இவ்வாரம் சிறப்புக் கவிதைகளுக்காக:*

## அன்பே ஆளும்

மனித உருவில் பிறக்கையிலே
மகான்களும் பிறந்திட விரும்பி
இறைவனிடம் இறைஞ்சி வேண்டி
இறையருள் பெற்று
தமிழர், சிங்களவர், முஸ்லிமென்று
தரணியிலே பிறந்து வாழ
தனக்குரிமை வேண்டுமென்று
தரணியில் வாழ் மக்களுக்கு
தடைக்கல்கள் பல வருவாக்கி
தமக்காகப் போராட வைத்து
காயங்களின் நிலையில்லாமையை
காயமுற்றும் கஷ்டப்பட வைத்தும்
காயமே பொய்யென்று
கலியுகத்தில் உணரவைத்தும்
உயிர் நீத்தவர்களின் விடிவுக்காய்
உண்மைச் சொரூபமது உண்மையை
உணர்த்தி நிற்கும் வேளையில்
பிறவாமை வேண்டும் - மீண்டும்
பிறந்துவிட வேண்மென்றும்
ஆசை கொண்டு உழல்கையிலே
ஆண்டவன் தரும் விடிவு - என்றும்
அன்பு என்ற ஒன்றுள்
அடக்கமென்ற உண்மையை
ஆண்டவா... நீ பிறந்தறிவித்திருந்தும்
அறியாதோரே பலருண்டு
கலியுகத்து விடிவு - உன்
கருணை கொண்ட உள்ளத்துள்
அன்பு என்ற ஒன்றே - நாளை
போர் மீண்டும் வராத நிலையை
போராடி உயிர் நீத்த
மகான்களும் அன்பு என்ற ஒன்றுள்
மனிதர்களை உள்ளர்த்து விடவும் மனித
உருவில் இறைவன்
மீண்டும்
பிறந்து அவதரிப்பார்.

*திருமதி அம்பலவாணி உதயகுமார்,*
*மஞ்சட்தொடுவாய்.*

முரசின் கவிதை பயிற்சிக்களம்
பகுதியில் புதிய கவிஞர்களின்
வெளியீடுகளை அறிமுகப்படுத்த முரசு
களம் அமைத்துக் கொடுக்கின்றது.
தமது கவிதை வெளியீடுகளை அல்லது
வெளியிடப்படவிருப்பவற்றை வெளிக்
கொண்டுவர விரும்புவோர் முரசுடன்
தொடர்பு கொள்ளலாம்.

## வெற்றி நிச்சயம்

ஏய்
இளைஞனே
நமக்குத்தான்
துயில் எழுப்புவதற்கு
சேவல்
கடிகாரம் எல்லாம்....
அந்த சூரியனுக்கேது?
கண்களில் முயற்சி
கைகளில்
நம்பிக்கை
மனதில்
இலட்சியம்
வேண்டும்!
போலி வேடங்களை
பொய்
வார்த்தைகளில்
சாயத்தைக் கிழி!
உன் பாதை
வழியில்
இனி
திசையெல்லாம்
கிழக்காய்
இருக்க...
வேண்டும்
தலை குனியாதே?
தலை நிமிர்
கை கலக்கி
வாழ வழியுண்டு

*கே.என். நீதன்.*

## எனது தேசத்து மண்ணில் சாவதே


எனது தேசத்து மண்ணில் சாவதே
எனக்குப் போதும்
அதற்குள் புதைக்கப்படுவதும்
எனக்குப் போதும்
உருகி
அந்த மண்ணுடன் கலந்து
மறைந்து போவதும்
எனக்குப் போதும்
எனது தேசத்தின் புனித முற்றத்தில்
ஒரு கைப்பிடியளவில் புழுதியாய்
ஒரு புல்லின் இதழாய்
ஒரு பூவாய் இருப்பதும்
எனக்குப் போதும்?

## காயவலி


புண் வந்த காயம்
ஆறாத
வலி
நீடிக்கும்
காயங்களின்
வலி
எல்லோருக்கும்
புரியப் போவதில்லை
இரவுத் தூக்கம்
தொலைந்து
அனுகி அனுகி
புரண்ட படுக்கை
என் அகராதியில்
ஏடு என்பதை
யாராலும் மறக்க முடியாது
பருவச் சுமைதான்
புண் வந்த காயம்
வலிப்பு
வரதட்சணையின் வேதனை
காயமும் வலிப்பும்
இனி.....
எந்த கண்களையும்
காயப்படுத்தக் கூடாது
இனியாயினும்...
மனதை
மாலையாக்கிப் போடுங்கள்

*மருதமுனை முனாஸ்.*

## பேனா நண்பர் பகுதி — பேனா நண்பர் பகுதி — பேனா நண்பர் பகுதி



பெயர் : ஜெ.சனூஸ்
வயது : 21
முகவரி : 594, சிராஜ் நகர்,
தம்பலகாமம்.
பொழுதுபோக்கு: வழமையானவை.



பெயர் : ஜெயினுதீன் முகம்மது
பிர்தௌஸ்
வயது : 18
முகவரி : நெய்தல் நகர்,
மூதூர் - 01.
பொழுதுபோக்கு : வானொலி,



பெயர் : துரை குமுதா
வயது : 27
முகவரி : கொக்குவில் மேற்கு
காந்திஜீ வீதி, கொக்குவில்.
பொழுதுபோக்கு : வழமையானவை.



பெயர் : எம். இம்ரான்.
வயது : 27
முகவரி : P.O.Box 47, PS 4
NFA, Doha, Qatar.
பொழுதுபோக்கு : இசை,
பத்திரிகை, ரி.வி.

# 2-3 வயது குழந்தைகளைப் பள்ளியில் சேர்ப்பது சரியா?

**தக்க** வயதுக்கு முன்பே பள்ளியில் சேர்ப்பதால், நம் சின்னஞ்சிறு குழந்தைகளின் குழந்தைப் பருவம் எங்கோ காணாமல் போகிறது. இன்று அவர்கள் பந்து விளையாடுவது, மண்ணில் வீடு கட்டுவது போன்றவற்றை விட்டுவிட்டு, கிளிகள் போல் பெரிய பெரிய நர்சரி ரைம்ஸ், பாடங்கள், கதைகள் போன்றவற்றை (அவற்றின் அர்த்தம் புரிந்தாலும் புரியாவிட்டாலும்) மனப்பாடம் செய்ய வேண்டியுள்ளது.



தங்கள் குழந்தைகள் ஆங்கில ரைம்ஸ் சொன்னால் பெற்றோருக்கு எல்லையில்லா மகிழ்ச்சி ஏற்படுகிறது. இன்று அந்தப் பிள்ளைகளின் குழந்தைத்தனம் முடிந்து வருகிறது. அவர்கள் வயதுக்கு மிஞ்சிய புத்திசாலியாகிறார்கள்.

இதற்குக் காரணம் தக்க வயதுக்கு முன்பே குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்புவதுதான். தன் குழந்தையை பள்ளிக்கு அனுப்பிவிட்டு, தாய்மார்கள் 2-3 மணி நேரம் ஓய்வு எடுத்துக்கொள்ள விரும்புகிறார்கள். எல்லாக் குழந்தைகளும் ஓடும்போது, ஏன் நம் குழந்தை மட்டும் பின்தங்க வேண்டும் என்றும் எண்ணுகிறார்கள்.

சில பள்ளிகளைத் தவிர, பெரும்பாலான பள்ளிகள் பணம் சம்பாதிக்கும் வியாபாரக் கூடங்களாக உள்ளன. அந்தப் பள்ளிகளில் உட்காருவதற்குக் கூட சரியாக இடம் இல்லாமல், அளவுக்கு அதிகமாகக் குழந்தைகளைச் சேர்த்துக் கொள்கிறார்கள். இந்த வயதில் குழந்தைகளுக்குத் தேவையான படிப்பை நீங்களே விளையாட்டாக வீட்டிலேயே சொல்லித் தரலாம். நிச்சயமாகக் குழந்தைகள் அதை நன்றாகப் புரிந்து கொள்வார்கள்.

குழந்தைகளின் மனம் அழகானது. அவர்களைச் சரியான வயதுக்கு முன்பே கட்டுப்பாடுகளில் கட்டிப் போடாதீர்கள். அவர்கள் படிக்கும் பள்ளி 5 - ஸ்டார் ஹோட்டல் போன்ற வசதி கொண்டதாக இருப்பினும், வீட்டின் சுதந்திரத்துக்கு ஈடு இணையில்லை. அவசரமாகக் குழந்தைகளைப் பள்ளியில் சேர்த்து நாம் அவர்களின் முன்னேற்றத்திற்குத் தடை போடுகிறோம். இதனால் குழந்தைகளுக்குப் படிப்பின் மீது வெறுப்பு ஏற்படவும் வாய்ப்புண்டு.


படிப்பதற்குப் பல ஆண்டுகள் உள்ளன. ஆனால் குழந்தைப் பருவம் விரைவில் முடிந்து விடும். குழந்தைகள் குழந்தைகளாக இருக்கட்டுமே!

# பரீட்சையா? நோ பிராப்ளம்!

**படிப்பு** என்றாலே பலருக்குக் கசக்கும்! தன் பாடங்களை விரும்பிப் படிக்கும் மாணவர்கள் எத்தனைப் பேர்? பிடித்தாலும் பிடிக்காமல் போனாலும் படிப்பு மிகவும் முக்கியமானது. வளமான எதிர்காலத்திற்கு வழி வகுப்பது படிப்பு என்பதை யாராலும் மறுக்க முடியாது.

பரீட்சை வந்தாலே எல்லோருக்கும் பயம் தான். அதிக நேரம் படிக்காமல் சிலர் நல்ல மதிப்பெண்கள் வாங்குவதைப் பார்க்கும் போது எரிச்சல் வரத்தான் செய்யும்! எவ்வளவு நேரம் படிப்பில் செலவு செய்கிறோம் என்பது முக்கியமல்ல. இது நாம் முதலில் தெரிந்து கொள்ள வேண்டிய ஓர் உண்மை. அந்த நேரத்தை எவ்வாறு செலவிடுகிறோம் என்பது தான் முக்கியம்.

புத்தகத்தைக் கையிலும் மனதை வேறு இடத்திலும் வைத்துக் கொண்டு படிப்பதால் நேரம் வீணாவதுதான் மிச்சம். அது மட்டுமில்லாமல் நண்பர்களோடு சுற்றும் நேரம், டி.வி. பார்க்கும் நேரம் ஆகியவற்றை மறந்துவிட வேண்டியது தான்! நேரம் குறைவாகச் செலவழித்தாலும் படிப்பில் முன்னேற இதோ சில வழிகள்...



***வீட்டுப் பாடங்கள் :-*** வீட்டில் செய்ய ஆசிரியர்கள் கொடுக்கும் பாடங்களை தவறாமல் செய்வதால் தினமும் சொல்லித் தரும் பாடங்கள் மனதில் பதியும்.

***ஈ அடிச்சான் காப்பி :-*** சிலர் காப்பி அடிப்பதே வாழ்வின் லட்சியமாகக் கொண்டுள்ளனர். வீட்டுப் பரீட்சையோ பாடமோ, அடுத்த மாணவியை நம்பியே வாழ்கின்றனர். இது தற்காலிகமாக உதவினாலும், ஒரு நாள் பிரச்சினையைத் தான் தரும்.

***வகுப்பில் கவனம் :-*** ஆசிரியர் பாடம் நடத்தும் போது கவனம் செலுத்துவதால் வீட்டில் படிக்கும் நேரத்தைப் பாதியாகக் குறைக்கலாம்.

***குறிப்பு எடுப்பது :-*** ஆசிரியர் பாடம் நடத்தும் போதும், வீட்டில் படிக்கும் போதும் முக்கியமான குறிப்புக்களை எழுதிவைப்பது நல்லது. பரீட்சை நேரத்தில் அவசரமாகப் படிக்க உதவும்.



***சந்தேகங்களைத் தீர்ப்பது :-*** ஆசிரியர் சொல்லும் போது புரிந்தது. வீட்டிற்கு வந்தால் மறந்து விட்டது! என்ன செய்வது? அடுத்த நாள் மறக்காமல் ஆசிரியரிடம் உங்கள் சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்ளவும்.

***தினமும் படிப்பது :-*** தினமும் படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளவும். பரீட்சைக் காலத்தில் எல்லாவற்றையும் படிக்க முயற்சித்தால் அதிக நேரம் செலவாகும். அத்தோடு ஒரே சமயத்தில் எல்லாவற்றையும் படித்தால் அது நினைவில் தங்குவதும் கடினம்.

***படிக்கும் போது படிப்பு :-*** கவனம் செலுத்தி ஒரு மணி நேரம் படிப்பது, கவனம் செலுத்தாமல் நான்கு மணி நேரம் படிப்பதற்குச் சமம். அவ்வளவு நேரம் செலவழித்தும் மனதில் பதியும் என்ற உறுதியும் இல்லை. அதனால் படிக்கும் நேரத்தில் படிப்பில் மட்டுமே கவனம் செலுத்துவது நல்லது.

பரீட்சைக் காலத்தில் இந்தக் குறிப்புகளைப் பயன்படுத்தினால், குறைந்த நேரம் செலவழித்தாலும் நல்ல மதிப்பெண்களைப் பெறுவது சுலபமாகும்.




# அழகுக்கும், இளமைக்கும் 'மாஸ்க்'!

**முகத்தை** அழகாகவும், இளமையாகவும் வைத்திருக்க 'மாஸ்க்' மிக முக்கியமானது. இது முகப் பொலிவைக் கொண்டு வருவதுடன் ஒரு வெளிப்படையான நிற மாறுதலையும் கொண்டு வரும்.

அது மட்டுமில்லாமல், உங்கள் முகத்தில் ஒரு மென்மையையும் புத்துணர்வையும் கொடுக்கும். இதனைச் சரியாக மற்றும் பொருத்தமான அளவில் பயன்படுத்துவதால் முகத்தில் தெரியும் குறைகள் நீங்குகின்றன.

மார்க்கெட்டில் ஏராளமான 'மாஸ்க்' வகைகள் உள்ளன. உங்கள் முகத்தைப் பொறுத்து பொருத்தமான 'மாஸ்க்'கை தேர்ந்தெடுத்து அதையே கடைசி வரை கடைப்பிடிக்கவும். நீங்கள் விரும்பினால் வீட்டிலுள்ள பொருட்களைக் கொண்டே மாஸ்க்கை தயாரிக்கலாம்.



*சொர சொரப்பான சருமத்திற்கு :*

முட்டையின் மஞ்சள் கருவை பாதி தேக்கரண்டி தேனுடன் கலந்து, அதனுடன் ஒரு தேக்கரண்டி பால் பவுடர் போட்டுக் கலந்து 'பேஸ்ட்' மாதிரி உருவாக்கி முகத்தில் சீராகத் தடவவும். 20 நிமிடத்திற்குப் பிறகு நீரால் முகத்தைக் கழுவிக் கொள்ளவும்.

*பிசுபிசுப்பான (எண்ணெய்ப் பசை) சருமத்திற்கு*

முட்டையின் வெள்ளைக் கருவை பாதி தேக்கரண்டி தேனுடன் கலந்து, அதில் பாதி தேக்கரண்டி எலுமிச்சைச் சாறு கலந்து 'பேஸ்ட்' மாதிரி செய்து கொண்டு முகத்தில் சீராகத் தடவவும். 20 நிமிடத்திற்குப் பிறகு முகத்தை நீரால் கழுவிக் கொள்ளவும்.

*ஆழமான துளைகள் கொண்ட சருமத்திற்கு :*

சோள மாவுடன் பால் கலந்து அதில் சிறிது எலுமிச்சைச் சாறு கலந்து பேஸ்ட் செய்து அதை முகத்தில் உடனே தடவிக் கொள்ளவும். முல்தானி மிட்டி ஒரு மாஸ்க்காகப் பயன்படுகிறது. எண்ணெய் பிசுபிசுப்பு முகம் மற்றும் காம்பினேஷன் முகத்திற்கும் இதைப் பயன்படுத்தலாம்.

*கருப்பு மருக்களைக் கொண்ட சருமத்திற்கு :*

முட்டையின் வெள்ளைக் கருவை சோள மாவுடன் கலந்து பேஸ்ட் ஆக்கி இதைக் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்தது அரை மணி நேரம் வரை தடவவும். பிறகு தூய்மையான நீரில் தேய்த்துக் கழுவவும்.

*எல்லாவித சருமத்திற்கும் :*

வெள்ளரி பேஸ்ட்டைச் செய்து முழு முகத்திலும் தடவவும். வெள்ளரி சாறு கண்களின் ஓரங்களில் உள்ள கரு வளையங்களை நீக்க உதவும். இது பொலிவை ஊட்டுவதோடு குளிர்ச்சியையும் தருகிறது.

*மாஸ்க் தடவும் முறை*

நன்றாக முகத்தைக் கழுவிக் கொள்ளவும். அகன்ற பாத்திரம் மற்றும் மிருதுவான பிரஷ்ஷை உபயோகிக்கவும். 'மாஸ்' கை முகத்தின் மென்மையான பாகங்களான கண்களின் ஓரம், இமைகள் மற்றும் உதடுகள் ஆகியவற்றில் தடவுவதைத் தவிர்க்கவும்.

'மாஸ்க்' தடவிய பிறகு குறைந்தது அரை மணி நேரம் காய வைக்கவும். 'மாஸ்' கை அகற்றும் போது கவனத்துடன் அகற்றவும். மீண்டும் தூய்மையான நீரால் நன்றாக முகத்தைத் துடைத்துக் கழுவவும்.


# வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

## முரசு வாசகர்களுக்கான பரிசுப் போட்டி

கேள்வி இல்லை! பதில் இல்லை!
பொருட் கொள்வனவு அவசியமில்லை!
வயது, பால் வேறுபாடின்றி வாசகர் பங்கு பெறலாம்!

## முரசு வாசகர்களுக்கான பரிசுப் போட்டி

19

பெயர் : ..................

முகவரி : ..................

..................

..................

தே-அ- அட்டை இல : ..................

கையொப்பம் : ..................

உண்மை - நேர்மை - வெளிப்படைத்தன்மை

ஒவ்வொரு வாரமும் அதிர்ஷ்டசாலி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப் படுவார்.

மேலேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் மட்டும் ஒட்டி அனுப்பினால் போதுமானது. (பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது).

ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களை அனுப்பலாம்.

கூப்பனை அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:
02.05.2006

*அனுப்பி வைக்க வேண்டிய முகவரி*

**வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி**
**முரசு பரிசுப் போட்டி - 19**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ.இல - 1772**
**கொழும்பு.**

பரிசுப் போட்டி இல - 17
பரிசு பெறும்
அதிர்ஷ்டசாலி

**கா.ஜெனந்தினி,**
1ஆம் வட்டாரம், குச்சவெளி, திருகோணமலை.

அதிர்ஷ்டசாலி உடனடியாக எம்முடன் தொடர்பு கொள்ளவும்.


# சமைப்போம் சுவைப்போம்

*தொகுத்துத் தருவது -ஷோபா-*

## வெண்டிக்காய் பக்கோடா

*தேவையான பொருட்கள் :-*

| | |
|---|---|
| வெண்டைக்காய் | - 1/2 கிலோ |
| நல்லெண்ணெய் | - பொரிப்பதற்கு |
| கடலை மா | - 2 மேசைக் கரண்டி |
| அரிசி மா | - 11/2 மேசைக் கரண்டி |
| மக்காச் சோள மா | - 1 மேசைக் கரண்டி. |
| உப்பு | - அரை தேக்கரண்டி |
| மிளகாய்த் தூள் | - தேக்கரண்டி |
| அஜினோ மோட்டா | - சிறிதளவு |

*செய்முறை :-*

வெண்டைக்காயை கழுவித் துடைத்து விட்டு 3 அங்குல நீளத் துண்டங்களாக அரிந்து அதை நான்காகப் பிளக்கவும்.

கலவை தயாரிக்கக் குறிப்பிடப்பட்ட பொருட்களை ஒன்றாகக் கலந்துகொள்ளவும்.

அரிந்த வெண்டைக்காயின் மீது சிறிதளவே (1 மேசைக் கரண்டி) தண்ணீர் தெளித்து கலந்து வைத்த மாவை அதன் மேல் தூவி பிசறி விடவும்.

ஒரு வாணலியில் நல்லெண்ணெயைச் சூடாக்கவும்.

எண்ணெய் சூடானதும் நெல்லிக்காயளவு புளியை அதில் போட்டு நன்றாகக் கறுப்பாக பொரிந்ததும் எடுத்து விடவும்.

பிசறி வைத்த வெண்டைக்காயை கைகளால் எடுத்து பகோடா போல உதிரியாக எண்ணெயில் தூவவும்.

வேகும் போது திருப்பி நன்றாக மொறுமொறுப்பாகும் வரை பொரிக்கவும்.

தேவைப்பட்டால் பேப்பரில் வைத்து எண்ணெய் உறிஞ்சிய பிறகு பரிமாறலாம்.




**பிற்பாடு** சிறையிலிருந்து தப்ப முயற்சி செய்யும் போது இவர்களைத் தோழர்களாக்கிக் கொள்ளலாம்.

மார்சேல்ஸிலிருந்து வந்திருந்த தேகா என்பவனைத் தேர்ந்தெடுத்தேன். பார்பரிடம் வரும்போது அவனைப் பார்க்கலாமென முடிவு செய்தேன். தினந்தோறும் ஷேவ் செய்துகொள்வதற்காக பார்பரிடம் அவன் வருகிறான். நானும் ஷேவ் செய்துகொள்ள வேண்டும் என்றேன்.

அங்கே போனபோது, சுவருக்கு முகத்தைக் காட்டினாற்போல் அவன் நின்றிருந்தான்.

தன் முறை இன்னும் சற்றுத் தாமதமாக வரட்டும் என்று நினைத்தான் போலும். பின்னாலிருந்த இன்னொருவனை முன்னால் போகும்படி விட்டான் அவன். நான் வேறொருவனை முண்டிக்கொண்டு அவன் பின்னே சென்று, "என்ன தேகா, சௌக்கியமா?" என்று வேகமாய்க் கிசுகிசுத்தேன்.

"சௌக்கியம்தான், பட்டாம்பூச்சி. எனக்குப் பதினைந்து வருடம் கொடுத்துவிட்டார்கள். உன் கதை என்ன? ரொம்பத் தீட்டிவிட்டார்கள் என்று சொல்கிறார்களே?"

"ஆமாம். ஆயுள் தண்டனை."

"அப்பீல் செய்யப் போகிறாயா?"

"இல்லை. இப்போதைக்கு நன்றாய்த் தின்று, உடம்பை நல்ல முறையில் வைத்துக்கொள்ளப் போகிறேன். அதுதான் முக்கியம். தேகா, நீயும் உடம்பை நன்றாய் வைத்துக்கொள், நிச்சயமாய் நமக்கு வலுவான உடம்பு தேவைப்படும். துட்டு வைத்திருக்கிறாயா?"

"ஆமாம், பவுன் ஸ்டார்லிங்காக, பத்தாயிரம் ஃபிராங்க் வைத்திருக்கிறேன். நீ?"

"ஊகூம்."

"என் பேச்சைக் கேள். கிடுகிடுவென்று காசு சேர். 'குழாயை' எடுத்துவர உன் மனைவி மூலம் ஏற்பாடு செய்."

"உஷ்! காவலாள் நம்மைக் கவனிக்கிறான்."

'குழாய்' வந்து சேர்ந்தது.

அருமையாய்ப் பாலிஷ் செய்யப்பட்ட அலுமினியக் குழாய் அது. ஒன்றுக்குள் ஒன்று செருகிக் கொள்ளும் இரண்டு பாதிகள் இணைந்தது. நடுவில் திருகினால் பிரிந்து கொள்ளும்.

புத்தம் புதிய நோட்டுகள் - 5,600 ஃபிராங்கு - அதற்குள் இருந்தன.

என் கைக்கு வந்ததும் அதை முத்தமிட்டேன். ஆம்! மூன்றரை அங்குல நீளமும், கட்டைவிரல் பருமனுமுள்ள அந்தக் குழாயை முத்தமிட்டேன்.

அதை என் ஆசன வாயின் வழியே என்னுள்ளே செருகிக் கொண்டேன். மூச்சை ஆழமாய் இழுத்து, அது மலக்குடலில் உள்ளே நன்கு செல்லுமாறு செய்தேன்.

அதுதான் என் சேஃப் டெபாஸிட்.

அவர்கள் என் ஆடைகளைக் களைவார்கள். கால்களைப் பிரிக்கச் செய்வார்கள். இரண்டாக என்னை வளைப்பார்கள். இருமச் செய்வார்கள். ஆனால் என்னிடம் வைத்திருப்பதை ஒரு நாளும் அவர்களால் கண்டு பிடிக்க முடியாது.

என் பெருங்குடலுக்குள் அவ்வளவு தூரம் சென்று விட்டது அது. இனி அது என்னில் ஒரு பகுதி.

எனக்குள் வைத்துச் சுமந்து கொண்டிருக்கின்ற இதுதான் வாழ்வு; இதுதான் விடுதலை; இதுதான் பழிக்குப் பழி வாங்குவதற்கான பாதை.

ஆம். பழிக்குப் பழி வாங்குவது என்று நான் நிச்சயமாய் முடிவு செய்துவிட்டேன்.

வெளியே இருட்டிவிட்டது.

நான் தனியே இருந்தேன் சிறைக்குள். தலைக்கு மேலே பிரகாசமான விளக்கு எரிந்து கொண்டிருந்தது. கதவிலுள்ள சிறு ஓட்டை வழியாகக் காவலாளி என்னைக் காண முடியும். அந்த வெளிச்சம் என் கண்களைக் கூச வைத்தது. வலிக்கச் செய்தது. எனவே என் கைக்குட்டையை மடித்துக் கண்களின் மீது போர்த்திக் கொண்டேன்.

இரும்புக் கட்டிலில் ஒரு பாய் மீது நான் படுத்திருந்தேன். தலையணை கிடையாது. வழக்கின் பயங்கரமான விவரங்கள் அனைத்தும் என் மனத்தின் வழியே ஓடின.

இந்தக் கட்டத்தில் நான் சொல்லிக் கொண்டிருக்கும் விஷயம் ஒருவேளை அலுப்புத் தரக்கூடியதாக இருக்கலாம். ஆனால் இந்த நீண்ட கதையின் மிச்சப் பகுதிகளை நீங்கள் புரிந்துகொள்ளவேண்டுமானால் - தொடர்ந்து போராடும்படி என்னைத் தூண்டியது எது என்பதை முழுமையாக அறிய வேண்டுமானால் - இந்த இடத்தில் என் மனத்தில் தோன்றிய ஒவ்வொன்றையும் நான் சொல்லியே ஆக வேண்டும். உயிரோடு புதைக்கப்பட்ட நான், அந்த முதல் சில நாட்களில் என் மனக்கண்ணால் என்னென்ன கண்டேன் என்பதைக் கூறியே ஆகவேண்டும். பணம் கிடைத்து விட்டது. ஆகவே நான் தப்பப்போகிறேன் என்பதில் இம்மியும் சந்தேகமில்லை.

தப்பியான பிறகு என்ன செய்யப்போகிறேன்?

முதல் வேலை, பாரிஸுக்குப் போக வேண்டும் - எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம்.

முதலில் கொலை செய்ய வேண்டியது, எனக்கு எதிரியாகப் பொய்ச்சாட்சி சொன்னானே அவனை.

அடுத்துத் தீர்க்க வேண்டியது வழக்குக்குப் பொறுப்பான இரண்டு பொலிஸ்காரர்களை. இரண்டு பேர் போதாது. மொத்தப் பேர்களையும் தீர்த்துக் கட்ட வேண்டும். அல்லது குறைந்த பட்சம் எவ்வளவு பேரை முடியுமோ அவ்வளவு பேரை.

சரியான திட்டம் கிடைத்துவிட்டது.


தப்பித்துக் கொண்டதும் பாரிஸுக்குத்தான் திரும்ப வேண்டும். ஒரு பெட்டி நிறைய வெடி மருந்துகளை அடைத்துக் கொள்ளவேண்டும். பத்து, இருபது, ஏன், நாற்பது பவுண்டு வரைகூடக் கொள்ளும். எனக்கு நிச்சயமாய்த் தெரியவில்லை.

ஏகப்பட்ட பேரைக் கொல்ல வேண்டுமென்றால் எவ்வளவு வெடிமருந்து வேண்டும் என்று கணக்குப் போடத் தொடங்கினேன்.

வெடி மருந்தா? ஊகூம். அது வேண்டாம். ஏன், நைட்ரோக்ளிஸரினுக்கு என்ன? சரி. இதைப் பற்றி என்னைக் காட்டிலும் விஷயம் தெரிந்தவர்கள் சிறைக்குள் இருப்பார்கள். அவர்களிடம் யோசனை கேட்கலாம். எதுவானாலும் சரி. பொலிஸ்காரர்களே, இருங்களடா, இருங்கள். கொஞ்ச நாளில் வந்து கணக்குத் தீர்க்கிறேன். எக்கச்சக்கமாய்த் தீர்க்கிறேன்.

கைக்குட்டையை இறுக்கமாய்க் கட்டிக்கொண்டு கண்ணை மூடிக்கொண்டே கிடந்தேன். அந்தப் பெட்டியை என் மனக்கண்ணில் தெளிவாய்ப் பார்க்க முடிந்தது. வெளிப் பார்வைக்கு ரொம்ப சாதுவாய் இருக்கும். உள்ளே பூரா வெடிமருந்து. பெட்டிக்குள் அலாரக் கடிகாரம் - குறித்த நேரத்தில் கச்சிதமாய் வெடிக்கும். கவனம், கவனம். பொலிஸ் தலைமை அலுவலகத்தில் எல்லோரும் கூடுகிற அறையில் கரெக்டாய்க் காலை பத்து மணிக்கு வெடிக்கவேண்டும். அந்த நேரத்தில் குறைந்தது நூற்றைம்பது பொலிஸ்காரர்களாவது அங்கே இருப்பார்கள் - தகவல்களைத் தெரிந்து கொண்டு, கட்டளைகளைப் பெற்றுக்கொண்டு செல்வதற்காக. எவ்வளவு படிகள் ஏற வேண்டியிருக்கும் அங்கே? தப்பாய் கணக்கிடக் கூடாது.

பெட்டியை எடுத்துக் கொண்டு தெருவிலிருந்து புறப்பட்டு, வெடிக்க வேண்டிய இடத்தை அடைவதற்கு எவ்வளவு நேரம் பிடிக்கும் என்பதைக் கச்சிதமாய்க் கணக்குப் பண்ண வேண்டும். ஒரு விநாடிகூடப் பிசகக்கூடாது. ஆமாம் அதை யார் எடுத்துச் செல்வார்கள்? பொலிஸ் அலுவலகத்தின் வாசலுக்கு ஒரு வண்டியில் போய் இறங்குவேன். வாசலில் காவல் இருக்கும் இரண்டு முட்டாள்களிடம் அதிகாரமாக, "இதை மேலே கொண்டுபோய் மீட்டிங் அறையில் வையுங்கள். இதோ பின்னாலே வருகிறேன். இன்ஸ்பெக்டர் இதை அனுப்பினாரென்று கமிஷனரிடம் கொடுத்து, நான் வந்து கொண்டிருக்கிறேன் என்று சொல்லுங்கள்," என்பேன்.



எழுதியது: ஹென்ரி ஷாரியர்
தமிழில்: ரா.கி. ரங்கராஜன்

(பட்டாம்பூச்சி பறக்கும்)

## சூடு பிடிக்கும் தமிழகத் தேர்தல் களம்

**எதிர்வரும்** மே மாதம் 8ஆம் திகதி நடைபெறவிருக்கும் தமிழக சட்ட சபைத் தேர்தலை முழு இந்தியாவுடனும் சேர்ந்து இலங்கையும் மிக அவதானமாக நோக்கிய வண்ணமுள்ளது. கடந்த இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் - அதாவது இந்திய தேசத்தின் தலையெழுத்தினையே நிர்ணயிக்கும் தேர்தலில்கூட இல்லாத உக்கிரமும் போட்டியும் தமிழக சட்டசபைத் தேர்தலில் காணப்படுவது இங்கு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.



உண்மையில் தேர்தல் என்று சொல்லப் பட்டாலும் கூட, அது இரண்டு கட்சிக் கூட்டணிகளுக்கிடையே நடைபெறப் போகும் ஓர் நேரடிப் போட்டியாகவே காணப் படுகின்றது. ஜெயலலிதா தலைமையிலான அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணிக்கும், கருணாநிதி தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழகக், கூட்டணிக்கும் இடையில் நிகழப் போகும் இத்தேர்தல் போட்டி முடிவானது; வாழ்வா சாவா எனக் திகழப்போகும் நிலையில் இரு தரப்பினருமே வெற்றி பெற்றே தீருவது என கங்கணம் கட்டிக் கொண்டு களத்தில் குதித்துள்ளனர்.

வழமையாக ஓர் தேர்தலில் ஆளும் அணி, எதிர் அணி என இரு அணியினர் களத்தில் இறங்குவது வழமை. ஆனால், இம் முறை ஓர் சுவாரஸ்யமான விடயம் என்னவெனில், இரு ஆளும் அணிகள் அதாவது மத்திய ஆட்சியில் பங்கு வகிக்கும் தி.மு.க.வும், மாநிலத்தில் ஆட்சி செய்யும் அ.தி.மு.க.வும் நேரடிப் போட்டியில் இறங்கியுள்ளன.

இதில் மற்றுமோர் விடயம் இரண்டில் ஒரு அணி நிச்சயமாக அறுதிப் பெரும்பான்மை பெற்றே ஆகும். அதாவது தொங்கு சட்டசபையோ அன்றி ஆட்சியைத் தீர்மானிக்கும் மூன்றாவது சக்தி என்ற பேச்சுக்கோ இம்முறை இடமில்லை.

தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டு பிரசாரம் ஆரம்பமானது முதலே அனைவராலும் முக்கியமாக நோக்கப்பட்ட ஒரு விடயம் என்னவெனில் இம்முறை தேர்தலில் அனுதாப அலையோ அன்றி அதிகார அலையோ வீசவில்லை. வழமையாகவே பிரசாரத்தில் முக்கிய பங்கு வகிக்கும் மேற்படி அதிகாரத்தையும் அனுதாபத்தையும் தவிர்த்து ஏறக்குறைய கீழ்த்தட்டு மக்களின் வாக்குகளைக் கவர்வதற்கான உத்திகளே வகுக்கப்பட்டு பிரசாரம் மேற்கொள்ளப்படுகின்றன.


எனவே தான் தனி ஒரு பிரசாரப் பொருளாக "அரிசி" விஸ்வரூபம் எடுத்து நிற்கின்றது. தற்போதைய ஜெயலலிதாவின் ஆட்சியில் அரிசி கிலோ 3.50 இற்கு வழங்கப்பட்டு வருகின்றது. எவருமே எதிர்பாராத விதமாக நாம் ஆட்சிக்கு வந்தால் கிலோ 2 ரூபாவிற்கு அரிசி வழங்குவோம் எனக் கருணாநிதி குண்டைத் தூக்கிப் போட, ஆடிப்போன ஜெயலலிதா இருக்கும் நிதி நிலையில் எவ்வாறு 2 ரூபாவிற்கு அரிசி வழங்க முடியும் எனக் கேள்வி எழுப்பியவர், மறுகணமே அமையவிருக்கும் தமது ஆட்சியில் 10 கிலோ அரிசி இலவசமாகவே வழங்கப்படும் என தடாலடியாக அறிவித்திருக்கிறார். இதன் மூலம் தான் எதற்கும் தயங்காத "இரும்புப் பெண்" என்பதை மீண்டும் ஒரு தரம் நிரூபித்துள்ளார்.

ஆனால் சலுகைகளோ குறைந்த பாடில்லை. அரிசியில் ஆரம்பித்து, இலவச சைக்கிள், இலவச டி.வி., இலவச காஸ் அடுப்பு, இலவச இமைப்பூச்சு என நீண்டு கொண்டே போகின்றது. ஆனால் அனைத்திற்கும் பிள்ளையார் சுழி போட்டது அரிசி என்பதுதான் இங்கு விசேட அம்சமாகும்.

தேர்தல் வாக்குறுதிகளை விடுத்து இரு கட்சிகளினதும் ஆட்சி நடவடிக்கைகளை நோக்கினால் .இரு சாராருமே சிறந்த சாதனைகளையே நாட்டியுள்ளனர். மத்தியில் ஆட்சியில் பங்கு வகிக்கும் தி.மு.க. மத்தியில் தனக்கிருக்கும் ஆசனங்களின் அதிகாரத்தைக் கொண்டு பெருந்தொகை முதலீடுகளை தமிழகத்தின் பக்கம் திருப்பியுள்ளது. அதிலும் மிக முக்கிய அமைச்சுக்களில் அதன் கூட்டணி எம்.பி.கள் அமைச்சர்களாக உள்ள படியால் அதன் நலன்கள் தமிழகத்திற்குக் கிடைத்துள்ளன. உச்சக்கட்டமாக மத்திய அமைச்சரும் கருணாநிதியின் பேரனுமாகிய தயாநிதி மாறன், பில்கேட்ஸையே தமிழகத்துக்கு வரவழைத்து கணினி மென்பொருள் துறையில் தமிழ் நாட்டையே முன்னுதாரணமாக்கி அடிக்கல் நாட்டியுள்ளார்.

மறுபுறம் தமிழகத்தை ஆட்சி செய்த ஜெயலலிதாவும் இலேசுப்பட்டவரல்ல. எவராலும் குறை சொல்லப் படாத இந்திய மாநிலங்களுள் - முன்னேற்றமடைந்த முதல் 10 மாநிலங்களும் ஒன்றாக தமிழ்நாட்டினை நிலைநிறுத்தி இருக்கின்றார். காஞ்சி சங்கராச்சாரியார் கைது, வீரப்பன் சுட்டுக்கொலை போன்ற அதிரடி நடவடிக்கைகளும், மழைநீர் சேகரிப்புத் திட்டம் போன்ற நுணுக்கமான விடயங்களும் யாருமே எதிர்பாராதவை. அதாவது சராசரி தமிழக மகன் ஒருவர் சிறப்பாட்சி என சொல்லாவிட்டாலும், எவருமே மோசமான ஆட்சி நடைபெற்றது என சொல்வதற்கில்லை.

இம்முறை தேர்தலில் தமிழகத்துடன் தொப்புள் கொடி உறவுடைய இலங்கையின் வடக்கு, கிழக்கு தமிழர் பிரச்சினை ஏறக்குறைய மறக்கப்பட்ட அல்லது மறைக்கப பட்ட ஒரு விடயமாகவே நோக்கப்படுகின்றது. இலங்கைத் தமிழர் பிரச்சினைகளுக்கு அப்பால் புலிகளின் தீவிர விசுவாசிகள் என காட்டிக்கொள்ளும் வைகோ மற்றும் திருமாவளவன் ஆகியோர் புலிகளின் தீவிர எதிர்ப்பாளராகச் சொல்லிக் கொள்ளும் ஜெயலலிதாவுடன் கூட்டணி அமைத்துக் கொண்டது எவருமே எதிர்பாராத திருப்பம் ஒன்று. இதில் முக்கியமாக கவனிக்க வேண்டிய விடயம் என்னவெனில், புலி ஆதரவாளர்கள் ஜெயலலிதாவுடன் சேர்ந்துவிட்டனர். எனவே அ.தி.மு.க கூட்டணி, புலி சார்புடையதாக மாறும் என்றே கூறிக்கொண்டனர். ஆனால் பிரபல அரசியல் விமர்சகர் "துக்ளக்"சோ அண்மையில் வழங்கிய பேட்டி ஒன்றில் யதார்த்தமான ஓர் கருத்தைத் தெரிவித்துள்ளார். அதாவது "இவ்வளவு காலமும் பகிரங்கமாகப் புலிகளை ஆதரித்த வைகோ, இனி அடங்கிச் செல்லவேண்டிய நிலைக்குச் சென்றுள்ளார்" என மறுபக்கக் கருத்தினை தெரிவித்துள்ளார்.



அண்மையில் மேற்கொள்ளப்பட்ட கருத்துக் கணிப்புக்கள் ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க.விற்கு சார்பாகவே வெளிவந்துள்ளன. அக்கணிப்பு முடிவுகள்படி அ.தி.மு.க. கூட்டணி தி.மு.க. கூட்டணியை விட சிறிது அதிகமாக வெற்றி விகிதத்தைக் தட்டிக் கொள்ளும் வாய்ப்புள்ளது..

ஆகவே நடக்கவிருக்கும் சட்ட மன்றத் தேர்தலில் கருணாநிதி தலைமையிலான தி.மு.க.விற்கும், ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க. விற்கும் இடையே முன்னெப்போதும் இல்லாதவாறு கடுமையான போட்டி இடம்பெறுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

சிரிப்பு 03

# "வெளியே சிரிப்பும் உள்ளே அழுகையுமாக வாழ்ந்தேன்"



ஃப்ரட் கரினோ குழுவின் புகழ் இங்கிலாந்தில் மட்டுமல்லாமல் கடல்களைத் தாண்டி அமெரிக்காவிற்கும் பரவியது. அங்கு பல ஊர்களில் நிகழ்ச்சிகளை நடத்த குழுவை அமர்த்திக் கொண்டு கார்னோ நியூயோர்க் நகரத்திற்குச் செல்லக் கப்பலேறினார். அந்தக் குழுவில் ஒருவன் தான்இருபத்தொரு வயது இளைஞனான சார்லி சாப்ளின். அவருடன் சென்ற மற்றொரு இளைஞன்



அன்று பெயரோ புகழோ இல்லாதவன். விரைவிலேயே திரைப்பட உலகில் காலத்தால் அழிக்க முடியாத புகழைப் பெற்றவன். அவன்தான் ஸ்டேன்லாரல். (Stane Laurel ) பெயரைச் சொன்னவுடனே நகைச்சுவை இரட்டையர்களான லாரல் ஹார்டியில் (Laurel & Hardy ) லாரல் இவன்தான்!

அந்தக் கப்பல் அட்லாண்டிக் மகா சமுத்திரத்தைத் தாண்டும் பொழுது இந்த இருவருக்கும் புதிய உலகமான அமெரிக்காவில் செல்வம், செழிப்பு, உலகப் புகழ் போன்றவையெல்லாம் இவர்களுக்காக காத்துக் கொண்டிருந்தன என்பது இவர்களுக்குத் தெரியாது. கனவிலும் நினைக்காதது.

அமெரிக்கா! வேகமாக பல துறைகளில் முன்னேறிக் கொண்டிருக்கும் ஒரு மகத்தான நாடு. அங்கு பலவகையான பல மொழிகளைப் பேசும் மக்கள். சிவப்பு இந்தியர்களைத் தவிர (Red Indians ) மற்ற அமெரிக்கர்கள் எல்லோருமே இந்தப் புதிய பூமியை, புதிய வானத்தை, புது வாழ்வைத் தேடி அங்கு வந்தவர்கள். ஐரோப்பாவிலிருந்து பல லட்சக்கணக்கானவர்கள், ஏழ்மை, அரசியல், ஜாதிப் பிரச்சினைகள் போன்ற காரணங்களுக்காக தாய்நாட்டை விட்டு அமெரிக்காவில் தஞ்சம் புகுந்தவர்கள். 19ஆம் நூற்றாண்டின் இறுதிக் கட்டத்தில் வந்த பலருக்கு ஆங்கிலம் பேச, எழுதத் தெரியாது. ஆகையால் அவர்கள் வாழக் கூலி வேலைகளைச் செய்ய வேண்டியிருந்தது. இந்த உழைக்கும் மனப்பான்மை அமெரிக்க நெஞ்சம், உடல், இரத்தம் எல்லாவற்றிலுமே புகுந்து விட்டது. அமெரிக்கர்கள் சலியாது உழைக்கிறார்கள் என்றால் இதற்கு பின்னணி இதுதான்!

ஐரோப்பா போன்ற நாடுகளிலிருந்து ஆங்கிலம் தெரியாதவர்களுக்குப் பொழுதைப் போக்க, மனதில் களிப்பூட்ட, கைநீட்டி வந்தது 1895ஆம் ஆண்டில் அவதாரம் எடுத்த ஊமைத் திரைப்படம். படம் பேசாது என்பதினால் மொழிப் பிரச்சினை இல்லை. நாடகங்கள் ஆங்கிலத்தில் தான் நடக்கும். அதற்கு ஆங்கிலம் தெரிந்த பணக்காரர்கள், படிப்பாளிகள் தான் செல்வார்கள். நாடகம் பார்க்க நுழைவுக் கட்டணமும் அதிகம். ஆகையால் இதர மட்டத்து ஆங்கிலம் தெரியாத மக்கள் "வாட்வில்" நிகழ்ச்சிகள், ஊமைப் படங்கள் போன்ற பொழுதுபோக்குகளைக் கண்டு களிக்கத் தொடங்கினார்கள்! ஒரு கால கட்டத்தில் அமெரிக்காவில் மேல் மட்டத்துக்காரர்கள் இந்த ஊமைப் படங்களைப் பார்க்க வரமாட்டார்கள்.

(இன்றைய அளவிலும் நாடகம்தான் உயர்ந்தது, திரைப்படம் தாழ்ந்தது என்ற ஒரு மனப்பான்மை அமெரிக்காவில் பல வட்டாரங்களில் நிலவி வருகிறது. இன்றும் அமெரிக்காவில் ஒரு திரைப்படத்தைப் பார்க்க டிக்கெட்டின் விலை 71/2 டாலர். பகல் காட்சியாக இருந்தால் ஐந்து டாலர்கள்தான். ஆனால் நாடகத்தின் நுழைவுக் கட்டணம் 60 டாலர் அளவில் இருக்கும். ஆகவே சாதாரண மக்கள் நாடகம் பார்ப்பதைத் தவிர்ப்பார்கள். தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் வந்த பிறகு நாடகங்கள் தொலைக்காட்சியிலும் நடிக்கப்பட்டன. அமெரிக்காவில் தொலைக்காட்சி வேகமாக வளர்வதற்கு இந்த நாடகங்களும் ஒரு காரணம்).



ஃப்ரட் கார்னோ குழு நியூயோர்க் நகரத்தில் நிகழ்ச்சிகளை நடிக்கத் தொடங்கியது. தொடக்கத்தில் சாப்ளின் மற்றவர்கள் நடித்த காட்சிகள் எதிர்பார்த்த அளவிற்கு வரவேற்பைப் பெறவில்லை. பலவகையான புதுக் காட்சிகளைத் தயார் செய்து A Night In An music Hall என்ற ஒரு நிகழ்ச்சியை நியூயோர்க்கில் அரங்கேற்றினார்கள். இது எதிர்பாராத அளவில் வெற்றி பெற்றது. அதில் சாப்ளின் நடித்தது குடிகாரரின் போதை சேஷ்டைகள் நிகழ்ச்சி.

ஒருநாள் கார்னோ குழுவின் நிகழ்ச்சியைப் பார்க்க ஒருவர் தன் காதலியுடன் வந்தார். அவர் அப்பொழுது நியூயோர்க் நகரத்தில் சிறு திரைப்படங்களில் துணை நடிகனாக நாள் ஒன்றுக்கு 5 டாலர் சம்பளத்தில் நடித்துக் கொண்டிருந்தார்.

சாப்ளினின் நிகழ்ச்சியைக் கண்ட அவரும் அவருடைய காதலியும் விழுந்து விழுந்து தனித்தனியாகச் சிரித்தார்கள்; கட்டிப் பிடித்தும் சிரித்தார்கள். அவருடைய மனதில் புதிய கனவுகள் மலர ஆரம்பித்தன. "என்றைக்காவது ஒருநாள் நான் படமெடுப்பேன். அதில், அதோ மேடையில் தள்ளாடுகிறானே அவன்தான் ஹீரோ!" அந்தத் துணை நடிகரின் கனவு விரைவிலேயே நனவாகியது. ஹாலிவுட்டில் சொந்தமாக ஸ்டுடியோ அமைத்து, சிரிப்புப் படங்களைத் தயாரித்து, ஒரு சிரிப்புத் தொழிற்சாலையையே உருவாக்கினார். அவர் தான் சிரிப்புப் படங்களுக்கு அடிக்கல் நாட்டிய மேக்ஸென்னட். இவரை கிங் ஆ.ஃப்



காமெடி என்று அன்று அழைத்தார்கள். இன்றைய அளவிலும் இந்தியப் படங்களிலும் பொலிஸ்காரர்களை பற்றி நகைச்சுவைக் காட்சிகள் வந்து கொண்டிருக்கின்றன.

*(தொடரும்)*

---

# உலகப் பிரபலங்களின் அந்தரங்கங்கள் 07

## பல தாரமுடைய ராஜாவும் காமப் பசி கொண்ட ராணியும்

**வரலாற்றில்** பல ராஜவம்ச அரண்மனை வாழ்க்கையில் விசித்திரமான ஏராளமான சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. பல்வேறு அரச திருமண முறிவுகளுக்கு ஒன்றில் மன்னர் பல பெண்களை மணக்கும் அல்லது பெண் வேட்டையில் ஈடுபடும் குணமுடையவராக இருப்பார்; அல்லது மகாராணி காமப் பசி கொண்டவளாக கள்ளக் காதலர்களை உடையவளாக இருப்பாள். ஆனால் ஒரே தடவையில் பல பெண்களை மணந்த ராஜாவும் பல கள்ளக் காதலர்களை உடைய ராணியும் கணவன் - மனைவியாக இருந்த வரலாறு உண்டு.

1509ஆம் ஆண்டு இங்கிலாந்தின் மன்னராக முடிசூடிக்கொண்டவர் 8ஆவது ஹென்றி மன்னர். பிரித்தானிய அரச வம்சத்தில் அதிக முறை திருமணம் முடித்தவர் என்ற பெருமையும் அவருக்கு உண்டு. இதனால் 'திருமண மன்னர்' என்ற பட்டப் பெயருக்கும் உரித்தானார்.

8ஆவது ஹென்றி மன்னரின் காம லீலைகளுக்கு ஈடுகொடுக்க முடியாமல் அவரது முதல் இரு மனைவிமாரும் சொல்லாமல் கொள்ளாமல் தத்தமது வீடுகளுக்கு ஓடிவிட்டார்கள். இதனைச் சாக்காக வைத்து, பட்டத்து ராணிமார் தன்னை விட்டு வன்மமாகப் பிரிந்து சென்றுவிட்டதாகக் கூறி முறைப்படி மணவிலக்கினை அவர் பெற்றுக்கொண்டார். அவர் மூன்றாவதாகத் திருமணம் முடித்த ராணி ஜேனும் 1537ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 24ஆம் திகதி நோய்வாய்ப்பட்டு இறந்து போனாள். ராணி ஜேன் இறந்து ஒரு வாரத்திற்குள்ளாகவே தனக்கு பெண் பார்க்குமாறு எட்டாம் ஹென்றி அரசவை உறுப்பினர்களைக் கேட்டுக்கொண்டார். இதன்படி அப்போது பிரித்தானியாவில் செல்வந்தர்களுள் ஒருவரான கிளவ் பிரபுவின்




தங்கையான அன்னியின் ஓவியம் அவருக்குக் காட்டப்பட்டது. பின் அனைவரது சம்மதப்படி 1540ஆம் ஆண்டு ஜனவரி 6ஆம் திகதி எட்டாவது ஹென்றி மன்னருக்கு 4ஆவது திருமணம் அன்னியுடன் கிரின்விச்சில் இடம் பெற்றது.

மற்றொரு புறம் அக்காலத்தில் பிரித்தானியாவில் மிகப்பெரும் வணிகராக விளங்கியவர் ஹேவாட் பிரபு ஆவார். அவரது ஒரே மகள் கத்தரீன். மிகச் செல்வந்த குடும்பத்தில் இருந்து வந்தபடியினாலும் அதீத சுதந்திரம் கொடுத்து வளர்க்கப்பட்டதாலும் கத்தரீன் அடக்க முடியாத காமப் பசிக்கு உள்ளாகிய ஒருத்தியாகவே விளங்கினாள். தனது இளவயதிலேயே பல காதலர்களைக் கொண்டிருந்தாள். காதலர்கள் என்று சொல்லுவதைவிட கண்ணில் காணும் ஆடவர்களை எல்லாம் தனது காம வேட்கைக்கு இரையாக்கினாள். இதில் தனது இசை ஆசிரியர் மெனோக்ஸ் முதற்கொண்டு தனது ஒன்று விட்ட தம்பி தோமஸ், அரண்மனை தோட்டக்காரர், சமையல்காரர் வரை ஒருவரையும் அவள் விட்டுவைக்கவில்லை. தனது பத்தொன்பதாவது வயது வரைக்கும் தன் கண்ணில் படும் அனைத்து ஆடவர்களையும் வயது வேறுபாடின்றி தனது கட்டிலுக்கு அழைத்ததாகவே கத்தரீனைப் பற்றிய வரலாறு கூறுகின்றது.

இவ்வாறு இருக்கையில், எதிர்பாராத விதமாக அரண்மனை விருந்து ஒன்றில் கத்திரீனை மன்னர் எட்டாம் ஹென்றி கண்டுவிட்டார். அவளின் அழகு மன்னரைப் பைத்தியமாக்கியது. உடனடியாகவே தனது நான்காவது மனைவி அன்னியின் அரண்மனைத் தோழியாகக் கத்தரீனை நியமனம் செய்தார். அது மட்டுமன்றி அவளுக்குப் பலவிதமான பரிசுகளையும் விலை உயர்ந்த நகைகளையும் அன்பளிப்பாக வழங்கத் தொடங்கினார். மன்னரின் உள்நோக்கத்தையும் கத்தரீன் நன்கு அறிந்து வைத்திருந்தாள். மகாராணி ஆகும் ஆசை யாரைத்தான் விட்டது. எனவே மன்னரை திருமணம் முடிக்கும் தனது ஆசையினை வெளியிட்டாள். ஆனால் நிலைமையோ வேறு மாதிரி அமைந்தது. முடிசூடப்பட்ட மகாராணியாக அன்னி இருக்கும்போது, உத்தியோகபூர்வமாகக் கத்தரீனை திருமணம் முடிக்க அரச சட்டம் இடமளிக்கவில்லை. விருப்பமென்றால் கத்தரீனை ஆசை நாயகியாக வைத்திருக்கும்படி மன்னருக்கு ஆலோசனைகூட கூறப்பட்டது. ஆனாலும் கத்தரீனின் அழகின் மீதிருந்த பைத்தியம் மன்னரை என்ன வேண்டுமானாலும் செய்யத் தூண்டியது.

எனவே தனது திருமணத்தில் மோசடி நடந்துவிட்டதாக மன்னர் குற்றஞ்சாட்டினார். அதாவது அன்னியின் சகோதரியாகிய அமெலியாவின் ஓவியத்தைக் காட்டி ஏமாற்றிவிட்டு வஞ்சகமாக அன்னியை தனக்குத் திருமணம் முடித்துக் கொடுத்ததாக அவர் குற்றஞ்சாட்டினார். மன்னரின் பேச்சுக்கு மறு பேச்சேது? இதன்படி எட்டாம் ஹென்றி மன்னர், அவரின் 4ஆவது மனைவி அன்னி ஆகியோரின் திருமணம் 1540ஆம் ஆண்டு ஜூலை மாதம் 09ஆம் திகதி மணவிலக்கு மூலம் முடிவிற்குக் கொண்டுவரப்பட்டது.

இச்சம்பவம் நடந்து சரியாக 19 நாட்களின் பின் 1540ஆம் ஆண்டு ஜூலை மாதம் 28ஆம் திகதி கத்தரீனை தனது ஐந்தாவது மனைவியாக மன்னர் எட்டாம் ஹென்றி மணந்துகொண்டார். அப்போது கத்தரீனின் வயது இருபதுதான். மன்னருக்கோ அறுபது வயது. தனது அழகிய இளம் மனைவிக்குப் பொருளும் பண்ணைகளும் தாராளமாக வாரி வழங்கினார். ஆனால் கத்தரீனின் உடல் பசியைத்தான் மன்னரினால் சமாளிக்க முடியாமல் இருந்தது.

விளைவு...? கத்தரீனின் நிலை பழைய குருடி கதவைத் திறவடி எனும் நிலைக்குத் திரும்பியது. அதிகாலையிலே எழுந்து அரச நிர்வாகத்தினைக் கவனிப்பது, வேட்டைக்குச் செல்வது போன்ற காரியங்களுக்காக மன்னர் சென்று விட்டால், கத்தரீனின் பள்ளியறை அவளது காதலர்களினால் நிறைந்து விடும். எவருமே இல்லாதபோது அரண்மனை பணியாளர்களைக் கூட தனது காமப்பசிக்கு தீனியாக்கி வந்தாள்.

கத்தரீனின் சல்லாப விடயம் மன்னரின் காதுக்கு விலாவாரியாகச் சென்றது. அரண்மனையில் இருந்த முன்னாள் பட்டத்து ராணி அன்னியின் விசுவாசிகளே விலாவாரியாக மன்னருக்கு விடயங்களைத் தெரியப்படுத்தினர்.

இதன் விளைவாக, கத்தரீனினால் அந்தப்புரத்திற்கு அழைக்கப்பட்ட அனைவரும் ஒவ்வொருவராக விசாரணையின் பின் சிரச்சேதம் செய்யப்பட்டனர். இறுதியில் கத்தரீனுக்கும் அரண்மனை விசாரணை மன்றமாகிய 'ஹம்ப்டன் கோட்' மரண தண்டனை தீர்ப்புக் கூறியது. அப்போது கத்தரீன் "நான் குற்றமற்றவள்" என எட்டாம் ஹென்றி மன்னர் உட்பட அனைவரது காலிலும் விழுந்து கதறி மன்றாடியதாக வரலாற்றுத் தகவல்கள் கூறுகின்றன. ஆயினும் இறுதியில் 1542ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 13ஆம் திகதி 'கிரின் டவர்' சிறைக்கூடத்தில் கத்தரீன் சிரச்சேதம் செய்யப்பட்டாள்.


*(இரகசியங்கள் தொடரும்...)*

# முட் பாதையில் மரித்த மிதவாதம்

**இரு எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதும் இலங்கைத் தமிழ் அரசியல் தொடர் இது.**

## அமைச்சர் அத்துலத் முதலிக்கு உயர் ஸ்தானிகர் தீக்ஷித் எச்சரிக்கை

**இதற்கிடையில்** யாழ்.பல்கலைக்கழகப் பேராசிரியர் கே.சிவதம்பியும் புலிகளின் புதிய அணுகுமுறை குறித்து, ஏற்கனவே அமைச்சர் காமினி திசாநாயக்காவுக்கு அறிவித்திருந்தார்.




புலிகள் சிங்கப்பூரிலிருந்து ராமுவுக்குத் தமது யோசனைகள் குறித்து அறிவிப்பதற்குச் சில தினங்கள் முன்னதாகப் புதுடில்லியில் 'சார்க்' அமைப்பின் வெளிவிவகார அமைச்சர்களின் மாநாடு நடைபெற்றது. ஜூன் 17ஆம் திகதி நடைபெற்ற இந்த மாநாட்டில் வெளிவிவகார அமைச்சர் ஏ.சீ.எஸ்.ஹமீத் கலந்து கொண்டார். இம் மாநாட்டில் உரையாற்றிய அமைச்சர் ஹமீத், இலங்கை வான் பரப்புக்குள் இந்திய விமானங்கள், அத்துமீறிப் பறந்து, யாழ்.குடாநாட்டில். உணவுப் பொருட்கள் போட்டமை பற்றிப் பட்டும் படாமலும் குற்றஞ்சாட்டினார். "சார்க் அமைப்பு செவிடாக, ஊமையாக, பார்வை தெரியாத அமைப்பாக இருக்கக் கூடாது" என்று அமைச்சர் ஹமீத் கூறினார். சார்க் நாடுகளுக்கிடையிலான பிரச்சினைகள் குறித்து அங்கத்துவ நாடுகள் பேசக் கூடாதென்பது சார்க் அமைப்பின் விதி. ஆகவேதான் அமைச்சர் ஹமீத் இந்தியா மீது நேரடியாகக் குற்றஞ்சாட்டவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மகாவலி அமைச்சர் காமினி திசாநாயக்காவை தீக்ஷித் ஜூன் ,மாதம் 30ஆம் திகதி சந்தித்து நகல் ஒப்பந்தம் குறித்துப் பேசினார். இதற்கிடையில் மேலதிக யோசனைகள் ஏதுமிருந்தால் அவற்றைச் சமர்ப்பிக்கும்படி இந்தியா கேட்டிருந்தது. இதன்படி ஜூலை மாதம் இரண்டாம் திகதி ஜனாதிபதி ஜெயவர்த்தனா, அமைச்சர் காமினி திசாநாயக்கா, தீக்ஷித் ஆகிய மூவரும் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இதற்கிடையில் வடக்கு - கிழக்கில் காலியாகவுள்ள பதினாறு தேர்தல் தொகுதிகளுக்கான பாராளுமன்றத் தேர்தல்களையும் உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்களையும் நடத்துவதற்கு ஜனாதிபதி ஜெயவர்த்தனா திட்டமிட்டார். வடக்கு - கிழக்கில் சுமுக சூழ்நிலை இல்லாததால், தேர்தல்கள் நடத்தப்படுவதற்குத் தமிழ்க் கட்சிகளும் இந்தியாவும் எதிர்ப்புத் தெரிவித்தன. தமிழ் மக்களுக்கு ஜனநாயக உரிமைகளை வழங்குவதற்காகவே அங்கு தேர்தல்களை நடத்த முனைகிறேன் என்பது ஜே.ஆரின் வாதம். ஆனால், பேச்சுவார்த்தை முயற்சிகளைத் தட்டிக் கழிப்பதற்காகவே தேர்தல் பற்றி அவர் பேசுகிறாரென்பது இந்தியாவின் கருத்து. இருந்தும் இது தொடர்பாக ராஜிவ் காந்தி தெரிவித்த கருத்துக்களை ஏற்றுக் கொண்டு தேர்தல் திட்டத்தைக் கைவிட்டார் ஜனாதிபதி ஜெயவர்த்தனா.

இதற்கிடையில், 'த ஹிந்து' பத்திரிகையின் இணையாசிரியர் என்.ராம், புலிகளின் கருத்துகளை அமைச்சர் காமினி திசாநாயக்காவுக்கும், காமினியின் கருத்துகளை

(அரசியல் தொடர்)

புலிகளுக்கும் தெரிவிக்கும் இடைத் தரகராகச் செயற்பட்டு வந்தார். 1987ஆம் ஆண்டு ஜூலை மாதம் இரண்டாம் திகதி கொழும்பில் இந்திய உயர்ஸ்தானிகர் தீக்ஷித்தை ஜனாதிபதி ஜெயவர்த்தனாவும் அமைச்சர் காமினி திசாநாயக்காவும் சந்தித்துக் கலந்துரையாடினர். புலிகளின் கவனத்துக்குச் சமர்ப்பிப்பதற்கென ஏற்கனவே சில யோசனைகள் இணையாசிரியர் ராமுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டதாகவும் அவற்றைப் புலிகள் நிராகரித்து விட்டனரென்றும் அமைச்சர் காமினி திசாநாயக்கா இச் சந்திப்பின்போது கூறினார். வடமராட்சியிலிருந்து இலங்கை இராணுவம் வெளியேறாதவரை எதைப்பற்றியும் தாம் கலந்துரையாடத் தயாரில்லையென்றும் புலிகள் தெரிவித்தனரென்று காமினி கூறினார். புலிகளின் கவனத்துக்குச் சமர்ப்பிக்கும்படி அமைச்சர் காமினி திசாநாயக்கா, ராமுவுக்கு அனுப்பிவைத்த யோசனைகளின் சுருக்கம் வருமாறு :

1. இரு தரப்புகளுமே முற்றுமுழுதான யுத்தநிறுத்தமொன்றினை உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

2. இந்த ஒப்பந்தம் செய்யப்படும் நேரத்தில் இலங்கைப் படைத் தரப்பினரும் புலிகளும் இப்போது தாமிருக்கும் அதே முகாம்களுக்குள் முடங்கியிருக்க வேண்டும்.

3. தமிழ் இனப் பிரதேசங்களாக வடக்கு - கிழக்கு மாகாணங்களை இலங்கை அரசாங்கம் அங்கீகரிக்கும்.


4. வடக்கு - கிழக்கு மாகாண ஒத்துழைப்புக்கென மேலதிக ஒழுங்குகள் சில மேற்கொள்ளப்படும்.

5. இந்த ஒழுங்குகள் பற்றிய இறுதி முடிவு, இந்திய மத்தியஸ்தத்தோடு மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதோடு அந்த ஒப்பந்தங்களுக்கு இந்தியா உத்தரவாதமளிக்க வேண்டும்.

6. 1986ஆம் ஆண்டு மே மாதத்துக்கும் டிசம்பர் மாதத்துக்குமிடையில் முன்வைக்கப்பட்ட யோசனைகளின் அடிப்படையில் அதிகாரப் பகிர்வுக்கான மிகுதி விடயங்கள் கையாளப்பட வேண்டும்.

**இணைந்து எழுதுவது**
**த. சபாரத்தினம்**
**+**
**அம்பி மகன்**

வடமராட்சித் தாக்குதலின் சூத்திரதாரியாக விளங்கிய, தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அதுலத் முதலியை ஜூலை மாதம் ஆறாம் திகதி தீக்ஷித் சந்தித்துப் பேசினார். ஜனாதிபதி ஜெயவர்த்தனாவின் ஆலோசனையின் பேரிலேயே தீக்ஷித், அமைச்சர் அதுலத் முதலியைச் சந்தித்துக் கலந்துரையாடினார். இந்தியப் பிரதமரின் செய்திகளைச் சொல்வதற்காகவே இந்தச் சந்திப்பு நிகழ்ந்தது. அவை வருமாறு :



*மகாவலி அமைச்சர் காமினி திசாநாயக்காவும் அப்போதைய இந்திய உயர்ஸ்தானிகரான ஜே.என்.தீக்ஷித்தும், 'த ஹிந்து' பத்திரிகையின் இணையாசிரியர் என்.ராம் ஊடாக புலிகள் அனுப்பி வைத்த யோசனைகள் குறித்துக் கொழும்பில் கலந்துரையாடுவதற்கு முன்னர் எடுக்கப்பட்ட படம்.*

1. யாழ்ப்பாணத்திலுள்ள மக்கள் மீதோ அல்லது இலங்கையின் வேறு எப்பகுதிகளிலுள்ள தமிழ் மக்கள் மீதோ எதுவித பொருளாதாரத் தடையும் மீளப் போடப்படுவதை இந்தியா எதிர்க்காது.

2. வெளிவிவகார அமைச்சர் ஏ.சீ.எஸ். ஹமீதுக்கும் இந்திய ஸ்தானிகர் தீக்ஷித்துக்குமிடையில் இணக்கம் காணப்பட்டபடி, தற்போது யாழ்ப்பாணத்துக்கு வழங்கப்பட்டுவரும் நிவாரண விநியோகங்களை இலங்கை அரசாங்கம் சீர்குலைக்கக் கூடாது. இவ்வாறு சீர்குலைக்கப்பட்டால் அது, இலங்கையின் சமாதானச் சூழ்நிலையைக் குழப்புவதாக அமையும்.

3. எந்தச் சூழ்நிலையின் கீழும் தமிழ் மக்களுக்கெதிரான இராணுவ நடவடிக்கை வெற்றிபெற அனுமதிக்கக் கூடாதென்பதை இலங்கை அரசு கவனத்தில் கொள்ள வேண்டும்.

இலங்கை இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் சமாதானத் தீர்வு காணப்பட வேண்டுமென்பதே இந்திய அரசாங்கத்தின் ஸ்திரமான நிலைப்பாடாகும்.

4. ஒரு புறத்தில் இலங்கை மறுபுறத்தில் சீனா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டுவரும் செயற்பாடுகள் குறித்து இந்தியா கவனத்தில் கொண்டுள்ளது. இச் செயற்பாடுகளால் எந்த விளைவுகள் ஏற்பட்டாலும், இந்தியாவுடனான நல்ல

(தொடர்ந்து வடியும்....)




"**இப்படிச்** செய்தது யாராக இருக்கும்?"

"நம்முடைய எதிராளிதான் என்று நினைக்கிறேன்!"

"அவன் எதற்காக இங்கே வரவேண்டும்?"

"அதுதான் எனக்கும் புரியவில்லை. விசாரிக்கலாம்!"

"சரி, முதலில் இதைப் புதைத்துவிடலாமே."

பிணத்தைப் பள்ளத்தில் போட்டு, சுற்றியிருந்த மண்ணையும் கல்லையும் உள்ளே தள்ளினார்கள்.

நிதானமாக எட்டி மரத்தை நோக்கி நடந்த திருமேனி, மரத்தைத் தீவிரமாகப் பரிசோதித்தார்.

அப்போதுதான் அந்தத் துளை தென்பட்டது.

"ஓகோ...இங்கே இருந்த ஆணி விழுந்து விட்டிருக்கிறது. இங்குதான் ரோகிணியை அறைந்து வைத்திருந்தேன்!"

"என்ன சொன்னீங்க!" குமார் வியப்புடன் திருமேனியை நெருங்கினார்.

"இதுதான் காரணம்!" -தேவதத்தன் நம்பூதிரி ஆணி இல்லாத துவாரத்தைக் காட்டியபடி கூறினார்.

"இங்கே யாரை அறைந்து வைத்தீர்கள்?" குமார் கேட்டார்.

"ரோகிணியைத்தான்! இப்போது அவள் சுதந்திரமாகி விட்டிருக்கிறாள். பானுக்குட்டியின் மரணத்துக்கு அதுவும் ஒரு காரணமாக இருக்கலாம் என்று தோன்றுகிறது. எனவே தற்சமயம் இது ரகசியமாகவே இருப்பதுதான் நல்லது." -திருமேனி எச்சரிக்கையுடன் பேசினார்.

இருவரும் இல்லத்தை நோக்கி நடந்தனர்.

குமார் தனக்கென ஒதுக்கப்பட்ட அறைக்குள் வந்து அமர்ந்தார். இந்த வீடும் சுற்றுப்புறமும் மிகவும் பிரச்சினைக்குரியதாக அவருக்குத் தோன்றியது. எவ்வளவு சீக்கிரம் இங்கிருந்து கிளம்ப முடியுமோ அவ்வளவு சீக்கிரம் கிளம்பிவிட வேண்டும் என்ற முடிவுக்கு வந்தார்.

**எழுதுவது**
**சிவன்**

"நான் சொல்லுகிறபடியே செய்யுங்கள். அந்த எலும்புக்கூட்டுக்கு மற்றவர்களைத் தொடும் வல்லமை இருப்பதுதான் இதிலுள்ள சிக்கல். இது நாளுக்கு நாள் வளரவே செய்யும். பரவாயில்லை. அதை நாம் கவனித்துக் கொள்ளலாம். பயப்படாதீர்கள்!" -திருமேனி, குமாருக்கு ஆறுதல் கூறினார்.

குமார் காலையில் அங்கிருந்து கிளம்பினார். நேராகத் தனது கிராமத்துக்குச் சென்று பார்த்து விட்டு அங்கிருந்து காலேஜுக்குப் போவதென்று முடிவு செய்திருந்தார்.

ஒருவேளை பிரபாகரன் தன்னுடைய வீட்டுக்குக்கூடப் போயிருக்கலாம். வீட்டை அடைந்தபோது அவர் நினைத்தபடியேதான் நடந்திருக்கிறது.

இரண்டு நாட்களாகத் தன்னை எதிர் பார்த்துக் காத்திருந்தும் வராததால் பிரபாகரன் தன்னுடைய வீட்டுக்கே போய்விட்டிருப்பான்.

குமார் கிராமத்துக்கு வந்திருப்பதைச் சந்து நாயர் தெரிந்து கொண்டார். ஜயந்தனிடம் செய்தியைத் தெரிவித்தார்.

"ரொம்பவும் வசதியாகப் போய்விட்டது. அந்த லெக்சரர் இன்னிக்கு காலேஜுக்குப் போகலேன்னா, கிராமத்திலயே அந்த ஆளோட கதையைத் தீர்த்துட வேண்டியதுதான்!" -ஜயந்தன் பேசினார்.

அன்று இரவு பன்னிரெண்டு மணியானபோது கோவிந்தன் வந்தான். முன்பு இருந்ததை விட அவனது சக்தி அதிகரித்திருந்தது.

"என்ன... ஏதாவது வித்தியாசம் தெரிகிறதா?" -ஜயந்தன் கேட்டார்.

அந்தக் கேள்விக்குப் பதிலளிப்பது போல் வெற்றிலை பாக்கு இடிப்பதற்காக வைத்திருந்த சின்னஞ்சிறு உரலை தனது கால் கட்டை விரலால் நகர்த்தினான். பிறகு அதே விரலால் அதைத் தரையோடு வைத்து அழுத்தினான். மூன்று துண்டுகளாக உடைந்த உரல், பிறகு தூள்தூளாக நெரிபட்டது.

"இப்போது உங்களுக்குத் தெரிந்திருக்குமே!" -கோவிந்தன் கேட்டான்.


"ரொம்பவும் சந்தோஷம். ஆமாம் இவ்வளவு பெரிய பலத்தை வைச்சுக்கிட்டு என்ன செய்யுறதா உத்தேசம்?" -ஜயந்தன் கேட்டார்.

"பார்த்துட்டே இருங்க தெரியும்" கோவிந்தன் உறுமுவது போலப் பேசினான்.

மூவரும் தேங்காய் கோடௌனிலிருந்து வெளியேறினார்கள்.

தென்னந்தோப்பின் மூலையில் தென்னை ஓலையைச் சுவைத்தபடி நின்றுகொண்டிருந்தது யானை ஒன்று.

அருகிருந்த மரக்கடை ஒன்றிலிருந்து அந்த யானையைக் கொண்டு வந்திருந்தார்கள்.



பாகன்கள் யாரும் அப்போது அங்கு இல்லை.

கோவிந்தன் யானைக்கு முன்னால் சென்று நின்றான். அவன் என்ன செய்யப் போகிறான் என்று தெரிந்துகொள்ளும் ஆவலில் மற்ற இருவரும் அவனையே பார்த்துக் கொண்டிருந்தனர்.

சட்டென்று கோவிந்தனைக் கவனித்த யானை, தனது தும்பிக்கையிலிருந்த தென்னஞ்சோலையைக் கீழே போட்டு விட்டுப் பீதி நிறைந்த கண்களுடன் பின்நோக்கி நகர்ந்து நின்றது. வாலை மேற்புறமாக உயர்த்தியபடி தீனமாகக் குரல் எழுப்பியது. தொடர்ந்து தும்பிக்கையையும் முன்புறமாக உயர்த்தியது.


யானையின் தும்பிக்கையைப் பிடித்த கோவிந்தன் அதைக் கீழ்ப்புறமாகத் தாழ்த்தினான். யானையின் தலை தாழ்ந்துகொண்டே வந்தது. தும்பிக்கையை விட்ட கோவிந்தன், அதன் தந்தங்களைப் பிடித்து முன்புறமாக இழுத்தான். பயந்து மிரண்ட யானை முன்புறமாக நகர்ந்தது.

மூன்று பாகன்கள் ஒன்றாகச் சேர்ந்து வந்தாலே அவ்வளவு சுலபத்தில் அடங்காத அந்த யானை, கோவிந்தனைக் கண்டு மிரண்டதை அவர்கள் கவனிக்கவே செய்தனர்.

(வாசனை வீசும்....)

## மனதுக்கு நிம்மதி

# பிரச்சினைகளின் புகலிடம்



**‘இந்தப்** பிரச்சினையிலிருந்து, இந்தக் கஷ்டத்திலிருந்து எப்படி மீளப் போகிறேன் என நீங்கள் திகைக்கக்கூடும். உங்கள் பிரச்சினை - பணப் பிரச்சினை, தொழில் பிரச்சினை, மனித உறவுப் பிரச்சினை - மனத்தில் பாரமாக உட்கார்ந்து அழுத்தக் கூடும். பிரச்சினைகளைச் சமாளிக்க ஒரு வழி இருக்கிறது. நம்பிக்கை இழக்காதீர்கள். உங்களை அழுத்தும் கஷ்டங்களிலிருந்து வெளி வரவும், வாழ்வில் நீங்கள் விரும்புவதை அடையவும் ஒரு வழி இருக்கிறது...” என்ற வாக்கியங்கள் அப் புத்தகத்தைத் திறந்தவுடன் என் கண்களில் பட்டன. யாரோ நம்மை மனதில் கொண்டு, நமக்காக எழுதி இருப்பதுபோல் பட்டது. மேலே படித்தேன்: “நம்முள் இருக்கும் அந்த மகத்தான சக்தியை நாம் நமது பிரச்சினைகளுடன் அணுகும்போது வழி பிறக்கிறது. மனதிலிருந்து பாரத்தை இறக்கி விடுகிறோம். அவன் பொறுப்பு என்று விட்டு விடுகிறோம். மனம் லேசாகிறது. நாம் வழக்கம் போல அலுவல்களைக் கவனித்துக் கொண்டிருக்கும்போது நமது பிரச்சினைகளுக்கு வழி பிறக்கிறது. பிரச்சினைகள் தீர்கின்றன.” எனது மனப்பாரம் குறைந்தது. உலகில் பிரச்சினைகளிலிருந்து விடுபட இது ஓர் இயல்பான முறை - இப்படித்தான் இயற்கை செயல்படுகிறது - என்பதை உணர்ந்தேன்.

மன நூலாரும் அதையேதான் கூறுகிறார்கள். விஞ்ஞானிகளின் வாழ்க்கைச் சம்பவங்களும் குறிப்புக்களும் இதையேதான் காட்டுகின்றன.

ஒரு பிரச்சினை, சிக்கல், கஷ்டம் என்று வரும்போது அதுபற்றித் தீவிரமாகப் பல கோணங்களிலிருந்து ஆராயவேண்டுமெனவும், ‘இதற்கு ஒரு முடிவு காண வேண்டும்’ என்ற தணியா வேகம் அடி மனதில் ஓடவேண்டுமென்றும், பின் நாம் அதைப்பற்றி மறந்து விடவேண்டுமென்றும் நமது ஆழ்மனம் சில நாளில் பிரச்சினைகளுக்கு வழி காண்கிறது என்றும் கூறுகிறார்கள்.

இதையே மதங்கள் ‘பிரார்த்தனை செய்யுங்கள் என்றும், அவனிடம் பாரத்தைப் போடுங்கள் என்றும், வழி பிறக்கும் என்றும் கூறுகின்றன. ஒரு பிரச்சினையைப் பற்றிக் கவலைப் பட்டவுடன் அதை மறக்க வேண்டும். மறந்தபோது நமது எண்ண சக்தி விடுபட்டுக் காரியம் செய்ய வெளியே போவதில்லை. வெளியே சென்று தன் சக்தியைச் செயலாக்க முடிவதில்லை. அடிக்கடி அதையே எண்ணி ஊடாடிக் கொண்டிருக்கும்போது நமது எண்ண சக்தியை நாமே நசிக்கச் செய்கிறோம்.

விஞ்ஞானி தாமஸ் எடிசன், மின்சாரப் பிரச்சினைகள் வரும்போது உடனே சற்று நேரம் ‘பூனைத் தூக்கம்’ போடுவாராம்.

மூச்சு விடும் காற்று மூலமும், வெப்ப மூலமும், ஒளி மூலமும் நாம் புற உலகுடன் தொடர்பு கொண்டிருக்கிறோம். அந்தப் புற சூழ்நிலைக்கு ஏற்ப நம் உடல் இயங்குகிறது. அதுபோல புலனாகாத ஒரு சக்தியுடன் நமது மனதின் மூலம் தொடர்பு கொண்டிருக்கிறோம். அதை உணரும்போது நம் வாழ்க்கை இனிமையாகிறது. அந்த சக்தியை நம் தேவைக்கு ஏற்ப உபயோகித்துக் கொள்ள முடிகிறது.

அலெக்சிகாரல் என்ற பிரபர மருத்துவ விஞ்ஞானி எழுதுகிறார்: “பாசத்தாலும், ஆழ்ந்த நம்பிக்கையாலும் மனிதன் இவ்வுலகின் அடிப்படைப் பொருளுடன் தொடர்பு கொள்ள முடியும். அப்போது மனிதன் காரண காரியமாக எதையும் சிந்திப்பதில்லை. பிரார்த்தனையை உபயோகிக்கிறான்.”

தாமஸ் எடிசனின் நண்பரான பிரபல மெஜிக் நிபுணர் டுனிங்கர் கூறுகிறார்; “புதியன கண்டு பிடிக்கும் விஞ்ஞானிகள் பிரச்சினைகளின் முடிவுகளைச் சில உணர்வுகளாக வெளியிலிருந்து பெறுகிறார்கள்.” என்ன வெளி அது?

எடிசனுக்கும் மற்ற விஞ்ஞானிகளுககும் மட்டுமல்ல இந்த அறிவின் தேவை; நமக்கும் தேவைப்படுகிறது.

நாம் எப்படி அன்றாட வாழ்வு வாழ்கிறோம், தினம் எப்படிப் பல்வேறு பிரச்சினைகள் நம்மை மோதுகின்றன என்பதையும், எப்படி நம்மைச் சூழ்ந்திருக்கும் பிரபஞ்ச அறிவு - பரம்பொருள் - நமக்கு உதவமுடியும். அதற்கு நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை விளக்க எண்ணும்போது மீண்டும் ஓர் அழகிய ‘சென்’ கதைதான் என் நினைவுக்கு வருகிறது.

கியோட்டோ நகரில் இரண்டு தியான புத்தரின் மடங்கள் இருந்தன. இவ்விரண்டிலும் துடிப்பான இரண்டு இளைஞர்கள் மாணவர்களாக இருந்தனர். வடக்கு மடம் தனது மாணவனைக் கறிகாய் வாங்க தினமும் அனுப்பியது. வழியில் அவன் தெற்கு மடத்தைச் சேர்ந்த மாணவனைச் சந்தித்தான்.

வடக்கு மடத்து மாணவனைப் பார்த்து, “எங்கே போகிறாய்?” என்று கேட்டான் தெற்கு மடத்து மாணவன். “என் கால்கள் எங்கே என்னை இழுத்துக் கொண்டு போகுமோ அங்கே” என்றான் வடக்குக் காரன். தெற்குக்காரன் ஒன்றும் பதில் பேசவில்லை; மௌனமானான். மடத்துக்குச் சென்று நடந்ததைக் கூறினான். மடத்துத் தலைவர் கூறினார்: “நாளை சந்திக்கும்போது நீ அதே கேள்வியைக் கேள். ‘கால்கள் போன இடத்துக்கு’ என்று அவன் பதில் சொல்லும்போது, ‘காலில்லாவிட்டால் எங்கு போவாய்?’ என்று கேள்” என்றார்.

மறுநாள் மாணவர்கள் சந்தித்தார்கள். “எங்கே போகிறாய்?” என்றான் தெற்கத்தியான்.

“காற்று அடித்துச் செல்லுமிடத்துக்கு” என்று வந்தது பதில். தெற்கு மடத்து மாணவன் மீண்டும் மௌனமானான். இது அவன் எதிர்பார்த்த பதிலல்ல.

திரும்பிப்போய் மடத்துத் தலைவரிடம் நடந்ததைக் கூறினான். தலைவர் கூறினார்: “நாளைக்குக் கேள். காற்றில்லாவிட்டால் எங்கே போவாய்? என்று.”

மறுநாள் மீண்டும் மாணவர்கள் சந்தித்தார்கள். “எங்கே போகிறாய்?” என்று கேட்டான் தெற்குப் பகுதி மாணவன். “கறிகாய் வாங்குவதற்கு” என்று வந்தது பதில்!

இந்த ‘சென்’ புத்த கதையைப் பலமுறை படித்துப் பார்த்துவிட்டு அதன் தாத்பரியத்தைச் சிந்திக்குமாறு, ஒரு முடிவுக்கு வருமாறு, இதை வாசகர்களிடம் விட்டு விடுகிறேன்.

பலர் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள், யோகம், தியானம், ஆண்டவன், பரம்பொருள் என்னும்போது சன்னியாசத்தை வாங்கிக் கொண்டு எல்லாவற்றையும் அவன்மேல் போட்டுவிட்டு வாழ்க்கையிலிருந்து தப்பி விடலாம் என்று. சன்னியாசம் வாங்காமலேயே, சிலர் இந்த மனோபாவத்தின் மூலம் காவி ‘சூட்டி’ல் வாழ்க்கையைக் கழிக்க முயல்கின்றனர்; அவர்கள் அறியாதவர்கள்! வாழ்க்கை என்பது ஓர் இயக்கம். அந்த இயக்கத்தில் நம் பகுதியைத் தட்டிக் கழிப்பதன் மூலம் யாரும் எங்கும் போக முடியாது. தங்களை ஏமாற்றிக் கொள்ளலாம். ஊரையும் ஏமாற்றலாம், ஆனால் வாழ்வின் பயனை இழந்தவர்களாவோம்.

பகவத்கீதை திரும்பத் திரும்பச் சொல்லும் ஒரு விஷயம்: ‘செயல்’ என்பதாகும். கர்மம், தொண்டு, பணி, இயக்கம், செயல்.

நாம் வாழும் இவ்வுலகம், அந்த இயக்கத்தை உணர்ந்து அத்துடன் ஒத்து இயங்கும்போதுதான் வாழ்க்கை பயன் பெறுகிறது. செயலில்லாது பயன் இல்லை. இவ்வுலகில், இப்பிரபஞ்சம் சதா செயல்பட்டுக் கொண்டிருக்கிறது - நினைவில் கொள்ளுங்கள். அத்தகைய செயல் நிறைந்த, சக்தி நிறைந்த அறிவுரைகளை நமது பொக்கிஷங்களாகப் பெற்றிருந்தும், நாம் அதை உணரவில்லை. வாழ்க்கை ஏதோ நடை முறை உலகிலிருந்து தப்பிக்க முயலும் வாழ்க்கையென, சோம்பேறி வாழ்க்கையாகப் பயந்தவர்களின் வாழ்க்கையாக மாறிவிட்டது.

வாழ்க்கை எவ்வளவு உண்மையோ, அவ்வளவு உண்மை வாழ்க்கைப் பிரச்சினைகளும். பிரச்சினைகளில்லாத வாழ்வு ஞானிகளுக்கும் இல்லை. ஏற்றத் தாழ்வில்லாத இரவு பகலற்ற, கஷ்ட நஷ்டங்களற்ற ஒரு வாழ்வு வெறும் கற்பனையே. வாழ்வில் வரும், துன்பங்கள், துயரங்கள், கஷ்டங்கள் ஒரு பிரச்சினை அல்ல. அதை எப்படி அணுகுகிறோம், சமாளிக்கிறோம், அதை மேக்கரித்து மீளுகிறோம் என்பதில் தான் எல்லாம் அடங்கியிருக்கிறது.

நமது வாழ்க்கை நம்பிக்கை நிறைந்த வாழ்க்கையாகட்டும். நமது வாழ்க்கை செயல் நிறைந்த வாழ்க்கையாகட்டும்.

(தொடர்ந்து வரும்.........)

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

## குறுக்கெழுத்துப் போட்டி 166

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | | 6 |
| 7 | 8 | | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | | 17 | 18 |
| | | 21 | | 23 | |
| 25 | 26 | | 28 | | 30 |
| 31 | 32 | 33 | | 35 | 36 |

### இடமிருந்து வலம்

1. உழைக்கும் வர்க்கத்தினர் கொண்டாடும் தினம்.
7. அந்நியன் படத்தின் கதாநாயகி (திரும்பியுள்ளது).
10. படகு என்றும் கூறலாம்.
13. சூர்யா நடித்து வெளியான திரைப்படம் (குழம்பியுள்ளது).
17. குரங்கு என்று பொருள்.
21. இழிவு நிலை என்றும் பொருள்படும். (குழம்பியுள்ளது).
25. ஆதரவு அல்லது உதவி என்று கூறலாம் (திரும்பியுள்ளது).
31. பாண்டவர்களில் ஒருவன்.
35. குற்றம் அல்லது தீமை என்றும் பொருள்.

### மேலிருந்து கீழ்

1. அறிவுள்ளவன் என்றும் பொருள்படும்.
2. கல்லறை என்றும் கூறலாம் (குழம்பியுள்ளது)
4. பிரணவ மந்திரம். இது உடன்பாட்டை உணர்த்தும் ஓர் இடைச் சொல்லாகவும் விளங்குகிறது (தலைகீழ்).
6. உயிரற்ற உடல் (குழம்பியுள்ளது).
11. பணி அல்லது கடப்பாடு என்றும் பொருள் (குழம்பியுள்ளது).
15. ஓர் இசைக்கருவி.
22. பாம்பின் எதிரி.
25. சரஸ்வதியின் கையிலிருக்கும் கருவி (தலைகீழ்).
26. போதை தருவது (தலைகீழ்).
30. கிரகங்களில் ஒன்று.

### போட்டி விதிகள்:

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 02.05.2006 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி :

குறுக்கெழுத்துப் போட்டி இல-166
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல. - 1772,
கொழும்பு.

தங்கள் சரியான முகவரியையும், காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 164க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

வி.தக்ஷினி, 19, தெற்கிலுப்பைக்குள வீதி, சின்னப்புதுக்குளம், வவுனியா.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

1. எம்.உமா ஜெயந்தி, 01, செல்வக்கந்த பஜார், உடப்புஸ்ஸல்லாவ.
2. ஏ.ஆர்.எப். தாஹிரா, 117/6, ஜின்னா நகர், திருகோணமலை.
3. இ.கார்த்திகேசு, 3 1/3, 42ஆவது ஒழுங்கை, கொழும்பு - 06.
4. ந.நாகலிங்கம், 22, தாமரைக்கேணி வீதி, மட்டக்களப்பு.
5. திருமதி. பி.எஸ். ராணி. பொதுநூலகம், சங்கானை.
6. கே.ஏ.வரன், யா/புத்தூர் மெதடிஸ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலை, புத்தூர்.
7. வ.இளநிதி, 5 கஜலக்ஷ்மி, பிள்ளையார் கோயில் வீதி, கல்லடி உப்போடை.
8. டாக்டர் றோகினி மூத்ததம்பி, B19,G4 NHS, மாளிகாவத்தை, கொழும்பு 10.
9. ராஜினி புண்ணியமூர்த்தி, அரசாங்க அதிபர் விடுதி, யாட் வீதி, மட்டக்களப்பு.
10. பாத்திமா சுறானி, 84, பீரிஸ் மாவத்தை, களுபோவில.

## குறுக்கெழுத்துப் போட்டி 164 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 யு | 2 ஆ | 3 ல | 4 ஞ | 5 ட | 6 ம் |
| 7 தி | 8 ம | 9 று | | 11 வி | 12 ஆ |
| 13 ர் | | 15 ம | 16 ஞ | 17 ம் | 18 த |
| | 20 லெ | 21 ர் | | | 24 லை |
| 25 கை | 26 த | | 28 ஜூ | 29 சீ | |
| 31 சி | 32 ம் | 33 ம | 34 ம் | | 36 கொ |

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு. அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

# புதிய நடையில் புதிய தத்துவங்கள்

**- வழங்குவது றாஹில்**

## வெளிச்ச எண்ணங்கள்

**மனதைச்** சலவை
செய்யும்போது நீ வெண்மை
பெறுகிறாய்.
உன்னிலிருந்து
உதிர்கின்ற குப்பைகளால் நீ
நிரம்பும் போது
அழுக்கடைகின்றாய்.
கவலைகளுக்குப் பசளை
போட்டு வளர்க்கின்றபோது
உன் மனதின் உயிர்
உறிஞ்சப்படுகிறது.
களைகள் வளர்த்து உன்
பயிர்களின் உயிர்களுக்கு
நோய் செய்கிறாய் நீ!
உன் பார்வை புறத்தை
மட்டுமே பருகுகிறது.
உனது அகத்தை நீ
இன்னமும்
அடையாதிருக்கிறாய்.
உன் அகத்தைத்
திறந்துபார்; அது
இறந்திருக்கிறதா அல்லது
உயிருடன் வசிக்கிறதா
என்று!
உன் மனதை நீ
மரியாதைப்படுத்தும் போது
உனது நினைவுகளில்
ரோஜா நறுமணம் பரவும்.
சாக்கடையாக உன்
மனதை நீ மாற்றும்போது
துர்நாற்றத்தால் இறந்து
விடுகிறாய்.
நெருப்புக்குள் வசித்துக்
கொண்டு சுடுகிறது
என்கிறாய்.
நீ உடலால் தானே
வாழ்கிறாய்.
நீ மனதால் வாழ்வதற்கு
ஆரம்பிக்கும் போது அன்புக்குக்
கண்கள் கிடைக்கின்றன
உன்னிடமிருந்து.
உன் உயிரிலிருந்து ஒளி
உண்டாகிறது அப்பொழுது.
நீ உன்னிலிருந்து
உன்னைக் கண்டெடுக்கும்
போது இந்தப் பூமியே உன்னை
வணங்குவதற்கு ஆரம்பிக்கிறது.
உன் மனதில் பாவமேகம்
கருக் கொள்ளும்போது
தீமையென்ற அடைமழையில்
உன் சூழலே அடித்துச்
செல்லப்படுகிறது.
பௌர்ணமி அழைத்து உன்
மனதில் நிறுத்திப் பார்!
வெளிச்ச எண்ணங்களால் நீ
குளிப்பாய்.
உனக்காக நீ நூறுமுறை
சுவாசித்தால், அடுத்த
உயிர்களுக்காகவும் பத்து
முறையாவது சுவாசி!
உன் மனம்
பூந்தோட்டமாகும்போது உன்
செயலில் தென்றல் வீசும்.
உன் வார்த்தைகளில்
வாசம் வசிக்கும்.
பழத்தோட்டமாக நீ
மாறும்போது பறவைக் கூட்டம்
உன்னைத் தேடிவரும்.
உன் மனம் மகாசக்தி அது
உயிருள்ளதாகும்போது.
உலவுகின்ற பிணமாகிறாய்
நீ மனதால் இறந்து விடும்
போது!

# கற்பூர வாழ்க்கை

ஆர்.எப்.ருஸ்தா, புத்தளம்

**அது** ஒரு அழகான கிராமம். நாலா பக்கமும் தென்னை மரங்கள் ஓங்கி வளர்ந்திருந்ததால் தானோ என்னவோ? அக்கிராமத்துக்கு "தென்னந் தோப்பு" என்ற பெயர் வந்தது. சல சலவென ஓடும் காவேரி ஆறு தென்னந் தோப்பை மென்மேலும் அழகுபடுத்தியது. தென்னந்தோப்புக் கிராமத்தின் எல்லையில் ஒரு வீடு அமைந்திருந்தது. அவ்வீட்டில் மொத்தம் நான்கு பேர். அம்மா மற்றும் சசிகலா உட்பட இரண்டு தங்கைகள். அம்மா மலர்க்கொடி வயல்களில் வேலைசெய்து தனது மூன்று பிள்ளைகளுக்கும் சோறு போட்டு வந்தாள். சசிகலாவின் அப்பா சசிகலாவுக்கு ஏழு வயதிருக்கும் போதே காலமாகி விட்டார். குடும்பப் பொறுப்புக்கள் அனைத்தும் தற்போது "சசி"யின் தலையில்தான், ஆம் "சசி"தான் அவளது செல்லப்பெயர். தனது திருமண வயது தாண்டிக் கொண்டிருப்பதைக்கூட பொருட் படுத்தாது தனது இரு தங்கைகளான பத்மினியும், பத்மாவதியும் கல்விகற்று ஓர் நல்ல நிலையை அடைய வேண்டும் என்பதே சசியின் இலட்சியக் கனவாக இருந் தது. சசி கலைப்பிரிவில் கல்வி கற்று நல்ல பரீட்சைப் பெறுபேறுகளையும் பெற்றவள். ஆனால் அவள் படிப்பிற் கேற்ற வேலை கிடைக்கவில்லை. கம்பனி கம்பனியாக ஏறி இறங்கியவளுக்கு கால்கள் கடுத்தனவே தவிர, வேலை வாய்ப்புக் கிட்டவில்லை. சசியின் குடும்பத்தி னருக்குச் சொந்தம் என்று சொல்லிக்கொள்ள தனது தந்தையின் உடன்பிறப்பு பார்வதி அத்தை மட்டுமே. அவளும் ஆடிக்கொரு முறை கோடைக்கொரு முறை என மட்டுமே சசியின் வீட்டிற்கு வருகை தருவாள். சசியின் அம்மாவோ "புத்தகப் பூச்சி" போல் அடக்க மானவள், குடும்ப வண்டியை இழுத்துச் செல்ல சசி மிகக் கஷ்டப்பட்டாள்.

அன்று ஞாயிற்றுக்கிழமை ஆதலால் சசி ஒரு கையில் குடையும் மறுகையில் கூடையும் ஏந்திய வண்ணம் சந்தைக்கு விரைகிறாள். அவளது நடையில் ஒரு பின்னல், அவளது பார்வையில் ஓர் கலக்கம்.... மனதில் ஏகப்பட்ட சஞ்சலம். அவள் பாதையின் நடுவே பயணித்துக் கொண்டிருந்தாள். பின்னால் ஒரு வண்டி வருவதைக்கூட அவளால் உணர்ந்துகொள்ள முடிய வில்லை. அந்த வண்டிக்குச் சொந்தக்காரர் பல தடவை கள் ஒலி எழுப்பியும் சசி புரிந்தபாடில்லை. மிகுந்த ஆத்திரத்துடன் வண்டியிலிருந்து இறங்கிய எழுபது, எழுபத்தைந்து வயது மதிக்கத்தக்க முதியவர் நேராக சசியைப் பார்த்து "ஏம்மா ஒனக்கு என்ன புத்திசுவாதீன மில்லையா?" என வார்த்தைகளை அடுக்கிக் கொண்டே சென்றார். அம்முதியவர் ஏன் என்னைத் திட்டுகிறார் என்பதைக்கூட சசியால் உணர முடிய வில்லை. பின்னர் அம்முதியவர் அவரின் வண்டியில் ஏறிச் சென்று விட்டார். பாதையின் ஓரத்தில் நின்று சசி விழித்துக் கொண்டிருந்தாள். பாதையில் போவோர், வருவோர் எல்லோரும் சசியை ஏளனமாகப் பார்த்து விட்டுச் சென்றனர். நொந்து நூலாகி வீடு வந்து சேர்ந்தாள் சசி. கண்களின் ஓரமாக கசிந்திருந்த கண்ணீ ரைத் துடைத்து விட்டு வீட்டுக்குள் காலடி எடுத்து வைத்தாள். ஒரு நிமிடம் ஸ்தம்பித்து நின்று விட்டாள். உள்ளிருந்து பார்வதி அத்தையின் குரல் காற்றோடு கலந்து அவள் காதில் பட்டது. சசி செய்வதறியாது திகைத்தாள். ஏனென்றால் பார்வதி அத்தை வருகை தந்தால் அவளுக்கு விதவிதமாக சமைத்துப் போட வேண்டும். அதுவும் ஒரு நாள் இரண்டு நாள் அல்ல, ஒரு மாதம் இரண்டு மாதம் என விதவிதமான உணவு வேண்டும். பற்றாக்குறைக்கு ஊர் வம்பெல்லாம் இழுத் துக்கொண்டு வருவாள். தூங்க தனி அறைதான் பார் வதி அத்தைக்குக் கொடுக்க வேண்டும். இவற்றை யெல்லாம் "சசி"யால் செய்ய முடியாது.

சிந்தனையில் ஆழ்ந்திருந்த சசியை மலர்க்கொடி தட்டி எழுப்பினாள். "சசி, உங்க அத்தை ஊரிலிருந்து வந்திருக்கா. இரண்டு மாசம் இங்கதான் தங்கப் போறாளாம். என்னென்ன நடக்கப் போவுதோ? என்னடி நீ செய்யப் போற" என சசியிடம் கேட்டாள். சசி மௌனமாக அமர்ந்திருந்தாள். மதிய நேரம் வந்ததும் பாய் விரித்து வாழை இலை போட்டு சாதம் பரிமாறி னாள் மலர்க்கொடி. அனைவரும் வருமுன் பார்வதி வந்து இலையின் முன் அமர்ந்து கொண்டாள். இரண்டு பேர் சாப்பிட வேண்டிய சாப்பாட்டை தனியொருத்தியாய் சாப்பிட்டு முடித்துவிட்டு பத்மினியிடம் சில அழுக்குத் துணிகளைக் கொடுத்து துவைத்துத் தருமாறு சொல்லி விட்டு ஊர் வம்பளக்க போய்விட்டாள்.

மறுநாள் காலை சசியிடம் சென்று கைச்செல வுக்கு நூறு ரூபா தருமாறு கேட்டாள் பார்வதி. சசியோ தனது கஷ்ட நிலையை எடுத்துக் கூறினாள். இருந்தும் பார்வதி கேட்டபாடில்லை; பக்கத்து வீட்டு கமலாவிடம் சென்று கடன்பெற்றாள். அக்கடனை "சசி"தான் திருப்பித் தருவாள் என்றும் கூறிவிட்டாள். இவ்வாறே நான்கு வீடுகளிலும் கடன்பெற்று சசி தருவாள் என்று சொல்லிவிட்டாள். ஐந்து நாட்களுக்குப்பின் கமலா, சசியிடம் சென்று பெற்ற கடனைத் திருப்பித் தருமாறு கேட்டாள். சசியோ தான் கடன் பெறவில்லை என அடித்துக் கூறினாள். இருவருக்கும் வாக்குவாதம் முற்றியது. சசியோ ஒருவாறு கமலாவின் கடனையும் மற்றைய வீடுகளில் பார்வதி பெற்ற கடனையும் அடைத்து விட்டாள். அந்திசாயும் நேரம் பார்வதி சசியிடம் சென்று "இங்க பாரும்மா சசி, ஒனக்கு வேலை யில்ல. ஒரு நேர சோறு சாப்பிட வழியில்ல. நான் எனக்குத் தெரிந்த ஒருவருக்கிட்ட ஒனக்காக வேலை கேட்டேன் தர்ரேன்னு சொன்னாரு. நாளை காலையில வா வேலை தாரேன்னாரு. வர்ரியா போவோம்" எனக் கேட்டாள். அவளின் வேண்டுகோளுக்கு சசியும் உடன்பட்டாள்.

மறுநாள் காலை இருவருமாக "ஓரிட்ரா" எனும் பெயருடைய கம்பனியைச் சென்றடைந்தனர். பார்வதி சசியிடம் "நான் சென்று முதலாளியைச் சந்திக்கணும்" எனக்கூறிவிட்டு ஓர் அறைக்குள் சென்று சில நிமிடங் களின் பின் சிரித்த முகத்துடன் வெளியே வந்தாள். "சசி சசி உனக்கு வேலை கிடைத்துவிட்டது" எனக் கூறியவளை கண் இமைக்காது சசி உற்றுநோக்கினாள். "என்னடி இந்தப் பார்வை பார்க்கிற" என மீண்டும் பார்வதி கேட்டாள். "ஒண்ணுமில்ல, உங்க முதலாளி என்னை பார்க்கவில்லை. தேர்வும் நடத்தவில்லை என்னவென்று தெரிவு செய்தார்" எனக் கேட்டாள்.



"அது.... அது... உனது படிப்பு திறமை" என பார்வதி அத்தை கதையை திருப்பி விட்டாள் சரி சரி முதலாளி உன்னைக் கூப்பிட்டார். உள்ளே போ" என பார்வதி கூறினாள். அதன் பிரகாரம் உள்ளே போனவளுக்கு அதிர்ச்சியே காத்திருந்தது. அந்த முதலாளி வேறு யாருமில்லை. ஒரு கிழமைக்கு முன்பு வீதியில் சென்று கொண்டிருந்த இவளை வண்டியிலிருந்து இறங்கித் திட்டிய அதே முதியவர். வேலை கிடைக்கவே கிடைக்காது என சசி மனதுக்குள் நினைத்த வண்ணம் ஆசனத்தில் அமர்ந் தாள். அம்முதியவர் இவளை சரியாக இனங்காண வில்லை எனப் புரிந்து கொண்டாள். சசிக்கு ஏகப்பட்ட சந்தோஷம். அம்முதியவர் இவளை எவ்விதமான கேள்வி களும் கேட்கவில்லை. பெட்டியில் இருந்து ஆயிரம் ரூபாவை எடுத்து இவள் கைகளுக்குள் திணித்து விட் டார். "சரி. நீ போ, உன் அத்தையை வரச் சொல்" என அம்முதியவர் கூறினார். சசி வெளியே வந்தவுடன் பார்வதி அத்தை அவசரஅவசரமாக அவர் அறைக்குள் புகுந்தார். அம்முதியவரிடம் அத்தை கட்டுக் கட்டாகப் பணம் வாங்கியதைக் கண்ட சசி அதிர்ச்சியுற்றாள். இருந்தும் அவள் எதையும் வெளிக்காட்டிக் கொள்ள வில்லை.

வீடு வந்தவுடன் சசி, அம்முதியவர் கொடுத்த பணத்தைக் கொண்டு பத்மினி பத்மாவதியுடைய கல்விக் குத் தேவையான புத்தகங்களை வாங்கினாள். சுமார் இரண்டு வாரங்களுக்குப் பின் கோடிப்புரத்தில் வேலை செய்து கொண்டிருந்த மலர்கொடிக்கு நெஞ்சுவலி ஏற்பட் டது. உடனடியாக வைத்தியசாலைக்கு சசி அழைத்துச் சென்றாள். பல மணி நேரம் கழித்து வந்த வைத்தியர் "உன் அம்மா பெயர் மலர்க்கொடிதானே இவருக்கு இது இரண்டாவது மாரடைப்பு. முதலில் ஒரு தடவை இவருக்கு மாரடைப்பு ஏற்பட்டு இதே வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றார். இவருடன் வயதான ஒரு பெண் மணியும் வந்திருந்தார் அவரிடம் நான் ஏற்கனவே சொல்லியிருந்தேன் இவருக்கு அதிர்ச்சி தரும் விடயம் அதுவும் கூறக்கூடாது. அப்படியிருக்கையில் ஏன் மறு படியும் இவருக்கு அதிர்ச்சியான சம்பவங்களைக் கூறி னீர்கள்? புரியாத ஜென்மங்கள் என வைத்தியர் திட்டி விட்டுச் சென்றார். மலர்க்கொடி ஒரு வாரமாக வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றதன் விளைவு பத்தாயிரத் தையும் தாண்டியது. என்ன செய்வதென்று புரியாது "சசி" விழித்தாள். "சசி"யால் அம்மாவுக்கு என்ன நடந் தது எனப் புரியவில்லை. இருப்பினும் அந்த வயதான பெண்மணி நிச்சயம் தன் அத்தை பார்வதியாகத்தான் இருக்க முடியும் என யூகித்தாள். தனது அத்தையிடம் சென்ற சசி "எனக்கு அவசரமாக பத்தாயிரம் வேண்டும்" எனச் சொன்னவுடன் குறுக்கிட்டு "அப்ப கல்யாணத்துக்கு ஒத்துக்கோ" என அத்தை கூறினாள். புரியாத சசி விளக்கமாகச் சொல்லுங்கள் என கேட்டதும் "அப்ப உன்னோட அம்மா எதுவுமே ஒனக்கு சொல்லலல்லயா?" என மீண்டும் கேட்டாள். "என்ன நடந்தது சொல் லுங்கோ?" என கெஞ்சும் குரலில் கேட்டாள்." சொல் றேன்டிம்மா சொல்றேன் "உன் முதலாளிய எனக்கு ஏற்கனவே தெரியும். அவருக்கு ஒரு பொண்ணு வேணும், கல்யா ணம் பண்ணிக்கணும் என என்னிடம் கேட்டாரு. அவருக்கு ஏற்கனவே கல்யாணம் ஆயிடுச்சு. பொண்டாட்டி செத்துப் போயிட்டா. அவருக்குப் பிள்ளையும் இல்ல. ஏகப்பட்ட சொத்துக்கு வாரிசுமில்ல. எனக்கு உன்னோட நினைப்புத் தான் வந்தது. உனக்கு வேற கல்யாண வயசு போயிட்டே இருக்குது. உன்னோட போட்டோவ அவரு கிட்ட காட்டினேன். சரின்னாரு. கொஞ்ச பணம் தந்து கல்யாண ஏற்பாடு செய்யச் சொன்னாரு. இந்த விஷயத்த உங்க அம்மாகிட்ட சொன்ன நேரந்தான் உங்க அம்மாவுக்கு முதன் முதலா மாரடைப்பு வந்து வைத்தியருகிட்ட கூட்டிட்டுப் போனேன். அத நினைச்சு நினைச்சே உங்க அம்மாவுக்கு இரண்டாவது மாரடைப்பு வந்துட்டுது. நான் என்ன செய்ய? இன்னும் ஒரு வாரத்துல அவருக்கும் உனக்கும் கல்யாணம் தெரிஞ்சுதா? அவருகிட்ட கை நீட்டி பணம் வேற வாங்கியாச்சு. வாங்கின பணம் செலவாயுமாயிடுச்சு. வாங்கினது ஒரு ரூபா இரண்டு ரூபா இல்ல; ஒரு லட்சம் ரூபாய்.. அவருக்கு நிறைய சொத்திருக்கு. அதையெல்லாம் நாம ஆண்டு அனுபவிக்க வேணாமா? மரியாதையா ஒத்துக்கோ" எனக் கூறி முடித்தாள்.

உங்க பேச்சை நான் கேட்கமாட்டேன் என்று சசி கூறி விட்டாள். ஆனால் பார்வதியோ அம் முதியவரான தனது முதலாளியிடம் அனைத்து விடயத் தையும் கூறிவிட்டாள். அம்முதலாளி சசி மீதும் பார்வதி உட்பட அவளது குடும்பத்தவர் மீதும் வழக்குத் தொடுத்தார். தான் கொடுத்த ஒரு லட்சம் ரூபாவை திருப்பித்தரவேண்டும் என்பதுதான் வழக்கு. இதனால் மனமுடைந்த அவளது குடும்பத்தினர் அனைவரும் சோகத்தில் இருந்தனர். ஒரு லட்சம் அவருக்குக் கொடுக்கவில்லையானால் ஒரு வருட சிறைத் தண்டனை எனவும் தீர்ப்புக் கொடுக்கப் பட்டிருந்தது. சசியுடன் அவளது தாய், இரு சகோதரி கள், அத்தை அனைவரும் சிறைதான் செல்ல வேண்டும் எனவும் வழக்குத் தொடுத்த அம்முதியவர் கூறினார். வேறு வழியில்லாத சசி திருமணத்திற்கு ஒத்துக் கொண்டாள். சசியின் குடும்பத்தவர் யாருமே இக்கல்யாணத்திற்கு ஒத்துக் கொள்ளவே இல்லை. இருப்பினும் தனது குடும்பத்தார் யாருமே சிறை செல்லக் கூடாது. தனது தங்கைகள் இருவரும் நல்ல நிலைமையை அடைய வேண்டும்; தனது தாய்க்கு சிகிச்சையும் மேற்கொள்ள வேண்டும். அதற்குப் பணமும் அவசியம். ஒரு நேர சோற்றுக்குக் கஷ்டப் படும் தனது குடும்பம் மூன்று வேளையும் வயிறார சாப்பிட வேண்டுமானால் கசப்பான இந்த வாழ்க் கையை சசி ஏற்றுத்தான் ஆக வேண்டும்.


இன்று கருவிலிருந்து கல்லறை வரை காசுதான். மெழுகுதிரி தன்னை உருக்கி பிறருக்கு ஒளி கொடுப்பது போல் சசி தன்னையே உருக்கி ஒளி கொடுக்கச் சம்மதித்தாள். திருமண நாளும் நெருங் கியது. மணக்கோலத்துடன் மணமேடை ஏறும் சசியின் மனதில் ஏகப்பட்ட கவலை குடிகொண்டிருந்தது. இருபத்தைந்தே வயதான சசிக்கு எழுபத்தைந்து வயதான முதியவர் தாலி கட்டும் காட்சியை திருமண வீட்டிற்கு வந்த அனைவருமே பார்த்தனர். சசியின் மனசு மட்டும் ஒரு நிலையில்லாது தவித்தது. தனது வாழ்க்கையை திசை திருப்பிய தனது அத்தையை நொந்துகொள்வதா? தப்பான தலைவிதியை எழுதிய கடவுளை நொந்து கொள்வதா? கண்ணீர் மல்கக் கடவுளை வேண்டுகின்றாள் - "இறைவா என்னுயிரை எடுத்து விடு"

*யாவும் கற்பனை*


வாளமீனுக்கும் விலாங்கு மீனுக்கும் கல்யாணம்

இன்னிசை விருந்து

தென்னிந்திய கானா பாடகர், 'சித்திரம் பேசுதடி'
திரைப் பாடல் புகழ் திரு.சொ.உலகநாதன்
அவர்கள் மீண்டும் கௌரி சங்கருடன் இணைந்து
சித்தாரா இசையில் இன்னிசை விருந்து
வழங்குகிறார்.



காலம் : 07.05.2006 ஞாயிற்றுக்கிழமை



இடம் : வீரமைலன் கல்யாண
மண்டபம், ஸ்ரீ கதிரேசன்
வீதி, கொழும்பு 13.

நேரம் :
மாலை 6.30
மணி முதல்
இரவு 9.30
வரை

படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்து கொள்ளுங்கள்

## சிந்தித்துப் பார்க்க...

# குறள் சொல்லும் வாழ்க்கைத் தத்துவம்

**மாயை** என்னும் சொல்லுக்கு பேரறிஞர் ஒருத்தர் விளக்கம் கொடுத்துள்ளது ஞாபகத்துக்கு வருகிறது. ஆனால், அவர் இயற்கையின் நியதியிலிருந்து விடுபட்டு நின்றாலும் மக்களைச் சிந்திக்க வைத்திருக்கிறார் என்பது வெளிப்படை.

மனித இனத்தைச் சிந்திக்க வைப்பதற்காக எத்தனையோ அறிஞர்கள் எடுத்த முயற்சிகளெல்லாம் பயனற்றுப் போனதேயல்லாமல் முயற்சிகள் தோல்வி கண்டதில்லை ஏனெனில், உலகப் பற்று என்பது ஒருவிதத்தில் கனவுதான். என்பதில் ஞானிகளிடையே எவ்வித வேறுபாடும் இருந்ததில்லை. பற்றுகள் ஒருவனை விட்டகலும் போதுதான் அதிகளவிலானவர்கள் அவனைப் பற்றி நிற்கின்றனர். குடும்பம் பற்றினை விட்டகன்றவனுக்கு உலகின் மீது பற்று அதிகமாகிவிட அவன் தொண்டனாகிவிடுகிறான். அதனால்தான் பற்றறுப்பதென்பது எப்பற்றை என்பது கேள்வியாகிவிடுகிறது.

*ஒரு பொழுதும் வாழ்வ தறியார் கருதுப*
*கோடியுமல்ல பல.*

வாழ்வில் நிலையற்ற தன்மையை அறியாதவர்கள் கோடிக்கணக்கான எண்ணங்களை வளர்த்துக் கொண்டு அலைகிறார்கள் போலும்.



# கடமையும் காதலும்

அருள்வர்மனின் மனதில் தோன்றி மறைந்த கடந்தகால நினைவுகள் ஓர் பெரும் இன்ப அதிர்ச்சியை ஏற்படுத்தினாலும் கனவுலகில் இருந்து மீண்டவன்போல் மனதில் தோன்றிய நினைவலைகளில் இருந்து விடுபட்டவனுக்குத் தனிமையின் துயரம் மேலோங்கி நின்றதால் அவனை அறியாமலே நீண்டதோர் மூச்சு மேலெழுந்து அமர்ந்தது.

வைகரைப் பனிமூட்டம் ஓர் இதமான சுகத்தைத் தந்த போதிலும் எங்கெல்லாமோ இருந்து எழுகின்ற மணியோசைகளும் சேவல்களின் கூவல் ஓசைகளும் பொழுது புலரும் நேரமாகிவிட்டதை அருள்வர்மனுக்கு உணர்த்தின. இன்று அரண்மனைக்குச் செல்லவேண்டிய நாளாகிற்றே! இனியும் உறக்கத்தைப் பற்றி யோசிப்பதில் அர்த்தமில்லை என்பதை உணர்ந்த அருள்வர்மன், காலைக் கடன்களை முடித்துக் கொண்டு காவலரண்களைப் பார்வையிடத் தயாரானான்.

காலைப் பொழுது கண்களைக் கூசவைத்த போதிலும் கதிரவனின் செம்மஞ்சள் நிறம்



காண்பவற்றையெல்லாம் தங்க முலாம் பூசித் தன்வசமாக்கிக் கொண்டிருந்தது புயல் வேகத்தில் புழுதியைக் கிளப்பிக் கொண்டுவரும் புரவி ஒன்றின் நிழலாட்டம் அவன் கண்ணில்படவே சற்று கவனித்துப் பார்த்தான் அருள்வர்மன். ஆம், அது மாறனாகத்தான் இருக்கும் என்று அவன் நினைத்த மாத்திரத்திலேயே புரவி அவனை நெருங்கிவிட்டது. வருவது மாறன் தான் என்பது தெளிவாகி விடவே அருள்வர்மனின் மனத்தில் திடீரென்று ஓர் இனந்தெரியாத கலக்கம். ஏன் இவன் இத்தனை வேகமாக வருகிறான்? ஏதாவது அவசரச் செய்தியோ? என்று கலக்கம் மேலோங்க நின்றவனை....

### தருவது கற்பகன்

"நண்பா! ஏன் சிலைபோல் ஆகிவிட்டாய்? இரவெல்லாம் கொட்டிய பனியில் கால்கள் விறைத்துப் போய் விட்டனவா?" என்ற கேள்வியுடன் புரவியை விட்டு இறங்கினான் மாறன். கலவரத்தோடு மாறனைப் பார்த்துக் கொண்டிருந்த அருள்வர்மனுக்கு மாறனின் கேள்வி சற்று ஆறுதலைக் கொடுத்தது. இலேசாக முறுவலித்தானாயினும் அவன் முகத்தில் கேள்விக்குறி தென்பட்டதை மாறன் கவனிக்கத் தவறவில்லை.

"நண்பா! நான் வந்தது உனக்கு ஆச்சரியமாக இருக்கிறதா?" என்ற கேள்வியோடு தொடர்ந்தான் மாறன். "இல்லை என்பதற்குப் பதிலாகப் புன்னகைத்தால் மட்டும் அது இல்லை என்று ஆகிவிடுமா? மனதில் உள்ளவைகளைக் கூறிவிடாமல் மறைப்பதில் எழுகின்ற பிரச்சினைகள்தான் காலங்கடந்த பின் விஸ்வரூபம் எடுத்து பல விபரீத விளைவுகளுக்கும் வழிவகுத்து விடுகின்றன" என்றவனை வியப்போடு பார்த்தான் அருள்வர்மன்.

"விளையாட்டாகச் சொல்லவில்லை நண்பா. இன்னும் உன் முகத்தில் தெளிவைக் காணவில்லையே" என்றான் மாறன். "அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பார்களே, அதை நீ இன்னும் மறந்துவிடவில்லைப் போலும்" என்ற அருள்வர்மன் மனதில் உள்ள துன்பங்களையெல்லாம் மறந்து வாய்விட்டுச் சிரித்துவிட்டான். இதைப் பார்த்து, மாறனின் முகத்தில் ஏற்பட்ட மாறுதலைக் கண்டதும் "தத்துவம் இருக்கட்டும் பொழுது புலர்வதற்குள் புரவியை இத்தனை துன்பப்படுத்திவிட்டாயே! அப்படி என்னதான் தலைபோகும் காரியம். என்றான் அருள்வர்மன்"

தலைபோகும் காரியம் அல்ல; "தலைதப்பும் காரியம்" என்றான் மாறன் குறும்பாக. புதிர்போடுகிறாயே என்றான் அருள்வர்மன். புன்னகையோடு நிறுத்திவிடுவதுகூட புதிருக்கு ஒப்பானதுதான். அதில் புதைந்திருக்கும் இரகசியங்கள் அளவிட முடியாதவை. சுற்றிவளைக்காமல் வந்த விடயத்தைக் கூறிவிடுகிறேன்.

எதிரி சமாதானம் என்ற போர்வையில் காலத்தை இழுத்தடித்து தாக்குதலுக்குத் தக்க தருணத்தை எதிர்பார்க்கிறான். அதனால் எமது காவலரண்களைப் பலப்படுத்துவதோடல்லாமல் கண்காணிப்புப் பணியையும் அதிகரிக்கப்பட வேண்டியுள்ளது. இன்று சபையில் அதற்கான ஏற்பாடுகளைச் செய்யவுள்ளதால், காவலரண்களைக் கண்காணிக்கப் புறப்பட்ட நான் உன்னையும் சந்தித்துவிட்டுப்போகலாம் என்றுதான்.... என மாறன் கூறிமுடிப்பதற்குள் "இத்தனை வேகமாக வந்துவிட்டாயாக்கும்" என்றான் அருள்வர்மன் கிண்டலாக. "இல்லாவிட்டால் உன் காதல் தேவதையின் ஓலைதாங்கி வந்தேன் என்று எண்ணி விட்டாயோ? என்றான் மாறன் பதிலுக்கு. "என்காதல் அவ்வளவு எளிமையாகிவிட்டதா? காதலைப்பற்றி உனக்கென்ன தெரியப்போகிறது? பட்டவனுக்குத்தானே தெரியும் குட்டின் அருமை. பார்த்திருப்பவனுக்குத் தெரியுமா என்ன?" என்றான் அருள்வர்மன்

"ஆதி மனிதன் தொட்டு இன்றுவரை அன்பு, காதல், அகம், புறம் என்றெல்லாம் இலக்கியங்களில் தான் இருக்கும் என்பவர்கள் ஆழ்ந்து சிந்திப்பார்களேயானால் அன்றாட வாழ்க்கையிலும் இலக்கியங்களைக் காண முடியும்" என்ற மாறனை பரிகாசம் செய்வதுபோல் இருந்தது அருள்வர்மனின் பார்வை.

"காதல் என்பது கற்பனை உலகல்ல. கடவுள் கொள்கைகள்கூட காதலின் அடிப்படையானதுதான் என்பதை நீ படிக்கவில்லைப்போலும்" என்றான் மாறன். "அழகான மாங்கனியை கண்களால் பார்த்து ரசித்தால் மட்டும் அதிலுள்ள ஆசை தீர்ந்துவிடுவதில்லையே! அன்பின் முதிர்ச்சிதான் காதலாக உருவெடுக்கிறது என்று கூடக் கூறலாம். அழகும் காதலுக்கு ஒரு விதத்தில் தூண்டுதலாக இருக்கிறது என்றால் அதில் தவறிருக்கமுடியாது நண்பா!" என்றான் அருள்வர்மன்.

"எட்டிப் பழமும் அழகாகத்தான் இருக்கிறது. அதன் மேல் அழகை ரசிக்க முடியுமே யன்றி அதைச் சுவைக்க நினைத்தால் கதி என்னவாகும் என்பதை மறந்துவிட்டாய் போலிருக்கிறதே" என்று மாறன் கேட்டதும் அருள்வர்மனுக்கு உடனடியாகப் பதில் சொல்வதற்குக் கஷ்டமாகி விட்டது போலும். தலையைக் குனிந்தவாறே யோசிக்கத் தொடங்கினான் அருள்வர்மன். "நண்பா ஏன் மௌனமாகிவிட்டாய்? விளக்கைத் தேடிய விட்டில் பூச்சிகளும் வெளிப்பகட்டில்தான் வீழ்கின்றன. விளக்கால் அதற்கு ஏதும் லாபம் இருக்கிறதா! இல்லையே? அது போல்தான் காதலும். வீரியம் இருக்கும் வரையில்தான் வீரனாக இருக்க முடியும். வீரம் உள்ளவனிடம் தான் விருப்பமும் காதலும். இதில் வியப்பேதும் இல்லை. காதல் வாழ்க்கையின் ஓர் பகுதிதான்; காதலே வாழ்க்கையாகிவிடக் கூடாது" என்று முடித்தான் மாறன்.

மாறனின் வார்த்தைகள் அருள்வர்மனுக்குத் தலையில் சம்மட்டி கொண்டு தாக்குவது போலிருந்தது. அவனால் மேற்கொண்டு எதுவும் பேச முடியவில்லை. குனிந்த தலையை நிமிர்த்தவும் அவனுக்குத் தெம்பிருக்கவில்லை. ஆயினும் மௌனம் அதிக நேரம் நீடிக்கவில்லை.

மெதுமாக அருள்வர்மன் அருகில் வந்து நின்ற மாறன், "நண்பா! உண்மைகள் சில வேளைகளில் உளைவதும் உண்டு. உன்னைத் துன்புறுத்த வேண்டும் என்பதற்காக இதை நான் கூறவில்லை. உறவினால் ஏற்படுகின்ற உந்தல்களால் உலகத்தையே மறந்துவிடக் கூடாது என்பதில் உறுதியாக இருக்கவேண்டும் அதிலிருந்து விடுபடும்போது உலகமே சூனியமாகிவிடும் என்பதை நாம் மறந்துவிடக்கூடாதல்லவா? அதனால் கூறினேன். குறையிருந்தால் மன்னித்துவிடு என்ற மாறனின் குரலில் இருந்த கனிவு அருள்வர்மனின் மனதில் ஏற்பட்ட துன்பங்களையெல்லாம் நொடிப்பொழுதில் பறந்தேடச் செய்துவிட்டது. தலையை இலேசாக நிமிர்த்தியவனின் கண்கள் மாறனை உச்சி முதல் உள்ளங் கால்வரை அளவிடுவதுபோல் இருந்தது.

ஆயிரக்கணக்கில் அந்தப்புர அழகிகள் இருக்கின்ற அரண்மனையில் வாழ்பவனிடம் இப்படியொரு தெளிவா? அவனால் நம்பமுடியவில்லை. பொதுவாக அரச குமாரர்கள் அத்தாணி மண்டபமும் பட்டாடை முத்துக்களும், ஆராத்திப் பெண்களும், பள்ளியெழுப்ப முரசங்களும் அதிரசமூட்ட அழகிகளும் ஆடுதற்கு அரம்பை யருமாக இந்திர போகத்தையே அணுவணுவாக அனுபவித்துக் கொண்டிருப்பார்கள் என்றல்லவா வரலாறுகள் கூறுகின்றன. இவனுக்கு மட்டும் என்ன வந்துவிட்டது; கார்காலப் பனியிலும் கடுங் குளிரையும் பார்க்காமல் காவலரண்களைப் பார்வையிடப் புறப்பட்டு விட்டானே! என்று எண்ணும் போது மாறனின் மேலுள்ள மதிப்பும் மரியாதையும் மேலும் பல படிகள் உயர்ந்து நின்றன.

சிந்தனையில் மூழ்கி நின்றவனை "நண்பா! என்ன யோசிக்கிறாய்? என்னடா ஞானிபோல் பேசுகிறானே என்று யோசிக்கிறாயா? அல்லது வயதாகி விட்டதால் வாய்முணுத்துகிறான் என்று சலித்துப்போய் விட்டதா? இல்லை நண்பா! நானும் உன்போன்ற வாலிபன் தான். எனக்கும் எல்லா விதமான ஆசைகளும் உண்டு. ஆனால் அந்த ஆசைகள் நிரந்தரமாக நிறைவேற வேண்டுமென்றால் நமது மக்கள் நிம்மதியாக வாழ வழி பிறக்க வேண்டும். மணம் முடித்த மறு நாளே விதவைக் கோலம் தாங்கும் கன்னியர்கள் இல்லாது இல்லறத்தின் இன்பத்தை அனுபவிக்கும் சூழல் வேண்டும். அன்றுதான் உண்மையான ஏக்கமற்ற வாழ்வு மலரும். அதுவரை நாம் பொறுமை காத்துத்தான் ஆகவேண்டும். நீ உன் காதலுக்காக ஏங்குகிறாய். அது என்றோ ஒரு நாள் கைகூடும். ஆனால் கணவனை இழந்து விதவையாகி விடுவதைவிட, கன்னியர்கள் கன்னியாகவே இருந்திருந்தாலோ என்றோ ஒரு நாள் காதல் மலரும்.... அதுவரை பொறுமையாக இரு என்கிறாய். குருதேவா தங்கள் சித்தம், என்றான் அருள்வர்மன் மகிழ்ச்சி பொங்க.

***"செறா அச்சிறு சொல்லும் செற்றார் போல் நோக்கும்***
***உறா அர்போன் றுற்றார் குறிப்பு"***
***(அதிகாரம் : 110 – குறள் : 1097.)***

## சிந்தியா பதில்கள்

✉ **இராணுவத்துக்கும் - சிங்கள மக்களுக்கும் எதிரான தாக்குதல்களைத் தமிழர் தேசியப்படை தாம் தான் செய்ததாகப் பொறுப்பேற்றுக் கொள்வதாக அறிக்கை விடுக்கிறதே, யார் இந்தத் தமிழ் தேசியப் படை?**

-எம்.நிமலன், திருகோணமலை.

தமிழ் தேசியத்துக்காக உழைத்தவர்களுக்கு மாமனிதர் பட்டம், நாட்டுப் பற்றாளர் பட்டம் எல்லாம் யார் வழங்குகிறார்களோ, அவர்கள் தானே தேசியப் படையாகவும் இருக்க முடியும்.

✉ **சிந்தியா தனியார் ஹெலிக்கொப்டர் வழங்கப்பட்டாலும் அதற்கும் பாதுகாப்புக்கு இராணுவ ஹெலிக்கொப்டர் தேவை தானே?**

-எஸ்.ஜெலிஸ்ரன், நம்பைக்குளம்.

கடற் படகு விடயத்தில் கண்காணிப்புக் குழு மூக்கை உடைத்துக் கொண்டது போல் ஹெலிக்கொப்டர் விடயத்தில் நோர்வே உடைத்துக் கொள்ளாமல் இருந்தால் சரிதான்.

✉ **திருகோணமலையில் நாளுக்கு நாள் வன்முறைகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. ஆனால் எங்கள் மண்ணின் மைந்தன் சம்பந்தன் எம்.பி. இன்னும் வந்து என்ன, ஏது என்று பார்க்கவில்லையே?**

-ச.நிஜன், உவர்மலை.

தேசியத் தலைவர் என்றவரே சும்மா இருக்கும்போது, இந்தியாவில் மெடிக்கல் லீவில் இருக்கிற சம்பந்தர் என்ன செய்ய முடியும் என்று நினைக்கிறீர்கள். வன்முறை முடியட்டும் வந்து பார்த்துக்கொள்கிறேன் என்று இருக்கிறாராக்கும்.

✉ **யாழ்ப்பாணத்திலிருந்து தமிழ் மக்களை வெளியேறிப் போகுமாறு துண்டுப் பிரசுரங்கள் மூலம் அடிக்கடி எச்சரிக்கை விடப்படுகிறது. அங்கிருந்து எங்கு போவது?**

-செல்வி.சிவரஞ்சினி, கோண்டாவில்.

மூக்கைப் பிடித்தால் வாயைத் திறக்கத் தெரியாதா உங்களுக்கு!

✉ **அநாமதேய வெப் தளங்களிலிருந்து ஆதாரமற்ற செய்திகளை எடுத்துப் பிரசுரிக்கும் ஊடகங்கள் பற்றி உங்கள் கருத்து என்ன?**

-வி.சுந்தரமூர்த்தி, மட்டுநகர்.

ஊடக மாபியாக்கள் நடத்தும் ஊடக அதர்மம்.

✉ **மலையக இளைஞர்கள் இலங்கை இராணுவத்தில் இணையலாமா? வேண்டாமா?**

-ச.ஜேசுதாசன், அவிஸ்ஸாவெல்ல.

சோசலிச இலங்கையின் அரச வேலை வாய்ப்புகளில் அதுவும் ஒன்று. இணைவதா? - வேண்டாமா? என்பது அவரவர் விருப்பம்.

✉ **போகிற போக்கில் இன்னும் பத்து வருடத்துக்குப் பிறகு பஸ் கட்டணம் எப்படி இருக்கும்?**

-ஆர்.யோகராசா, வெலிமடை.

இப்போது வீட்டுக்கொரு தொலைக்காட்சி இருப்பது அவசியமாகிப் போயிருப்பதுபோல் எதிர் காலத்தில் வீட்டுக்கொரு வாகனமிருப்பதும் அவசியமாகியிருக்கும். அப்போது எரிபொருள் விலை எல்லோரையும் சேர்த்து மிரட்டும்.

✉ **சர்வதேசத்தின் வலைக்குள் புலிகள் சிக்கிவிட்டதாகப் பலரும் கூறுகின்றார்களே... உங்கள் பதில் என்ன?**

-எம்.ராஜன், வவுனியா.

மறுபக்கத்தில் புலிகளின் வலைக்குள் சர்வதேசம் சிக்கி விட்டதாக என்னிடம் பலர் கூறுகிறார்கள்.

✉ **"வாளை மீனுக்கும் விலாங்கு மீனுக்கும் கல்யாணம்" என்ற உலகநாதனின் பாட்டு கேட்டீர்களா?**

-சி.சறோஜினி, கொழும்பு.

கேட்டேன். கானா உலக நாதனின் பாட்டைக் கேட்டவர்கள் மிக விரைவில் அவரை நேரடியாகப் பார்க்கவும் இருக்கிறீர்கள். நாட்டுக்கு வரப் போவதாக அறிகிறேன்.

✉ **சிந்தியாவுக்கு தாடியா, மீசையா அழகு?**

-தர்ஷாயினி, இராகலை.

எது அழகு என்பதை பிறகு சொல்கின்றேன். தாடி குறித்து ஓர் தகவல். அவுஸ்திரேலியாவில் ஒருவர் சவரம் செய்ய 10 நிமிடம் செலவாகின்றதாம். மாதத்திற்கு 300 நிமிடம். வருடத்துக்கு 3,600 நிமிடம். அப்போ ஆயுளுக்கு?




பார்த்தார்கள், அவர்கள். புதிய தொழில்நுட்ப முறையான லேசர் கதிர் மூலம் முடிகளின் வேர்களை அகற்ற ஆரம்பித்துவிட்டார்கள்.

-வி.ரங்கநாதன், திருகோணமலை.

படித்துப் பட்டம் பெறுபவர்கள் அரசியலுக்கு வருவதுண்டு. ஆனால், அரசியல் வாதிகள் யாராவது படித்து பட்டம் பெறுவதைப் பார்த்துள்ளீர்களா? எல்லாவற்றையும் தீர்மானிப்பது இமேஜ்.

✉ **அழகு ராணியாக வருபவர்கள் நடிகைகள் ஆகின்றார்கள். ஆனால், ஏன் நடிகைகள் அழகு ராணிப் போட்டிக்குப் போவதில்லை?**

அ....னா.

✉ **யோக்கியர்களுக்கும் அயோக்கியர்களுக்கும் என்ன வித்தியாசம்?**

-திருமால், தம்பிலுவில்.

✉ **எக்ஸ்...ரே - ஸ்கான் இவற்றின் வித்தியாசம் என்ன?**

-டினூஷா, கறுவாத்தோட்டம்.

எக்ஸ்...ரே என்பது ஒளிக்கதிர் வீச்சு. எலக்ரோன்களை துரிதப்படுத்தி ஓர் உருவகத்தின் மேல் மோதவைக்கும் போது வெளிப்படும். ஒளியைவிட குறுகிய அலை நீள கதிர்வீச்சு அல்ட்ரா சவுண்ட் என்பது கேளா ஒலி அலையாகும்.

✉ **ஹரிபோட்டர் நார்னியா போல சிறுவர்களைக் கொண்டு வெற்றிகரமாக இயக்கப்பட்ட இந்திய சினிமா உண்டா?**

-எல்.விஜயன், மன்னார்.

1937இல் "எலிபன்ட் போய்", என்ற படம் மைசூரைச் சேர்ந்த சாபு என்ற சிறுவனைக் கொண்டு எடுக்கப்பட்டது. இப்படத்தின் மூலம் சிறுவன் சாபு ஒரே நாளில் உலகளவில் பேசப்பட்டான். அதுபோலவே 1943இல் சிறுவன் சாபு நடித்த "ஜங்கிள் புக்" என்ற படமும் மகத்தான வெற்றி பெற்றது.

✉ **சச்சினின் சாதனைப் பயணம் தொடருமா?**

-கே.கனகசபை, அகுரஸ்ஸ.


தொடருவதற்கான வாய்ப்பு பிரகாசமாக இருப்பதாக நான்மட்டுமல்ல, வசீம் அக்ரமும் உறுதியாக உள்ளார்.

✉ **விக்ரமின் "பீமா" பற்றி புது செய்தி ஏதாவது உண்டா?**

-எம்.ரிஸ்வான், மாளிகாவத்தை.

தினமும் 5மணி நேரம் கடுமையான பயிற்சி செய்து ஆனாள்ட் ஸ்வாஷ்நேக்கர் போல உடம்பை ஏத்தி வைத்திருக்கிறாராம். இவருக்கு ஜோடி திரிஷா. சாமியும் மாமியும் மீண்டும் இணைகின்றார்கள்.

# அக்ரமிடம் பந்து வீச்சு நுணுக்கங்களை கற்றார் பிரட்லி



வசீம் அக்ரம்

**பாகிஸ்தான்** முன்னாள் வீரர் வசிம் அக்ரமை அவுஸ்திரேலிய வீரர் பிரட் லீ சந்தித்து பந்து வீச்சு நுணுக்கங்களை கேட்டறிந்தார். பின் இது குறித்து பிரட் லீ கூறுகையில். "அக்ரமிடம் பந்து வீச்சு நுணுக் கங்களை கேட்டறிந்தேன். இந்த சந்திப்பு பயனுள்ளதாக இருந்தது. அப்போது பந்தை எப்படி ரிவர்ஸ் சுவிங் செய்வது என்பது குறித்து கேட்டறிந்தேன். கடந்த ஆஷஸ் தொடரில் இங்கிலாந்து அணி பந்தை ரிவர்ஸ் சுவிங் செய்ததும் அதன் வெற்றிக்கு முக்கிய காரணமாக அமைந்தது.

பிரட் லீ சந்தித்தது தொடர்பாக அக்ரம் கூறுகையில், இங்கிலாந்துக்கு எதிரான அடுத்த ஆஷஸ் தொடரில் பிரெட் லீ பந்தை ரிவர்ஸ் சுவிங் செய்வதை பார்க்கலாம். இது குறித்து அவருக்கு சிறிது சொல்லிக் கொடுத்தேன். அது அவருக்கு பந்து வீச்சில் புது ஆயுதமாக இருக்கும் இதில் சிறப்பாக செயல்பட வேண்டும் என்றால் கடுமை யான பயிற்சி தேவை. தற்போதுள்ள அனைத்து வீரர் களும் ஆட்டத்தை மேம்படுத்திக்கொள்ள முயற்சி எடுத்து வருவது பாராட்டுக்குரியது என்றார்.

## ஸ்போர்ட்ஸ்

ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ்

# பெடரேஷன் கோப்பை சானியா அதிர்ச்சித் தோல்வி

**பெடரேஷன்** கோப்பை டென்னிஸ் போட்டியின் ஆசிய ஓசியானா கிரீப் 1ஆம் திகதி சுற்று போட்டி தென்கொரியாவில் உள்ள சியோலில் நடந்தது. இந்தப் போட்டியில் 'பி' பிரிவில் இடம் பிடித்த இந்திய அணி பிலிப்பைன்ஸ், சீன தைபே, நியுசிலாந்து ஆகிய அணிகளை வீழ்த்தி இறுதிப்போட்டிக்குத் தகுதி பெற்றது.


இறுதிப் போட்டியில் இந்திய அணி 'ஏ' பிரிவில் முதலிடம் பிடித்த அவுஸ்திரேலியாவுடன் மோதியது.

இதில் வெற்றி பெறும் அணி வருகிற ஜுலை மாத்தில் நடைபெறும் உலக (கிரிப் 2) சுற்றுப் போட்டிக்கு தகுதி பெற முடியும் என்பதால் இந்த ஆட்டம் மிகுந்த எதிர்பார்ப்புடன் நடந்தது.

இதன் முதல் ஆட்டத்தில் இந்திய வீராங்கனை ஷிகா ஒபராய். அவுஸ்திரேலியா வீராங்கனை கேசி டெல் அகிவாவை எதிர்கொண்டார். இதில் ஷிகா ஒபராய் சிறப்பாக விளையாடி 6-3, 6-2 என்ற நேர் செட்டில் வெற்றி பெற்றார். இதன் மூலம் இந்தியா 1-0 என்ற கணக்கில் முன்னணி பெற்றது.

அடுத்த ஒற்றையர் ஆட்டத்தில் இந்திய நட்சத்திர வீராங்கனை சானியா மிர்சா, சமந்தா ஸ்டோசரை (அவுஸ்திரேலியா) சந்தித்தார். இதில் சானியா மிர்சா வெற்றி பெறுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அவர் ஆட்டத்தில் விவேகம் தென்படவில்லை. இதனைத் தனக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்ட சமந்தா 6-4, 6-2 என்ற நேர் செட்டில் சானியா மிர்சாவை வீழ்த்தினார். இதனால் இரு அணிகளும் 1-1 என்ற சமநிலை வகித்தன.

இரட்டையர் ஆட்டத்தில் சானியா மிர்சா, ஷிகா ஒபராய் (இந்தியா) ஜோடி 6-7, 2-6 என்ற நேர்



செட்டில் சமந்தா, ஸ்டோசர் ஜோடியை செட் கணக்கில் வெற்றி பெற்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.


இப்போது விற்பனையில் உள்ள

பால நடராஜ ஐயரால் எழுதப்பட்ட வரலாற்று சாசனமான

**மழையைத் தாராத வானம்**

பரப்பாக விற்பனையாகிக் கொண்டிருக்கிறது உங்களுக்குரிய பிரதிகளை முந்திக் கொண்டு வாங்க உடனடியான தினமுரசுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

தொ.பே. - 0114514282,


## எண்களின் பலன்கள் எப்படி?

| எழுத்துக்கள் | எண்கள் | கிரகம் |
|---|---|---|
| A,J,I,Y,Q | - 1 எண் | சூரியன் |
| B,K,R | - 2 எண் | சந்திரன் |
| C,G,L,S | - 3 எண் | குரு |
| D,M,T | - 4 எண் | ராகு |
| E,H,N,X | - 5 எண் | புதன் |
| U,V,W | - 6 எண் | சுக்கிரன் |
| O,Z | - 7 எண் | கேது |
| F,P | - 8 எண் | சனி |

உதாரணம்: D.VISAGAN

4 6 1 3 1 3 1 5 = 24

## பிறப்பெண் - 4, கூட்டெண் - 8

4, 13, 22, 31 போன்ற திகதிகளில் பிறந்து, பிறந்த திகதி, மாதம், வருடம் ஆகிய மூன்றையும் கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 8 வருமேயானால் இவர்கள் ராகு, சனி ஆதிக்கத்தில் பிறந்தவரர்வர்.

இவர்கள் எப்பொழுதும் சுதந்திரமாக வாழவேண்டும் என்று எண்ணுவர். அத்தோடு எல்லா இடங்களையும் சுற்றிப் பார்க்க முயல்வர். பல அனுபவங்களைப் பெற்றிருப்பதால் நண்பர்கள் இவர்களை எல்லா விசயங்களையும் தெரிந்தவராக மதிப்பர். தாம் கண்ட காட்சிகளையும், நிகழ்ச்சிகளையும் மற்றவர்கள் பிரமிக்கும்படி வர்ணிப்பர்.

இவர்கள் பார்ப்பதற்குக் கம்பீரமாகவும், குறுகுறுப்பான முகத் தோற்றமுடனும் இருப்பர். கண்கள் சிறிது மிதந்து காட்சியளிக்கும். முன் பற்கள் இரண்டும் பெரிதாகவும், சிலருக்கு ஒழுங்கற்ற பல் வரிசையாகவும் இருக்கும். தன் மனத்தில் தோன்றுகின்ற கருத்துக்களை துடுக்காகவும், பகிரங்கமாகவும் வெளியிடுவர். மற்றவர்கள் தன்னைப்பற்றி அபிப்பிராய பேதம் கொள்வார்களே என்று கவலைப்பட மாட்டார்கள்.

சிலர் தன்னுடைய அனுபவத்தால், தன்னை மாற்றிக் கொண்டு மற்றவர்களோடு ஒட்டிப்போவர். இன்னும் சிலர் யார் எதைக் கூறினாலும் மறுத்து தன் கருத்தையே வெளியிடுவர். விவாதத் திறமைமிக்க இவர்களை மற்றவர்கள், நல்ல மனிதர் என்று எளிதில் புரிந்து கொள்ளலாம். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசத் தெரியாத வெள்ளை மனம் கொண்டவர்கள்.

எப்பொழுதும் குழந்தைகள் மீது அன்பு செலுத்துவர். இவர்களில் சிலர் இளமையில் காதல் வயப்பட்டு கஷ்டப்படுகின்றனர். ஆனால் பெயர் நன்றாக அமைந்து விட்டால் எல்லாக் காரியங்களும் வெற்றியடைந்து நல்ல பொருளாதார வசதியைப் பெறுவர். குடும்ப வாழ்க்கை குழப்பமானாலும், கல்வியில் தோல்வியுற்றாலும் பெயர் நன்றாக அமையுமேயானால் கல்வியில் வெற்றி. நல்ல வாழ்க்கைத்துணை, நல்ல குழந்தைகள், நிலம், வீடு, வாகனம் போன்ற பாக்கியங்களைப் பெற்றுச் சிறப்பாக வாழ்வர்.

ஆனால் பெயர் பொருத்தமற்று இருந்தால் வாழ்க்கை ஏறவும் இறங்கவுமாக இருக்கும். சிலர் பெயரைப் பொருத்தமாக மாற்றிக் கொண்டு படிப்படியாக வாழ்க்கையில் உயர்ந்து கொண்டிருப்பதை நான் கண்கூடாகக் கண்டு கொண்டிருக்கிறேன்.

இந்த எண்ணிக்கையில் பிறந்த பலர் தொழிலிலும் சிலர் உத்தியோகத்திலும் உயர்ந்த இடத்தை வகிப்பர். பணம் சேர்ப்பதில் ஆசை கொண்ட இவர்களுக்குப் பல்வேறு வழிகளில் பணம் சேரும். சிலருக்கு வாழ்க்கைத் துணையால் பொருள் சேரும். பெற்றோர்கள் மீது பாசம் கொண்டவர்களாதலால் அவர்களுக்குத் தன்னால் முடிந்த உதவியைக் கடைசிவரை செய்து கொண்டிருப்பர்.

எல்லோரும் இவர்களை விரும்பும் அளவிற்கு நடந்து கொள்வர். ஆனால் வாதம் செய்வதைக் குறைத்துக் கொள்ள வேண்டும். பொதுவாக ஒரு விசயத்தை மறைத்துப் பேசவேண்டிய இடத்தில் மறைத்தும், வெளிப்படையாகப் பேச வேண்டிய இடத்தில் வெளிப்படையாகப் பேசவும் கற்றுக்கொள்ள வேண்டும். இப்படி பேசத் தெரியாது எல்லா இடங்களிலும் தன் கருத்தைக் கூறுவதால் கஷ்ட நிலைக்கு ஆளாகின்றனர். தேவையற்ற விசயங்களுக்காக மனத்தைக் குழப்பிக் கொள்கின்றனர்.

சாஸ்திரம், சமயம், மருத்துவம், ஜோதிடம், கை நுணுக்கத் தொழில் போன்றவற்றில் ஆராய்ச்சி இருக்கும். எதிலும் நிரந்தரமாக இவர்கள் மனம் லயிக்காது. பல்வேறு வழிகளில் சென்று பணம் ஈட்டுவர். சளைக்காமல் போராடி முன்னேற்றத்தைப் பெறப் பாடுபடுவர். இவர்களது வாழ்க்கையில் போட்டி இல்லாவிட்டால் முன்னேற்றம் தடைப்படும். படுத்தால் வேகமாக எழுந்திருக்க மாட்டார்கள். ஆனால் விழித்திருந்தால் சிந்தித்து வேலை பார்த்துக் கொண்டேயிருப்பர். இவர்களுக்குப் பிறந்த திகதி எண்களுக்குப் பொருத்தமான பெயர் அமைந்து விட்டால் வாழ்க்கை சிறப்படையும்.

***தொழில்:***

ராகு, சனி ஆதிக்கம் கொண்ட இவர்களுக்கு கை நுணுக்கத் தொழில் அனைத்தும் சிறந்தவையே. இரும்பு, வாகனம், பேரம் பேசுதல், கமிஷன், ஏஜென்ஸி போன்ற வைகளும் சிறந்த லாபம் தரும்.

***நோய்:***

இவர்களுக்கு உஷ்ண சம்பந்தமான அனைத்து நோய்களும் வந்து நீங்கும். மூட்டுவலி, வயிற்றுவலி, முதுகுவலி போன்றவைகள் வந்து நீங்கும்.

***பெயர் அமைக்கும் முறை:***

ராகு, சனி ஆதிக்கம் கொண்ட இவர்களுக்கு சூரியன், சுக்கிரன், புதன் ஆதிக்கமான 19, 37, 46, 64; 15, 33, 42, 51, 60, 69; 14, 23, 32, 41, 50, 59 போன்ற எண்களில் பெயர் அமைத்துக் கொள்ளலாம்.

***பின்பற்ற வேண்டியவை:***

| | |
|---|---|
| யோகமான எண் | - 6, 5, 1. |
| யோகமான திகதிகள் | - 1, 10, 19, 28; 6, 15, 24; 5, 14, 23. |
| யோகமான மோதிரக்கல் | - கோமேதகம், நீலக்கல்.(ஆறு நூல் உள்ள கல் மிகச் சிறப்பு) |
| யோகமான நிறம் | - மஞ்சள், வெளிர் நீலம், நீலம். |
| ஆகாத நிறம் | - கறுப்பு, சிவப்பு, காப்பிக் கலர். |
| ஆகாத திகதிகள் | - 8, 17, 26. |

*அடுத்த வாரம் பிறப்பெண் 4, கூட்டெண் 9 பற்றிப் பார்ப்போம்*

***வீதி போவோம்......***

***6ஆம் பக்கத் தொடர்ச்சி.......***

வீதியையே பார்த்துக் கொண்டு போகவேண்டும், அப்போதுதான் வீதியின் உணர்வுகளைப் புரிந்துகொள்ள முடியும். அதன் உருவ அமைப்பைக் கூர்ந்து கவனிக்க முடியும். எனது பாதங்களால் குறிப்பிட்ட தூரம் வரை எத்தனை அடிகளை வைக்க முடிகிறது என்பதைக் கவனத்தில் குறித்துக்கொள்ள வேண்டும் என்றெல்லாம் நினைத்துக் கொண்டேன். சரியாக பத்து எட்டுகள் வைத்தபிறகு திரும்பிப் பார்க்கிறேன். வீதி ஆரம்பித்த பகுதி பக்கத்தில்தான் இருக்கிறது. மேலும் மேலும் நடக்கிறேன். புறடிப் பக்கமாக யாரோ பிடித்து தலையை அழுத்துவதுபோல் இருந்தது. தலையை நிமிர்த்திப் பார்க்கிறேன். போக்கடி வந்து தாண்டி விட்டேன். இப்போது சரியாக அந்த வளைவுப் பகுதியில் நிற்கிறேன். அதிலிருந்து பார்க்கும்போது சந்திக்கடையடியால் வீதி வளைந்துதான் வந்திருக்கிறதுபோல் தெரிகிறது. சரி, வளைவு தெரிந்ததே நான் நேராகவே இந்த இடத்துக்கு வந்து விட்டேனோ என்ற குழப்பம் எனக்கு. திரும்பிப் பாடசாலை வரையான வீதியைப் பார்க்கிறேன். முன்னுக்கு பள்ளிவாசலுக்குப் பக்கத்தில் வீதி வளைந்துள்ளது. இப்போது நான் நேரான ஒரு இடத்திலிருந்து பார்ப்பதுபோல் உணர்கிறேன். சரி இந்த இடம் வரை எத்தனை காலடிகளை வைத்து வந்துள்ளேன் என்று எண்ணிக்கையை யோசித்ததில் மறந்து விட்டேன். ஒரே நேரத்தில் நடக்கும் தூரத்தையும் பாதடிகளின் எண்ணிக்கையையும் வீதியின் வளைவையும் சிந்தித்ததால் தான் அந்தக் குழப்பமாக இருக்கும் என்று எனக்கு நானே சமதானம் செய்து கொண்டு மீண்டும் நடக்கிறேன். குறிப்பிட்ட தூரம்வரை போய்விட்டு திரும்பவேண்டும் என்பதுதான் என்திட்டம்.

சுவிஸ்லாந்து நாட்டில் வீதிகள் துடைத்து வைத்ததுபோல் இருக்கின்றன என்று கவிஞர் வைரமுத்து குறிப்பிட்ட ஞாபகம்... என் ஊர் வீதிகளை எனக்குத் தெரிய இதுவரை யாரும் துடைத்தது கிடையாது. காறித் துப்புவதைக் கண்டுள்ளேன். அழுக்குகளை வீதியில் வீசிவிட்டுப்போகும் சுத்தமானவர்களைக் கண்டிருக்கிறேன். வாகனத்தில் அடிபட்டு செத்துப்போன ஒரு பூனை பல நாட்களாக அழுகிப் புழுப்பிடித்து ரோட்டில் கிடந்ததையும், அதை வீதியின் ஓரத்தில் எடுத்துப் போடாமல் மூக்கைப் பிடித்துக்கொண்டு வேறொரு திசையைப் பார்த்துக்கொண்டு போன சமூகத்தின் நலன் விரும்பிகளையும் பார்த்திருக்கிறேன். அவ்வளவு ஏன்? காலையில் பாடசாலைக்குப் போகும்போது முன்னைய இரவில் யாரோ மலம் கழித்திருந்ததையும் கண்டிருக்கிறேன். ஆனால் ஒரு நாள்கூட வீதியை யாரும் சுத்தப்படுத்தியதைக் காணவில்லை. மழைக்காலங்கள் தான் ஊரையே ஒட்டுமொத்தமாகக் குளிப்பாட்டி அழுக்குத் தேய்த்து விடும். அப்படி ஒரு மழை நாளில் எனக்கு இன்னும் அந்த ஞாபகம் பசுமையாகவே இருக்கிறது.

கடுமையான மழை ஊரையே கழுவிக் கொண்டு வெள்ளம் போக்கை மேவிக் கொண்டு போவதாகக் கதை பரவியது. நானும் ஓடிச்சென்று பார்த்தபோது, வறண்டு கிடந்த எங்களூர் போக்கடி அன்றுதான் நிறைந்து வழிந்தது. அன்று வீதியைப் பார்த்தபோது வீதி கறுப்பாக, ஆனால் பளபளப்பாக - அழகாகக் கறுப்புப் பளிங்குக் கல்லைப்போல் இருக்கிறது. மேலும் மேலும் மழை நீர் பட்டுத் தெறிக்கின்ற அழகை ரசிக்கின்ற அதிர்ஷ்டம் எல்லோருக்கும் வாய்த்திருக்காது. அடை மழை தொடர்ந்த அந்த மூணு நாளும் எங்கள் ஊர் வீதியும் சுவிஸ் வீதிகளைப்போல் இருக்கும் என்று நினைத்துக் கொண்டேன். அந்தச் சில வினாடிகள் எங்களூர்தான் எனக்கு சுவிஸ். இந்தச் சந்தோசத்துக்கு நடுவே எனக்குள் சின்ன வருத்தமும் தான். அங்கே துடைத்து வைத்திருப்பதாக வைரமுத்து சொன்னார். ஆனால் இங்கே மழை எங்களூர் வீதியை கழுவிவிட்டிருக்கிறது. துடைத்து விடத்தான் யாரும் இல்லை. யாருக்கும் அப்படியொரு விருப்பமிருப்பதாகவும் தெரியவில்லை. ஓடிப்போய் பூனை இறந்துகிடந்த இடத்தைப் பார்க்கிறேன். அந்த இடம் இப்போது சுத்தமாக கழுவப்பட்டுள்ளது. எனக்கு நேரே ஒருவர் குடைபிடித்துக் கொண்டு வருகிறார். நான் ஒதுங்கி நின்று பார்க்கிறேன். அவர் அந்த பூனை கிடந்த இடத்தைக் கடந்து போகிறார்.

மழை விட்டபாடில்லை. நிமிர்ந்து பார்க்கிறேன். வீதியால் போகும் மனிதர்கள் கறுப்புக்குடை பிடித்து - ஒருசிலர் கலர்க் குடைபிடித்து - வீதியின் ஓரங்களில் போய் விடாதபடி வீதியின் முதுகுக்கு மேலாக ஆயாசமாக நடந்து போகிறார்கள். அவர்களின் கவனம் இரண்டு விடயத்தில் இருப்பது அவர்களின் நடையிலேயே தெரிகிறது. ஒன்று, வீதியோரத்தில் காலடிபட்டு விட்டால் சகதிக்குள் அல்லது அழுக்குத் தண்ணிக்குள் போய்விடுவோம் என்ற பயம். அடுத்தது, வீதியின் முதுகுக்கு மேலாகச் சென்றால் பாதணிகளின் பின்பக்கமாகத் தெறிக்கும் தண்ணீர்த்துளிகள் தங்களது சாரத்திலோ, உடுப்பிலோ பட்டுவிடாதபடி பாதணிகளை அழுத்திக் கொண்டு நடந்து போகவேண்டும் என்ற கவனமான நடை. இந்தக் காட்சியை தூரத்திலிருந்து பார்க்கும்போது அவர்களை நினைத்து சிரிக்கத் தேன்றுகிறது. இன்றைக்கு மட்டும் ஒழுங்காக தார் ஊற்றப்பட்ட மேடான வீதியின் முதுகுதான் அவர்களை சுத்தத்தோடு வீடுசேர்க்க உதவுகிறது. இந்த உதவிக்காகவோ அல்லது அவர்களை வாழ்நாள் எல்லாம் வழிகாட்டிக் கிடக்கும் கடமையுணர்ச்சிக்காகவோ வீதிகளைப் பார்த்து ஒரு நாள் கூட இவர்கள் நன்றியுடன் ரசித்திருக்கமாட்டார்கள். எப்போதும் காலடியில் கிடக்கும் அற்புதங்களையும் நன்மைகளையும் மனிதன் உற்றுப் பாப்பதில்லையே! கண்ணுக்கு எட்டிய தூரத்தில் இருப்பதையும் தலைக்குமேலேயும் தான் பார்வையும் கவனமும் மனிதனுக்கு. வீதியைப் பற்றி நான் தெரிந்துகொள்ள நினைப்பதில் ஒன்று - ஒருநாளாவது வாகனத்தின் முன் இருக்கையில் இருந்து கொண்டு நீண்ட தூரப் பயணம் செல்ல வேண்டும்; அப்போது வேகமாக வாகனத்தின் முகப்புக்குள் மறைந்துபோகும் வீதியின் அவசரமான அழகை இரசிக்கவேண்டும் என்பதும், அடுத்ததாக எப்போதாவது வசதி கிடைக்கும் போது ஒரு வீதியின் ஆரம்பத்திலிருந்து முடிவு வரை சென்று அந்த வீதியின் அழகையும், அது ஏற்படுத்தும் அனுபவத்தையும் மனது நிரம்ப அனுபவிக் வேண்டும் என்பதும் தான்.

இப்போது நான் நடந்து வந்த தூரத்தைத் திரும்பிப் பார்க்கிறேன். சந்திக்கடை மறைந்து என் கண்ணுக்குத் தெரிந்த எல்லா வளைவு நெளிவுகளையும் கடந்து வந்துவிட்டேன். ஆனால் என் ஞாபகத்துக்கு எட்டியவரை நான் எந்த வளைவுகளிலும் நெளிவுகளிலும் வளையவும் இல்லை; நெளியவும் இல்லை. அப்படியென்றால் என்னை நேராக்கிக் கொண்டே வீதிகள் தங்களை வளைத்துக் கொள்கிறதோ என்று நினைத்துக் கொள்கிறேன். திரும்பியும் முன்னோக்கிப் பார்க்கிறேன். வீதி இன்னும் நீண்ட தூரத்துக்கு நீண்டும் வளைந்தும் கிடக்கிறது. ஆனால் அம்மா பகல் சாப்பாட்டுக்கு நான் வீட்டுக்குப் போகாவிட்டால் தம்பியை விட்டு தேடச் சொல்வார். தம்பி எனக்கு அடி விழவேண்டுமே என்ற அக்கறையில் சாட்டுக்காக சந்திக்கடைவரை வந்து தேடுவான். நண்பர்களிடம் தான் விசாரித்ததற்கான ஆதாரம் இருக்க வேண்டும் என்பதற்காகக் கேட்பான். அடுத்த விநாடியே அம்மாவிடம் போய் நான் யாரோ ஒருவரோடு அம்மாவுக்குப் பொய் சொல்லிவிட்டு விளையாடப் போய்விட்டதாக தன் கற்பனைக்கு எட்டியபடி சொல்வான். அம்மாவும் தனது பங்குக்கு இரண்டு அகப்பையைத் தயாராக எடுத்து வைத்திருப்பார். இன்னும் தூரம் செல்ல முடியாது என்று வீட்டுக்கு ஓடி வந்துவிடுவேன். அப்போது நடக்கும்போது அருகருகே தெரிந்த வீதியின் வளைவும், நெளிவும் ஓடிவரும்போது தூரம் தூரமாகவே போய்க் கொண்டிருக்கும். விளையாட்டாகவே நீண்ட தூரம் வந்து விட்டோமோ என்று மனம் பயந்து போகும். சில சமயம் கண்கலங்கி அழுகை வரும். நேரம் செல்லச் செல்ல வீட்டில் இரண்டு அகப்பைகள் எனக்காகக் காத்துக் கொண்டிருக்கும்.

# வில்லியம் ஷேக்ஸ்பியர் என்ற எட்வர்ட் - டி - வேர் (கி.பி. 1550 - 1604 நூற்றாண்டு)

சென்றவாரத் தொடர்ச்சி

**மரபாளர்களின்** கருத்து (இந்த நூலின் முதல் பதிப்பில் இந்தக் கருத்தையே ஆராயாமல் நானும் ஏற்றுக் கொண்டிருந்தேன்). எனினும், ஐயுறவுவாதிகளின் வாதங்களையும், பழைய மரபாளர்களின் எதிர்வாதங்களையும் கவனமாக



ஆராய்ந்தபோது, ஐயுறவுவாதிகள் தங்கள் வாதங்களை அதிகத் திறம்பட எடுத்துக் கூறியிருக்கிறார்கள் என்பதையும், அவர்கள் தங்கள் கருத்தை ஆதாரங்களுடன் நிறுவியிருக்கிறார்கள் என்பதையும் கண்டு கொண்டேன்.

"வில்லியம் ஷேக்ஸ்பியர்" என்பது 17ஆம் ஆக்ஸ்ஃபோர்ட் கோமகன் எட்வர்ட் - டி - வேர் தமக்கு வைத்துக் கொண்ட ஒரு புனை பெயர் என்பதைப் பெரும்பாலான சான்றுகள் வலியுறுத்துகின்றன. வில்லியம் ஷேக்ஸ்பியர் என்பவர் ஒரு பணக்கார வணிகர்; அவர் வணிகம் நிமித்தம் லண்டன் சென்றார்; நாடகங்கள் எழுதுவதற்கும் அவருக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை.

ஷேக்ஸ்பியர் தம் காலத்து நாடகங்களுக்காகப் பொது மக்களின் பெரும் போற்றுதலைப் பெற்றவர். ஷேக்ஸ்பியருக்காக ஒரு "நிழல் எழுத்தாளராக" (Ghost - Writer ) டி - வேர் இருந்தார் என்று நான் கூறவில்லை. ஷேக்ஸ்பியர், அவர் தம் வாழ்நாளில் ஓர் எழுத்தாளராகக் கருதப்படவில்லை. அவர், தம்மை ஓர் எழுத்தாளராக ஒரு போதும் கூறிக் கொள்ளவுமில்லை! தலைசிறந்த நாடகாசிரியர் வில்லியம் ஷேக்ஸ்பியராக இருந்தவர் ஷேக்ஸ்பியர் தான் என்னும் கோட்பாடு 1623 வரையில் ஷேக்ஸ்பியர் இறந்த ஏழாண்டுகளுக்குப் பின்பு வரையில் - எழவில்லை! அந்த ஆண்டில்தான் ஷேக்ஸ்பியர் நாடகங்களின் முதலாவது இருமடிப் பதிப்பு (Folio Edition) வெளியானது. அதன் பதிப்பாசிரியர்கள், அதில் ஒரு முன்னுரையைச் சேர்த்திருந்தார்கள். அந்த முன்னுரையில் தான், அந்த நாடகங்களை எழுதிய ஆசிரியர் ஸ்டிராட்ஃபோர்ட் - ஆன் - ஆவோனைச் சேர்ந்தவர் இல்லை என்பதற்கான வலுவான குறிப்புகள் (மறைமுகமாக) இடம் பெற்றிருந்தன.

அடுத்த ஆறு ஆண்டுகளில் அவரது நடவடிக்கைகள் பற்றியோ, அவர் வாழ்ந்த இடங்கள் குறித்தோ. எந்தக் குறிப்பும் இல்லை. ஆனால், 1590களில் லண்டனில் ஒரு நடிகர் குழுவின் உறுப்பினராக அவர் மீண்டும் தோன்றுகிறார். அவர் ஒரு வெற்றிகரமான நடிகராக விளங்கினார்! ஆனால், விரைவிலேயே நாடகங்களும், கவிதைகளும் எழுதுவதில் அவர் ஈடுபாடு கொண்டார். 1598ஆம் வாக்கில் வாழ்கின்ற அல்லது இறந்துபோன ஆங்கில எழுத்தாளர்கள் அனைவரிலும் தலைசிறந்த எழுத்தாளர் என்று போற்றப்பட்டார். சேக்ஸ்பியர் லண்டனில் ஏறத்தாழ 20 ஆண்டுகள் தங்கியிருந்தார். இந்தக் கால அளவின்போது அவர் குறைந்தது 36 நாடகங்களை எழுதினார்; 154 ஈரேழ் வரிப் பாடல்களை இயற்றினார்; ஒரு சில ஆண்டுகளில் அவர் பெரும் பணக்காரர் ஆனார். ஸ்டிராட்ஃபோர்டில் 1597இல் "புதிய மாளிகை" (New Palace) என்னும் விலையுயர்ந்த இல்லத்தைவாங்கினார். அவருடைய குடும்பத்தினர் எப்போதும் ஸ்டிராட் ஃபோர்டிலேயே இருந்து வந்தனர். அவர்களுக்கு அவர் தொடர்ந்து ஆதரவளித்து வந்தார்.

அவர் எழுதிய சிறந்த நாடகங்களில் எதனையும் அவர் வெளியிடாமலிருந்தது விசித்திரமாக இருக்கிறது. ஆனால், இந் நாடகங்களின் வாணிகப் பெருமதியை நன்கறிந்திருந்த பழி பாவங்களுக்கு அஞ்சாத அச்சக உரிமையாளர்கள், இந் நாடகங்களில் பாதியை திருட்டுத்தனமாக அச்சிட்டனர். இந்தத் திருட்டுப் பதிப்புகள் பெரும்பாலும் திரித்துரைப்பனவாக இருந்தபோதிலும், சேக்ஸ்பியர் அவற்றில் தலையிட முயலவில்லை.

## உலகை வியக்க வைத்தவர்கள்

நாடகாசிரியர், சேக்ஸ்பியரராக இருக்க முடியாது என்பதற்கான காரணத்தைப் புரிந்து கொள்ள வேண்டுமானால் அவரது வாழ்க்கை வரலாறு பற்றிய ஒரு மரபுமுறைக் கூற்றினை முதலில் இங்கு குறிப்பிட வேண்டும். இந்தக் கூற்று வருமாறு:

"சேக்ஸ்பியரின் தந்தை ஜான் ஒரு காலத்தில் செல்வச் செழிப்புடன் வாழ்ந்தவர். அவர் நொடித்துப் போய் வறுமையில் வீழ்ந்தார். சிறுவன் வில்லியம் மிகுந்த வறுமைச் சூழலில் வளர்ந்தான். எனினும், அவன், ஸ்டிராட் ஃபோர்ட் இலக்கணப் பள்ளியில் சேர்ந்தான்; அங்கு அவன் லத்தீனும், இலக்கியமும் கற்றான்."

"வில்லியம் தனது 18 ஆம் வயதில் ஆனி ஹத்தாவே என்ற இளம் பெண்ணுடன் நட்புக் கொண்டான்; அவள் கருவுற்றாள். அவளையே முறைப்படி மணந்து கொண்டான். சில மாதங்களில், அவளுக்குக் குழந்தை பிறந்தது. இரண்டரை ஆண்டுகளுக்குப் பிறகு அவள் இரட்டைக் குழந்தைகளைப் பெற்றெடுந்தாள்! ஆகவே, 21 வயதை எட்டுவதற்கு முன்பே, வில்லியம் மனைவியையும் மூன்று குழந்தைகளையும் காப்பாற்ற வேண்டியிருந்தது.

வியப்புக்கள் தொடரும்....

# காதில பூ கந்தசாமி

## நோட்டீஸ் பலகை



நான் சொல்வ தெல்லாம் பொய்.
பொய்யைத் தவிர
வேறொன்றுமில்லை
*-காதில பூ கந்தசாமி-*

வணக்கமுங்கோ,

**பொறுமையின்ர** எல்லையில இருந்து பொடியள் கொஞ்சம் முன்னேறிட்டினம் போல கிடக்கு. இல்லாட்டில் ஒற்றப்பிடியா ஜெனீவாப் பேச்சுக்குப் போகமாட்டம் எண்டு சொல்லியிருப்பினமே. அப்புடி ஒரு முடிவை வச்சுக் கொண்டு, சந்திக்க வந்த சமாதானத் தூதுவரிட்டை சிரிச்சுக் கொண்டே கை குடுத்துப் பேசின தம்பி சு.ப.வை நேரடியா சந்திச்சி நாலு சந்தேகத்துக்கு விளக்கம் கேக்கவேணும் எண்டு நினைச்சுக்கொண்டு செய்தி யாளரோடை செய்தியாளரா நிண்டுகொண்டிருந்தனான். ரெண்டு மணி நேரத்துக்கும் மேலாக அவை பேசிப் போட்டு ஊடகவியலாளர்களைச் சந்திக்க வந்திச்சினம். அந்தக் கூட்டத்துக்குள் என்னை எப்புடி அடையாளம் கண்டாரோ தெரியல்லை. சு.ப. வழமைபோல சிரிச்சுப் போட்டு அருகில வாங்கோ எண்டு கூப்பிடுமாப்போலை தலைய்யை மேலையும் கீழையுமாக ஆட்டினாருங்கோ. எனக்கு ஒரு பக்கம் பயமும்தான். சும்மாவே என்னைக் கண்டால் அவங்களுக்கு ஆகாது. அதிலையும், சு.ப. சிரிச்சார் எண்டால் ஏதோ வில்லங்கமும் இருக்கும். உப்பிடி ரெண்டு எண்ணங்கள் என்னைப் பயங் காட்டினாலும் கிட்டப் போயிட்டேனுங்கோ.

***சு.ப.*** *:- என்ன கந்தசாமி! கூட்டத்தோடை கூட்டமா வந்து நிண்டால் தெரியாதெண்டு நினைச்சீங்களோ?*

**கா.பூ** :- சா....சா...அப்புடியெல்லாம் நினைப்பேனா? அதுவும் உங்களைப் போய்..... என்று இழுக்கவும்.

***சு.ப.*** *:- சரி...சரி....நீங்கள் வன்னி வரைக்கும் வந்திருக்கியள் எண்டால் சும்மா கூட்டத்தோடை கூட்டமா நிண்டு போட்டுப் போறதுக்கு வந்திருக்க மாட்டியள். சொல்லுங்கோ, வேறு என்ன விஷயம்? (எண்டு அவரே துவக்கினாருங்கோ.)*

**கா.பூ** :- அதொண்டுமில்லையுங்கோ. உந்த ஜெனீவாப் பேச்சுக்குப் போகக்கூடிய நிலையிலில்லை எண்டு ஒரே போடாப் போட்டுப் போட்டியள் உதாலை சர்வதேச சமூகத்தின்ர பார்வை எப்புடி இருக்கும்?

***சு.ப.*** *:- இல்லாட்டில் மட்டும் சர்வதேச சமூகம் எப்புடிப் பாக்குதாம். உதாரணத்துக்கு - கனடா தடை செய்தது.*

**கா.பூ** :- அது வந்து உங்களைப் பயங்கரவாத இயக்கமாகப் பார்த்துத்தானே! (எண்டு கொஞ்சம் தணிஞ்ச குரலில் கேட்டன்)

***சு.ப.*** *:- ஆமா. பெரிய பொடலங்காப் பயங்கர வாதம். நீங்களே சொல்லுங்கோ, முப்பது வருஷத்துக்கு மேலாக ஆயுதம் தூக்கிப் போராடி வாற நாங்கள், ஒரு தற்கொலைத் தாக்குதல் நடத்தக் கூடாதா? பணம் வாங்கக் கூடாதா? பயிற்சிக்கு ஆட்களைப் பிடிக்கக் கூடாதா? சே...இதெல்லாம் செய்யாவிட்டால் என்ன இயக் கமும், போராட்டமும்? குறைஞ்ச பட்சம் உதுகளைக் கூட செய்ய உரிமை இல்லையெண்டால் ஒரு இயக்கமெண்டு சொல்லவே வெட்கமா இருக்கு. (எண்டு ரொம்பவும் சலிச்சுக் கொள்ளுறாருங்கோ.)*

**கா.பூ.** :- சரி...சரி..ரொம்பவும் சலிச்சுக் கொள்ளாதிங்கோ. உங்கட கிழக்குத் தளபதிகள் வன்னிக்கு வந்தாப் பிறகுதான் இரண்டாம் கட்டப் பேச்சுக்கே வருவம் எண்டு சொல்லியிருக்கியளே, என்ன உது புதுப் பிரச்சினையா இருக்கு?

***சு.ப.*** *:- உது புதுப் பிரச்சினை எண்டதை நான் ஏற்றுக்கொள்ளுறன். உதில்லாம வேற என்னதான் பிரச்சினை இருக்கு சொல்லுங்கோ பாப்பம். இப்ப பாருங்கோ, நாங்கள் தமிழ் மக்களின்ர தரப்பாகப் போற மெண்டால் அவை வாங்கோ எண்டதுக்கும் போங்கோ எண்டதுக்கும் திரிய ஏலுமே. அதுதான் எப்புடியாவது எங்கட டிமாண்டையும் காட்டத்தானே வேணும். அதுக்குத்தான் உது.*

**கா.பூ.** :- அப்ப உது சும்மா டிமாண்டுக்குத்தானா?

(சு.ப. :- அவரின்ர டிரேட்மார்க் சிரிப்பை சிரிக்கிறாருங்கோ.)

**கா.பூ.** :- அதிருக்கட்டும். உண்மையைச் சொல்லுங்கோ. கடல் வழியாகவோ இல்லாட்டில் ஆகாய வழியாகவோ வரவேணும் எண்டு விரும்புறியள்?

***சு.ப.*** *:- அவை எதாலையும் வரத்தேவையில்லை தெரியுமோ! அவை வந்து என்ன செய்யப் போகினம். அவைக்கு ஓடர் போறதே இங்க இருந்துதான்.*

**கா.பூ.** :- என்ன குழப்புறியள், இப்ப அவையள் வன்னிக்கு வரவேணுமெண்டது தானே உங்கட பிரச்சினை? அவை வந்தாச் சரிதானே?

***சு.ப.*** *:- ஆஹா...ஆஹா....எங்களுக்குத் தெரியுமே. உதுதான் பிரச்சினை எண்டு சொன்னால் ஏதாவது செய்து போடுவியள் எண்டதால்தான் இயல்பு நிலை தோற்றுவிக்கப்பட வேண்டுமென்றும் ஒரு குண்டைப் போட்டிருக்கிறம்.*

**கா.பூ.** :- சரி, இயல்பு நிலையெண்டதை நீங்கள் என்னவெண்டு நினைக்கிறியள்?

***சு.ப.*** *:- அது வந்து...வந்து...ஆ...தமிழ் மக்கள் தாக்குதல்களில படுகொலை செய்யப்படக்கூடாது என்பதுதான்.*

**கா.பூ.** :- அது சரிதான். மக்களின்ர பகுதிகளில கிளைமோர் குண்டு வெடிக்கிறதே, உதுகூட மக்கள் மீது நெருக்கடிகளை உண்டு பண்ணுமே?

***சு.ப*** *:- மக்கள் தானே கிளைமோர் வைக்கினம். அப்புடியெண்டால் அவையின்ர பகுதிக்கு அருகாமை யில வெடிக்காமல் வேறு எங்க வெடிக்கும்?*

**கா.பூ.** :- அப்புடியெண்டால் கிளைமோர்களை நீங்கள் வெடிக்க வைக்கயில்லை எண்டிறியளோ?

***சு.ப*** *:- உது என்ன பைத்தியக் கதை கதைக்கிறியள். எங்கட மக்கள் பொங்கியெழுந்து போராடினம்.*

**கா.பூ.** :- மக்கள் போராடினம் எண்டால் பிறகு எதுக்கு நீங்கள் ஒரு போராட்டம் நடத்திறியள்?

***சு.ப.*** *:- அது வந்து உந்தத் தாக்குதல்களை மக்கள் தான் செய்யினமெண்டதை வெளியால சொல்ல வேணுமெல்லோ. அதுக்காகத்தான். அது சரி, நீர் வன்னியில நிண்டுகொண்டு தான் உப்பிடிக் கதைக்கிறீர் எண்டதை மறந்து போட்டீர் போல...*

உதுக்கு மேலயும் உங்க நிண்டு கேள்வி கேட்டால் நல்லா இருக்காதெண்டிட்டு எஸ்கேப் ஆகிட் டேனுங்கோ.

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

## இந்த வாரம் உங்கள் பலன்

(27.04.2006 தொடங்கி 03.05.2006 வரை)

**சோதிட மாமணி தில்லை**

### இந்த வாரக் கிரக நிலை

மேடம் - சூரியன். மிதுனம் - செவ்வாய். கர்க்கடகம் - சனி. கன்னி - கேது.
துலாம் - வியாழன். கும்பம் - வெள்ளி. மீனம் - புதன், இராகு.
சந்திரன் மேடம், இடபம், மிதுனம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

**மேடம் :**
(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.) தொழில் நன்மை, காரியானுகூலம், பலவிதப் பேறு, உயர்ந்த எண்ணம், பெரியோர் சகாயம், குடும்பப் பேறு, உத்தியோகச் சுமை, மேலதி காரிகள் தொல்லை, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 03.**

**இடபம் :**
(கார்த்திகைப் பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை.)
தொழில் கஷ்டம், காரியத்தடை, மனக்கலக்கம், இனசனப்பகை, வெளியிட வாழ்க்கை, தூர இடப்பயணம், குடும்பப் பொறுப்பு, உத்தியோகப் பகை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 07.**

**மிதுனம் :**
(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்.)
தொழில் விருத்தி, மனக்குறை நீங்கும், உயர்ந்த நிலை, வெளியிட வாழ்க்கை, அந்நியர் நட்பு, குடும்ப நன்மை, உத்தியோகப் பயம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04.**

**கர்க்கடகம் :**
(புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்.)
தொழில் மேன்மை, பலவிதப் பேறு, மனமகிழ்ச்சி, பெரியோர் சகாயம், துயர் நீங்கும், குடும்பப் பொறுப்பு, உத்தியோக நன்மை, மேலதி காரிகள் உதவி, மாணவர் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05.**

**சிங்கம் :**
(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்.)
தொழில் மாற்றம், காரியானுகூலம், மறைமுக எதிர்ப்பு, பணவிரயம், குடும்பப் பாரம், இனசன நன்மை, கௌரவம், உத்தியோகச் சிறப்பு, மேலதிகாரிகள் கெடுதி, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 02.**

**கன்னி :**
(உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை.)
தொழில் கலக்கம், மனப்பயம், வெளியிட வாழ்க்கை, கடின உழைப்பு, கௌரவம், குடும்ப மகிழ்ச்சி, எதிர்பாரா செலவு, உத்தியோகச் சிக்கல், மனக்குழப்பம், மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் புதிய முயற்சி, இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05.**

**துலாம் :**
(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்.)
தொழில் சிறப்பு, பணவரவு, கடின உழைப்பு, பெரியோர் உதவி, தூர இடப்பயணம், மனக்குறைநீங்கும், குடும்பப் பொறுப்பு, உத்தியோக நன்மை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 03.**

**விருச்சிகம் :**
(விசாகத்து நாலாங் கால், அனுஷம், கேட்டை.)
தொழில் கலக்கம், செலவு மிகுதி, வீண் விரயம், முயற்சி பலிதம், பிரயாண மிகுதி, குடும்பக் கவலை, எதிர்பாரா செலவு, உத்தியோகக் கவலை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம் :- 05.**

**தனு :**
(மூலம், பூராடம், உத்தராடத்து முதற் கால்.)
தொழில் மேன்மை, பணவரவு, பெரியோர் சகாயம், வெளியிட வாழ்க்கை, மனக்குறை நீங்கும், குடும்ப நன்மை, உத்தியோக முயற்சி, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 03.**

**மகரம் :**
(உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை.)
தொழில் பலிதம், பணவிரயம், மனக்கஷ்டம், தெளிவற்றநிலை, குடும்பப் பாரம், உத்தியோக நன்மை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் உரிய இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 07.**

**கும்பம் :**
(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்.)
தொழில் அலைச்சல், மனப்பயம், கடன் தொல்லை, உறவினர் உதவி, தேகசுகக் கஷ்டம், முயற்சி பலிதம், உத்தியோகச் சிக்கல், மாணவர் கல்வி குழப்பம், புதிய கல்வி முயற்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04.**

**மீனம் :**
(பூரட்டாதி நாலாங் கால், உத்திரட்டாதி, ரேவதி.)
தொழில் மாற்றம், புதிய முயற்சி, எதிர்பாரா செலவு, கடன்படல், குடும்பக் கஷ்டம், தேகசுகம் பாதிப்பு, உத்தியோக மேன்மை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 01.**

Regd. as a News Paper at the G.P.O.(QD/06/NEWS/2006)


# இதய வீணை

தினமும்
மாலை 6.30 தொடக்கம்
இரவு 8.30 மணி வரை

அடக்கப்பட்ட மக்களின் உணர்வுகள் கருத்துக்களாய் கதைகளாய்... செய்திகளாய்... நமது காதுகளில்

கிழக்கு மாகாணம் 107.9, 104.5
வட மாகாணம் 92.2
கொழும்பு 105.6


நாடு முழுவதும் தென்றல் FM அலைவரிசையில்....

இதய வீணையின் பொதுத் தொடர்புகளுக்கு
இதய வீணை
த.பெ. இல - 1665
கொழும்பு.
தொலை பேசி :- 0773114208
Web - www. tirradio.com
E-Mail : idayaveenai@hotmail.com
info@tirradio.com

இலங்கையில் ஒலிபரப்பாகும்
இதயவீணை நிகழ்ச்சிகள் இப்பொழுது
ஐரோப்பிய நாடுகளில் வாழும்
எமது தாயக உறவுகளுக்காக
செய்மதி ஊடாகவும் ஒலிபரப்பப்படுகிறது

| | |
|---|---|
| Satellite : | HotBird - 6 |
| Location : | 13° East |
| Frequency : | 10971MHz |
| Polarity : | Horizontal |
| Symbol rate : | 27.500 Msb |
| FEC : | 3/4 |
| Transponder : | 133 |



## வாகன தரிப்பிடம்



இன்றுள்ள வாகன நெரிசலுக்குள் வாகனத்தைத் தரித்து நிறுத்த ஒரு இடத்தை தேடிக் கண்டு பிடிப்பதற்குள் வேண்டாமென்று ஆகிவிடுகிறது.

அதனை எல்லாம் போக்கத்தான் ஜெர்மனியில் 48 மீட்டர் உயரமான இரண்டு வாகன தரிப்பிட கோபுரங்கள் கட்டப்பட்டுள்ளன. கிட்டத்தட்ட ஒன்றன் மேல் ஒன்றான இதில் 400 கார்களை நிறுத்தலாமாம். காரினை கீழ்த்தளத்தில் நிறுத்தி விட்டுச் சென்றால் லிப்ட் மூலமாக கார்களைத் தானே இடங்களில் நிறுத்தி வைக்கும் தன்னியக்க இயந்திரங்கள் பொருத்தப்பட்டுள்ளனவாம். இதனால் வாகன நெரிசலுக்கு ஒரு தீர்வாக இது அமையும் என்று ஜெர்மனிநாட்டு போக்குவரத்து பொலிஸார் தெரிவித்து வருகிறார்கள்.

## பார்க்க மட்டும் - கைகளால்



## இலக்கு தவறாது



இங்குள்ளது நவீன தொழில் நுட்பத்தைப் பாவித்து செய்யப்பட்ட ஒரு கைத் துப்பாக்கியாகும். இதில் கணனி புரொசசர் பொருத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் ஒருவரை சரியாக இலக்கு வைத்து அவரை மட்டும் சுடலாம். இன்னொரு முக்கிய விடயம் இதில் துப்பாக்கி ரவைகள் போடுவதில்லையாம். இது மின் அலைகள் மூலமாகத்தான் தாக்குமாம். சரியாக ஒருவரை 3 சூடுகளை மிக வீரைவாக இதன் மூலம் சுடலாமாம்.

## இவ்வளவு பெரிசா



முதலைகள் ஊர்வன வகையைச் சேர்ந்த விலங்குகள் ஆகும். இது மிகப் பழமையான உயிரினங்கள் என்று ஆய்வாளர்கள் கருதி வருகிறார்கள். இவ்வுயிரினங்கள் கிட்டத்தட்ட 110 மில்லியன் வருட பழமையானதாம். அதிலும் இங்குள்ள முதலையார் 50-60 வருட கால பழைமையானவராம். இதன் நீளம் கிட்டத்தட்ட 11-12 மீட்டர் (37 - 40 அடி) ஆகும். இதன் தேறிய நிறை 8 தொன்களாகும் (17600 இறாத்தல்). மிகவும் பெரிய முதலை எனப் பெயரெடுத்த இதற்கு ஒரு பெரிய சோகம் என்னவென்றால் வேகமாக இதனால் தரையில் நகர முடியாதாம். நீரில் இவர் தன் வேகத்தைக் காட்டினாலும் தரையில் முடியாது உள்ளதாம். இதன் வாயைத் திறந்தால் 6 அடி உயரம் வரை வாய் திறக்குமாம். சகாரா பாலைவனங்களில் உள்ள சிறிய நீர் நிலைகளில் இது போன்றவை வாழ்ந்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

## அதிக விருதுகள்





பட்மின்டன் போட்டிகளில் அதிஉயர் விருதாக கருதப்படும் உபர் கிண்ணப் போட்டிகளில் வீரர்கள் தங்களுக்கு விருது கிடைத்து விட வேண்டும் என்று முழு மூச்சாக விளையாடுவார்கள். அந்தவகையில் இங்குள்ளவர் ஒன்பது தடவைகள் இக் கோப்பையினை வென றெடுத்த சீனா நாட்டு வீராங்கணை யாவார்.

## 28ஆவது பிறந்தநாள் வாழ்த்து

### திருமதி சின்னதம்பி சுவாசினிதேவி



கனடாவில் வசிக்கும் சின்னதம்பி சுவாசினிதேவி (சுவா தனது 28 ஆவது பிறந்தநாளை வெகு சிறப்பாகக் கொண்டாடினார். இவரை அன்புக் கணவன், அன்பு அம்மா நேசமலர், அன்பு அக்கா புவா, அன்பு அக்கா சிவா, அன்பு அத்தான் அன்ரன், மற்றும் மாமி, மச்சாள், மச்சான், உறவினர், நண்பர்கள் அனைவரும் இவரைப் பல்லாண்டு காலம் சிறப்புடன் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

தகவல் :- கணவன், இத்தாலி, 0039 3296496885.

## பெரிய நூலகம்



நூலகம் அதிகம் இருக்கும் நாடு

கல்வியறிவால் சிறந்து விளங்கும் நாடு என்று பலர் கணிப்பது வழமை. இங்குள்ளதும் ஒரு நூலகம் தான். மிகப் பெரிய நூலகம் என்ற பெருமையைப் பெற்றுள்ள இந்நூலகத்தில் கிட்டத்தட்ட 128 மில்லியன் புத்தகங்கள் உள்ளதாம். நூலகம் அமைந்துள்ள இடம் 853 கி.மீ. நீளமுடையதாம். இந்நூலகம் 1800 ஏப்ரல் மாதம் திறக்கப்பட்டது என்பதும் இன்னொரு விடயமாகும். அத்துடன் இதில் 12 மில்லியன் புகைப்பட தொகுப்புகளும் உள்ளனவாம்.

## மரம் நடுவோம்



மரம் நடுவோம் என்று காட்டுக்கத்து கத்தினால் சரிவராது என்று அமெரிக்க நாட்டவர்கள் பெரிய பெரிய மரங்களை எல்லாம் பூமியோடு பெயர்த் துக் கொண்டு சென்று வேறு இடங்களில் சென்று அதனை நட்டு வைப்பார்களாம். அந்த வகையில் இங்குள்ளது ஒரு மிகப் பெரிய மரத்தினை லொறி ஒன்றில் எடுத்து செல்கிறார்கள். 17.6 மீட்டர் உயரமும், 31.6 மீட்டர் அகலமும் உடைய இம்மரத்தை எவ்வளவு அழகாக கொண்டு செல்கிறார்கள் பார்த்தீர்களா?



இப்பத்திரிகை கொழும்பு-06, வெள்ளவத்தை நெல்சன் பிளேஸ், 16 A ஆம் இலக்கத்தில் டிடி என்டர்பிரைசஸ் (பிரைவேட்) லிமிடெட் ஸ்தாபனத்தால் நாவலையில் உள்ள சமனல கிராபிக்ஸ் அச்சகத்தில் ஏப். 27 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.